(ALL RIGHTS RESERVED.)
இந்தப் பத்திரிகைக்குரிய விஷயங்களை அனுமதியின்றி ஒருவரும் ப்ரசுரிக்கக்கூடாது.

பிழைக்கும் வழி

PRACTICAL LIFE.

ஜி. ஏ. வைத்யராமன், பி.ஏ., பத்ராதிபர். G. A. VaidyaRaman, B.A., EDITOR.

புஸ்தகம் 6. Vol. 6. | ப்ரமாதி ... JANUARY 1914. | ஸஞ்சிகை 1. No. 1.

பொருளடக்கம்.

வியாஸங்கள்—

	பக்கம்.
இலுப்பை மரம் —த. ப. ஸுப்பராயர்	... 2
ட்ரங்க் ரோடுகளின் சீர்வாதம்	.. 5
வெள்ளரி சாகுபடி செய்தல்	... 7
ஜலம் பாய்ச்சுதல்	... 8
சென்னை ப்ரொவின்ஷியல் கோவாபரேடிவ் கான்பரென்ஸ்	... 13
தஞ்சாவூரில் கோவாபரேஷன்	... 16
கைத்தொழில் முன்னேற்றம்	.. 17
இந்தியன் இன்டஸ்ட்ரியல்கான்பரென்ஸ்	18
வ்யாபார காங்கரெஸ்	... 19
ஸன்மார்க்க போதனை	... 21
மாணவர்களுக்கு வீட்டு அப்யாஸம்	... 22
டெபாஸிட் பணத்தைத் திருப்பிக் கொடுப்பது	... 25
இன்ஷூரென்ஸ் பாலிஸியை ஜப்தி செய்தல்	... 26
ஸுகாதாரத்தைப்பற்றிய சில தவறான கொள்கைகள்	... 29
ஜோதிஷ ஜாலக்கணக்கு	... 33
ஏழை ஸ்த்ரீகளுக்கு ஏற்ற சிறு தொழில்கள் —டி. ஸி. வி. ரமணய்யா	... 37
மிஸ்டர், ஜி. ஸுப்ரமணியய்யர்	... 41
விவஸாயப்பகுதி	... 2
கோவாபரேஷன் பகுதி	.. 13
வ்யாபாரப்பகுதி	... 17
வித்யாவிஷயப் பகுதி	... 21
வ்யவஹாரப் பகுதி	... 25
ஸுகாதாரப் பகுதி	... 29
பையன்கள் பகுதி	... 33
ஸ்த்ரீகள் பகுதி	... 37
ஜீவிய சரித்ரம்	... 41
சிறு கதைகள்	... 43
பகுதிக்குறிப்புகள்	... 45
மாஸ வர்த்தமானம்	... 49
காலஸ்திதி	... 55
பஞ்சாங்கம்	... 56

CONTENTS.

Articles—

	PAGES.
ILLUPPAI TREE —T. P. Subbarayar	... 2
MAINTENANCE OF TRUNK ROADS	... 5
HOW TO GROW CUCUMBERS	... 7
WATERING	... 8
THE MADRAS PROVINCIAL CO-OPERATIVE CONFERENCE	... 13
CO-OPERATION IN TANJORE	.. 16
INDUSTRIAL PROGRESS	... 17
THE INDIAN INDUSTRIAL CONFERENCE	... 18
THE COMMERCIAL CONGRESS	... 19
MORAL INSTRUCTION	... 21
HOME WORK FOR PUPILS	... 22
RETURN OF DEPOSIT MONEY	... 25
ATTACHING A POLICY OF INSURANCE	... 26
SOME ERRORS IN HYGIENE	... 29
A TRICK IN ASTROLOGY	... 33
SMALL INDUSTRIES FOR POOR WOMEN —T. C. V. Ramanaiyar	... 37
MR. G. SUBRAMANIA AIYAR	... 41
The Agricultural World	... 3
The Co-operative World	... 13
The Commercial World	... 17
The Educational World	... 21
The Legal World	... 25
The Sanitary World	... 29
The Boys' World	... 33
The Ladies' World	... 37
Biography	... 41
Short Stories	... 43
Departmental Notes	... 45
Diary of the Month	... 49
Season Report	... 55
Calendar	... 56

G. A. VaidyaRaman & Co., 3 & 4, Sunkurama Chetti Street, Georgetown, Madras.
ஜி. ஏ. வைத்யராமன் அண்டு கம்பெனி, 3 & 4. சுங்குராம செட்டித் தெரு, ஜார்ஜ்டவுன், மதராஸ்.

3000 இந்தியர்களுக்கு

நல்ல ஆதாயமுள்ள வேலை.

கான்பூர் உல்லன் மில்ஸ் கம்பெனியார் தங்களுடைய மில்லுகளில் மூவாயிரம் இந்தியர்களுக்கு தக்க சம்பளமுள்ள வேலை கொடுத்து வருகிறார்கள். ஜனங்கள் ஏராளமாய்

லாலிம்லி

கலப்பில்லாத கம்பளித் துணி

வாங்குகிறபடியால் அவ்வளவு க்ராக்கிக்கும் ஸமாளிப்பதற்காக இந்த மில்லுகள் வருஷம் முன்னூற்றறுபத்து நாளும் வேலை செய்து கொண்டிருக்கின்றன

லாலிம்லி துணிகள் இந்தியர்களால் இந்தியாவிலேயே செய்யப்படுகின்றன. இது இந்த தேசத்துக்கே ஒரு கீர்த்தியாகும்.

அடுத்த தடவை நீங்கள் துணிகளுக்கு ஆர்டர் செய்யும்போது கான்பூர் உல்லன் மில்ஸுக்கு உங்கள் ஆர்டரை அனுப்பவேண்டும் என்று உங்களுக்குத் தோன்ற வில்லையா?

கான்பூர் வுல்லன் மில்ஸ் கம்பெனி, லிமிடெட்,
டிபார்ட்மெண்ட் நம்பர் 25, கான்பூர்.

CAWNPORE WOOLLEN MILLS Co., Ld.

Dept. No. 25., Cawnpore.

ப்ளானல்கள் ஸெர்ஜுகள், ட்வீடுகள், சட்டைத்துணிகள் வேலைக்காரர்களுடைய துணிகள் குதிரைக்குப் போடும் துணிகள் முதலியவைகளின் மாதிரிகளுக்கும் விலை ஜாப்தாவுக்கும் எழுதுங்கள் அவை இனாமாக அனுப்பப்படும்.

SUPPLEMENT TO "THE PRACTICAL LIFE."
"பிழைக்கும் வழி"க்கு அனுபந்தம்.

THE CONGRESS, CONFERENCES, CONVENTIONS AND LEAGUES OF 1913
1913-ம் வருஷத்திய காங்க்ரெஸும் கான்பரென்ஸுகளும்.

Dewan K. Chandanmal,
President, Social Conference.
திவான். கே. சந்தன்மால்,
ஸோஷல் கான்பரென்ஸ்
ப்ரெஸிடெண்ட்.

Nawab Syed Mahomad,
President, National Congress.
நவாப் ஸையத் மகமத்,
நாஷனல் காங்க்ரெஸ்
ப்ரெஸிடெண்ட்.

Lalubhai Samaldas,
President, Industrial Conference.
லல்லுபாய் ஸமால்தாஸ்,
இண்டஸ்ட்ரியல் கான்பரென்ஸ்
ப்ரெஸிடெண்ட்.

Hon. Mr Justice Shah Din, *President,*
Mahomadan Educational Conference.
ஜஸ்டிஸ் ஷா டின்,
மகமதிய கல்வி கான்பரென்ஸ்
ப்ரெஸிடெண்ட்.

Sir Ibrahim Rahimatullah,
President, Muslim League.
ஸர் இப்ரஹிம் ரஹிம்துல்லா,
மஸ்லீம் லீக்
ப்ரெஸிடெண்ட்.

Mrs. Besant, *President,*
Theosophical Convention
மிஸஸ் அனி பெஸண்ட்,
தியஸாபிகல் கன்வென்ஷன்
ப்ரெஸிடெண்ட்.

பிழைக்கும் வழி

நூல் நிலையம், சென்னை-600

வித்யா விஹாரிணியும் சேர்ந்தது.

PRACTICAL LIFE.

WITH WHICH IS INCORPORATED THE VIDYA VIHARINI.

ஜி. எ. வைத்யராமன், பி. எ., பத்ராதிபர்.

G. A. VaidyaRaman, B.A., EDITOR.

புஸ்தகம் 6. Vol. 6. | ப்ரமாதீச ஹூ தைமீ, JANUARY 1914. | ஸஞ்சிகை 1. No. 1.

Practical Life.

A popular illustrated Tamil monthly magazine of general information and instruction devoted largely to agriculture, trade, industry, economics, story, biography, citizenship, and popular, scientific and technical education.

'Practical Life' is subscribed for by Government for use in the agricultural stations and by several Local Boards and Municipalities for the use of the teachers and pupils in the schools under their control.

RATES OF SUBSCRIPTION POST FREE.

	Inland.			Foreign.		
	Rs.	A.	P.	Rs.	A.	P.
Per annum ...	4	0	0	6	0	0
Single copy ...	0	6	0	0	8	0
Sample copy ...	0	4	0	0	6	0

RATES OF ADVERTISEMENT.

1 Page ...	5	0	0	per month.
½ do ...	2	8	0	do
¼ do ...	1	4	0	do
1/10 do ...	1	0	0	do

The above rates are all *net* and subject to no discount whatever. Orders should be accompanied with advance

Notice to Contributors:—The Editor solicits contributions on subjects relating specially to agriculture, trade, industry and popular, scientific and technical education. Articles should be written in plain colloquial Tamil on one side of the paper only and on half margin. Accepted articles will be paid for on publication. It will be understood that the publishers may at their discretion republish in book form articles which have been paid for at the time of publication in the journal.

No money should be paid to any Agent. All remittances and letters should be addressed to the Publishers, *Messrs. G. A. VaidyaRaman & Co., 3 & 4, Sunkurama* Chetty Street, Georgetown, Madras.

பிழைக்கும் வழி.

முக்யமாய் விவஸாயம், வ்யாபாரம், கைத்தொழில், பொருளாதாரம், கதை, ஜீவ்ய சரித்ரம், ப்ரஜா லக்ஷணம், வித்யா விஷயங்கள் அடங்கிய ஸகலருக்கும் உபயோகமான ஒரு மாஸாந்தத் தமிழ்ப்பத்ரிகை.

விவஸாயப் பண்ணைகளின் உபயோகத்துக்காக கவர்ன்மெண்டாரும், ஸ்கூல்களில் உபாத்யாயர்கள், மாணுக்கர்கள், இவர்களுடைய உபயோகத்துக்காக பல லோகல் போர்டுகளும் முனிஸிபாலிட்டிகளும் 'பிழைக்கும் வழி'யை வாங்கிவருகிறார்கள்.

தபால் சார்ஜ் உள்பட சந்தா விவரம்.

	உள் நாடு.			அந்ய நாடு.		
வருஷம் 1 க்கு ...	4	0	0	6	0	0
தனிப்ரதி ...	0	6	0	0	8	0
மாதிரி காபி ...	0	4	0	0	6	0

சந்தாப்பணத்தை ஒரு ஏஜெண்டினிடத்திலும் கொடுக்கக்கூடாது. ஸகல பணத்தையும் எங்களுக்கு நேரில் அனுப்பிவிடவேண்டும்.

விளம்பர விகிதங்கள்.

1 பக்கத்திற்கு	மாஸம்	ஒன்றுக்கு	5	0	0
½ பக்கத்திற்கு	,,	,,	2	8	0
¼ பக்கத்திற்கு	,,	,,	1	4	0
1/10 பக்கத்திற்கு	,,	,,	1	0	0

வ்யாஸம் எழுதுகிறவர்கள் கவனிக்கவேண்டியவை

விவஸாயம், வ்யாபாரம், கைத்தொழில் விஷயங்களைப்பற்றி வ்யாஸங்கள் தேவை. அவைகள் ஒப்புக்கொள்ளப்பட்டால் ப்ரசுரமானதும், எழுதினவர்களுக்கு தக்க ஸம்பாவனை செய்யப்படும். ஒவ்வொரு வ்யாஸத்தையும் கடுதாசியின் ஒரேபக்கத்தில் ஒருபாதியை விட்டு மறுபாதியில் மட்டும் எழுதவேண்டும். பேசும் தமிழ்தான் தேவை. கடினமான தமிழ் உதவாது.

ஸம்பாவனை செய்திருக்கும் வ்யாஸங்களை நாங்கள் எங்கள் இஷ்டப்படி எந்த விதம் வேணுமானாலும் மறுபடி ப்ரசுரிக்க அதிகாரமுண்டு என்பதை நேயர்கள் அறியவேணும்.

ஜி. எ. வைத்யராமன் அண்ட் கம்பெனி,
3, & 4, சுங்குராம செட்டித் தெரு, ஜார்ஜ் டவுன்,
மதராஸ்.

The Agricultural World.

விவஸாயப் பகுதி.

ILLUPPAI TREE

BY
T. P. SUBBARAYAR.

இலுப்பை மரம்.

இதன் பயன்:—இலுப்பை மரததின் கனியிலிருந்து உள்ளிருக்கும் கொட்டையை யெடுத்து வெயிலில் காயவைத்து அதன் மேல்புறத்திலிருக்கும் கெட்டியான தோல்களை தடிக் கம்புகளா லடிர்ந்து எடுத்துவிட்டு உள்ளிருக்கும் பருப்பை விஸ்தாரமான வெளியிலுள்ள விடத்தில் காயவைத்து, மரச்செக்குகளிலோ, யந்ரச்செக்குகளிலோ போட்டு நெய்யாக்கினால், அந்நெய் எந்த விடங்களிலும் விளக்கெரிப்பதற்குதவும். அந்நெய்யில் ஏழைகள் பலகாரங்களும் சுடுகிறார்கள்; ஆனால் செக்கிலிருந்து எடுத்துவந்த இலுப்பை நெய்யை அடுப்பிலோர் பாத்ரத்தில் ஊற்றிக்கொஞ்சம் புளி போட்டுக காய்ச்சி விட்டுபலகாரங்களுக்கு உபயோகிப்பதுதான் நலமாகும். அப்படிக்காய்ச்சாது செக்கிலிருந்து எடுத்தபடியே வைத்துப் பலகாரங்களைச் செய்துதின்றால் அடிநாக்கில் ஓர்விதக் காரல் (கருணைக்கிழங்கைப்போல்) உண்டாகும். அதனால் நாக்கில் அரிப்புமுண்டாகும். ஆகையால் செக்கிலிருந்து எடுத்தபடியே பக்ஷணங்களுக்கு உபயோகிக்கப் படாது. செக்கிலிருந்தெடுத்த இரண்டு மூன்று நாட்களுக்குள் மாட்டின நெய்யைப்போலுறைந்துபோகும். வருஷக்கணக்கில் வைத்திருந்தாலும் கெடாது. நாம் தின்பண்டங்களுக்கு உபயோகிக்கும்போது முதலில் காய்ச்சிக்கொண்டு பிறகு பலகாரங்களை அதில் செய்யலாம். ஒரே தடவையில் காய்ச்சிவைத்துக் கொள்ள வேண்டியதில்லை. தீபங்களுக்கு உபயோகிக்கின் அது ப்ரகாசித்தெரிகிறது.

இலுப்பைப் பிண்ணாக்கு.

இலுப்பைப் பருப்பை யாட்டிய பிறகு ஸத்தாகிய நெய் எடுபட்டுச் சக்கையான பிண்ணாக்கு மனிதருக்கு விசேஷ உபயோகமாகிறது. எண்ணெய் தேய்த்துக்குளிக்கும் வழக்கமுள்ளவர்கள் பலருக்கும் இப்பிண்ணாக்கே அவ்வெண்ணெய்யைப் போக்கிக்குளிக்க உபயோகப்படுகிறது. சீயக்காயிட்டுக் குளிப்பதைவிட இலுப்பைக் கட்டி தேய்த்து ஸ்நானம் செய்வதில்சில அதிக குணங்களிருக்கின்றன. தேகத்திலுள்ள சொறி, சிரங்குகளை யகற்ற மிக்க வலிமையுள்ளது. மேலும் பிண்ணாக்கை யடுப்பு நெருப்பிலிட்டு சற்றுச்சுட்டு, அரைத்துப்பூசி குளித்தால் தோல் ஸம்பந்தமான ஸகல அரி சொரி சிரங்குகளும் அற்றுப்போகும்.

இலுப்பைப் பூ.

இப்பூ மிக்க வாஸனையுள்ளது. இதில் ஸ்வல்பம் தேனுண்டு. அதைச் சிறுவர் சிறுமிகள் மரத்தடியில் நின்று விழுந்தவுடனெடுத்துப் பூவின் அடிப்புறம் த்வாரத்தின் வழியே தேனைச்சாப்பிடுவார்கள். காடிக்கு இந்தப் புஷ்பத்தில் வெகு ப்ரியம். ஏழை ஜனங்களிப் பூவைக்கூட்டி யெடுத்துப்போய்க் காயவைத்து ரஸம் செய்து சாப்பிடுகிறார்கள். "ஆலையில்லா வூருக்கு இலுப்பைப்பூச் சர்க்கரை" என்ற பழமொழியால் சர்க்கரை ஸ்தானத்திலுபயோகிப்பது முண்டாம். சிறு பெண்கள் இலுப்பைப்பூவை கயிறுகளில்கோத்து ஓர் மணிபோல் விளையாட்டாக சில நேரம் அணிந்திருப்பதுண்டு.

இலுப்பை யிலை.

சிறிய மாவிலை போன்ற மேற்படி யிலையை

வெள்ளாடுகளுக்கு ஆகாரமாக உபயோகிப்ப துண்டு. இதின் சருகுகள் உதிரும்போது குடியானவர்கள் அவைகளைச் சேர்த்து தங்க ளுரக்குழியில் எருவாகச்சேர்ப்பார்கள். அது நல்ல உரம் என்பதில் என்ன தடை? அதின் சிவந்த தளிர்களை வெட்டுக்காயங்களுக்கு மருந்தாக உபயோகிப்பதுமுண்டு.

இக்கொழுந்துகளை யிடித்து தண்ணீரில் வேகவைத்து அந்தச் சாயத்தில் பனையோலைக் குருத்துகளை நனைத்துச் சிவப்புச் சாயமேற் றிப் பெட்டிகள் முடையலாம்.

இலுப்பை மரம்.

இம்மரம் மண்ணின் வளப்பத்திற்கு தக்க படி யுயரும். மரம்மழமழவென்றிராது. அநே கம் மொக்குகளுருண்டை யுருண்டையாக அநேக விடங்களில் இருக்கும். பாலுள்ள மரங்களி லிதுவுமொன்று. மரமுறுதியுள்ளது; அதைக்கொண்டு வீட்டிற்குபயோகித்து மேற் கூரைகள் கட்டுவார்கள். ஸ்தம்பங்களாகவும உபயோகிப்பார்கள். பருமனான மரங்களைப் பலகையாக அறுத்துக் கதவுகள் சேர்த்தும், பலகை மச்சுகளுக்குப்போட்டும், வருகிறார் கள். ஏழுஎட்டடிகளுக்கதிகம் நீண்ட பலகை களையுபயோகிக்கின் வளையும். மூன்றங்குலம் கனம் வைத்து அறுக்கப்பட்ட பலகைகள் வளையா.

இப்போது வந்திருக்கும் அர்யநாட்டு இரும் பாலைகளுக்கு முன்பு மரவாலைக்கதிர்கள் இம் மரங்களாலேயே செய்யப்பட்டு வந்ததுண்டு. அவ்வாலையின் பாங் மரங்களுக்கும், விச்சு மரங்களுக்கும் உபயோகப்படடு வந்தது. இம்மரம் விறகுக்கும் வெகு ச்லாக்யம். செங் கல் காளவாய்களுக்கு வெகுவாய் மேல்வாது கள் உபயோகப்படும். இம்மரம் எரியும்போது ஓர்வித ஸுகந்தமு முண்டாகும்.

20-வருஷங்களுக்கு முன்வரை யிம்மரத்தை அதிகம் கவனித்து வந்தார்கள். இம்மரத்தின் எந்த அம்சங்களும் மனிதருக்குபயோகப்படு வதால் பல விடங்களில் க்ராமங்களில் தோப்பு களாக வளர்த்துப்பலனையடைந்து வந்தார்கள். தஞ்சை ஜில்லா மாயவரம் தாலூகா வைத்தீச வரன் கோயில் தேவஸ்தானத்திற்கு இத்தோப் பால் வருஷ வருமான மதிகம். ஸ்வாமி யின் கர்ப்ப க்ருஹம் தவிர மற்ற விடங் களெல்லாம் இலுப்பை நெய்யே விளக்குகளுக் குபயோகிக்கப்பட்டு வந்தது. உத்ஸவாதி விசேஷங்களில் தீவட்டிகளுக்கும் இந்நெய் தான் வார்த்தெரிக்கப்பட்டது. இந்நெய் யின் விலையோ மிகக்குறைவு. 16 பக்காப்படி கொண்ட ஆடம் ஒன்றுக்கு ரூபா 2-8-0 முதல் 4 ரூபாய் வரையிலிருந்தது. அதே மாதிரி மன்னாகுடிக்குத் தெற்கேயுள்ள பங் காளுடென்னும் ஊரிலுள்ள கோயிலுக்கும் பல இலுப்பைத் தோப்புகளுண்டு. அத்துடன் அவ்வூரிலுள்ள எந்தக்குடியானவர்களின் ஸொந்த பூமியிலுண்டானாலும் அந்த மரங்கள் ஸ்வாமிக்கே ஸொந்தம். குடியானவர்கள் அதை எவ்விதமாகவு முபயோகிக்ககூடாது. அழிக்கவும் கூடாது. கோயி லபிஷேகத் திற்கு மட்டில் எண்ணெய் வாங்குவார்களே தவிர மற்றவைகளுக்கு இந்நெய்தான். உப யோகப்படுகிறது. செலவுக்காகும் நெய் போக பாக்கியாகும் நெய் விற்கப்படுவதுண்டு.

இப்படிப்பட்ட பயன்தரும் வ்ருக்ஷங்களை யிப்போது கவனியாமலே மேற்படி தோப்பு களையழித்தே போட்டார்கள். திருவிடை மருதூருக்கு ஸமீபமான ஓர் க்ராமத்தின் ஆற்றோரம் படுகையிலுள்ள மூங்கில் தோப்பில் 20 வருஷங்களுக்கு முன்வரை குறைந்தது நூற்றைம்பதாடம் இலுப்பை நெய்க்குக் குத் தகைவிடுவதுண்டு. மூங்கில் தோப்பி லிலுப் பைநெய்க்குக் குத்தகை யேற்படுவ தாச்சரிய மென்னலாம். அக்காலத்தில் செழித்தோங்கி யிருந்த இலுப்பைத தோப்பின் பழக்காலத்

தில் அநேகமாயிரம் பழம் தின்னும் வௌவால்கள் அப்பழங்களை யிரவில் தின்று விடியு முன்பே இம்மூங்கிற்றோப்பில் வந்தடைந்து இலுப்பைக் கொட்டைகளை வெளியில் போடுவதிலிருந்து இத்தோப்புக்காரருக்கு இவ்வாதய முண்டாகி வந்தது. இப்போது இலுப்பைத் தோப்புகளுமில்லை, மூங்கில் தோப்பில் இலுப்பை முளைத்து ஆதாயமுமில்லை.

இலுப்பைத்தோப்பு உண்டாக்குதல்.

சரளைக்கற்களால் கெட்டிப்பட்டிருக்கும் பூமியும், வெண்சுக்கான் கற்களுடன், கால் வைத்தால் காலைத்தின்னும் மண்ணுள்ள, பூமியும் இம்மரமுண்டாவதற்கு லாயக்குப்படா. மற்ற பூமிகளில் மரம்செழித்து வளரக்கூடும். இப்படிப்பட்ட பூமிகளில் 25 முதல் 30 அடி வரை இடைவெளி போட்டு ஒரு கஜம் நீளம், அகலம், ஆழமான குழிகளைத்தோண்டி ஒரு வாரம் வரையாறப் போட்டிருந்து பிறகு பழந் தின்னும் வௌவாலால் தின்று வெளித்தள்ளப்பட்ட இலுப்பை முத்துகளை குழிக்கு இரண்டு முத்துகள் வீதம் நான்கங்குலம் மண் மூடும்படி புதைத்து முளை வெளிக் கிளம்பும்படி அம் முத்துகளின் வெளுப்பான வரையை மேலே வைத்துத்தண்ணீர் வார்த்து வரவேண்டும். ஒரு மாஸத்திற்குள் ஒவ்வொரு முத்தும் பழுதொன்று மில்லாது முளைத்து 4, 6, அங்குலங்கள் நீண்டு வெளியே வரும். அது முதல் ஒன்றிரண்டடிகள் உயரும் வரை அதிகம் வெயில்படாமலும், ஆடு முதலிய ம்ருகங்கள் தின்றுவிடாமலும், தென்னையின் கீற்றுக் குடலைகளாலும், முட்களாலும் செடியின் சுற்றுப்பக்கத்தில் மறைத்துக் கட்டி வைக்க வேண்டும். ஒரு கஜம் உயரம் வரையில் இரண்டு மூன்றுநாட்களுக்கு ஒருதரம் தண்ணீர் வார்த்துவரவேண்டும். ஐந்தடி யுயரும் வரையில்மாதமிரண்டுதடவைசெடியின் கீழ்மண்ணை வேர்களறுவண்ணம் கெல்லிக்கொடுத்து வரவேண்டும். நல்ல உணவுக ளில்லாவிட்டால் எந்த உயிர்கள்தான் புஷ்டியாய்ச் செழித்து வளரும்? அதுபோலவே இவ்விலுப்பைக்கும் விலை யேறப்பெற்ற எருவையிடாவிடினும் ஆற்று வண்டல், குளத்து வண்டல், இலை மடித்த வண்டலிவைகளையாவது கொடுத்து வரின் மரம் செழிப்பாய் வரும். தோப்பைச் சுற்றி அவச்யம் வேலிகட்டி ஆடு, மாடு, மனிதர் முதலிய எதுவும் நடமாட்டமில்லாமல் செய்து வைகவேண்டும். இவைகளின் பழக்கமதிகப்படின் மரங்கள் வ்ருத்தியாகா. மரத்தினிலைகளையோ, கிளைகளையோ கையினுலும், ஆயுதங்களினுலும், கிள்ளவும் வெட்டவும் கூடாது. வெட்டினுல் அதின்வழியே காற்று மழைதண்ணீ ருள்ளிறங்கி மரத்தின் உள்ளே பொறையென்கிற பொத்தல் கண்டு சீக்ரத்தில் மரங்கள் நாசமடைந்து போவதோடு, வேலைக்குமுதவாது போய்விடும். மரம் முதிர்ந்து போனபிறகு மரத்தின் வேர் வெளியே தெரியாதபடி மண்ணை யிட்டு மூடிவரவேண்டும்.

நன்றாய்ச் செழித்துள்ள மரங்கள் வருஷமொன்றுக்குக் குறைந்தது 5 முதல் 8, 10 ரூபாய் வரையில் வருமானம் கொடுக்கும். இம் மரம் செடிவைத்த 7, 8, வருஷங்களுக்குள் க்காய்த்துப்பலனைக் கொடுக்கும். நமக்குத்தெரிந்தமட்டில் இலுப்பை மரங்கள் 50, 60, 70 வருஷங்களைத் தம்மாயுளாக உடையன. 4,5, அடியுயரும்வரை இத்தோப்பின்கீழ் பூமியில் வான் பயிர் ஸாகுபடி செய்வதற்கும் விரோதங்களில்லை. அப்பயிர் செய்யப்படுவதால் இச்செடிகளுக்கும் விசேஷ உபயோகமுமுண்டு.

இப்படிப் பயனளிக்கும் இலுப்பை மரத் தோப்புகளை யடியோடழித்து விட்டபடியால் இலுப்பை நெய்யகப்படுவதே துர்லபமாகி விட்டது. தேய்த்துக்குளிக்க இலுப்பைக் கட்டியும் அப்படியே. இப்போது இலுப்பைப்

பிண்ணாக்கின் விலை வெல்லத்தின் விலைக்கு ஸரியாக இருக்கிறது.

இத்தோப்புகளை வ்ருத்தி செய்யாத பெரிய குடித்தனக்காரர்களும், ஆலயங்களின் தர்மகர்த்தர்களும் வீட்டிற்குதவும் விறகிற்கும், கோயில் மடைப்பள்ளிக்கு விறகுக்கும், பழுதாகப்போயிருக்கும் தேர்க்கால், மேல்தட்டுகளுக்கும் மரங்களுக்குத் திண்டாடி பலக்குறைவான வேறுமரங்களை அதிக விலைகொடுத்து வாங்கியுபயோகிக்கிறார்கள். ஓட்டு வீடுகளுக்கு உபயோகிக்கவும் மரங்களின்றித் திண்டாடுகிறார்

த. ப. ஸுப்பாராயர்.

MAINTENANCE OF TRUNK ROADS.

ட்ரங்க் ரோடுகளின் நிர்வாகம்.

சென்ற நவம்பர் மாஸம் சென்னை லெஜிஸ்லெடிவ் கௌன்ஸில் கூடினபோது ஆனரபிள் ராவ்பகதூர் ராமாநுஜாசார்யார் ட்ரங்க் ரஸ்தாக்கள் அதாவது ஒரு ஜில்லாவிலிருந்து இன்னொரு ஜில்லாவுக்குப் போகும் ரோடுகளினுடையவும் ஒரு ஜில்லாவிலேயே தாலூகா ஹெட் க்வார்ட்டர்களிலிருந்து மற்ற முக்யமான இடங்களுக்குப் போகும் ரோடுகளினுடையும் நிர்வாகத்தைப்பற்றி ஒரு தீர்மானங்கொண்டுவந்தார். அந்தத் தீர்மானமாவது:—ட்ரங்க் ரோடுகளின் நிர்வாகத்துக்குப் பணம் செலவழிப்பதாகிய கடமை இப்போது லோகல் பண்டுக்கு இருப்பதை கவர்ன்மெண்டார் மாற்றி அந்தக் கடமையைத் தாங்களே ஏற்றுக்கொண்டு, லாண்ட் ஸெஸ் பணத்தை அந்தந்த ப்ரதேசத்துக் கார்யங்களுக்கு உபயோகிக்கும்படி செய்யவேண்டும். இந்தத் தீர்மானத்தை ப்ரேரிக்கையில் ஆனரபிள் ராவ் பகதூர் ராமாநுஜாசார்யார் இப்போதுள்ள ஸெஸ் ரூபாய்க்கு ஒரு அணாவாக இருப்பதை ரூபாய்க்கு இரண்டணாவாக உயர்த்துவதற்கு டிஸ்ட்ரிக்ட் போர்டுகளுக்கு அதிகாரம் கொடுக்கும்படி லோகல் போர்ட்ஸ் ஆக்ட்டை மாற்றவேண்டுமென்று ஒரு ப்ரேரணையிருந்து வருகிறதென்றும், இது விஷயமாய் நிலஸ்வான்கள் ரொம்ப கவனம் செலுத்திவருகிறார்கள் என்றும் இது ஸம்பந்தமாக லாண்ட் ஸெஸ்ஸினுடைய சரித்ரம் கவனிக்கத்தக்கதென்றும் சொல்லி அதன் சரித்ரத்தைப்பின் வருமாறு ஸங்க்ரஹமாய்ச் சொன்னார்.

லாண்ட் ஸெஸ்ஸின் சரித்ரம்.

1853-ம் வருஷத்தில் தென்னார்க்காடு ஜில்லா கலெக்டர் அந்த ஜில்லாவில் ரோடுகள் போடவும் செப்பனிடவும் வேண்டி ஒரு தனி ரோடு பண்டு ஏற்படுத்த வேண்டுமென்றும், நிலவரியில் ஒரு பாகத்தை அந்த பண்டுக்காக எடுத்து வைக்கவேண்டுமென்றும் ப்ரேரணை செய்தார். அதன்படியே நிலவரியில் 100-க்கு 2-பாகம் ரோடு பண்டென்று தனியாக எடுத்து வைக்கப்பட்டது. அப்போது பெரிய ரோடுகளையும் பெரிய பாலங்களையும் கவர்ன்மெண்டாரே பார்த்துக் கொள்கிறதென்று ஏற்பாடு செய்யப்பட்டது. சில வருஷங்களுக்குப் பிறகு ரூபாய்க்கு 3-பை வீதம் கல்வி வரிபோடுவதற்காக ஒரு சட்டம் செய்யப்பட்டது. 1856-ம் வருஷத்தில், ட்ரங்க் ரோடுகளையும் ஜில்லாக்களில் உள்ள சில ரோடுகளையும் கவர்ன்மெண்டாரே தங்களுடைய ஸொந்த செலவில் போட்டு நிர்வகித்து வரவேண்டுமென்று ஒரு ஆர்டர் பிறப்பித்தார்கள். பிறகு 1866-ம் வருஷத்தில் ரூபாய்க்கு அரையணா வீதம் ரோடு ஸெஸ்வஸூலிப்பதற்காக ரோடு ஸெஸ் ஆக்ட் பாஸ்செய்யப்பட்டது. இந்த ஸெஸ் ஜமீன்தார்களிடமிருந்தும் இனாம்தார்களிடமிருந்தும் வஸூலிக்கப்படாமல் ரயத்துவாரி நிலஸ்வான்களிடமிருந்து மாத்ரம் வஸூலிக்கப்பட்டது.

1871-ம் வருஷத்தில், கல்வி ஸெஸ் ஆக்ட்,

ரோடு ஸெஸ் ஆக்ட், இதற்கு முன்னால் சுங்கம் வரி வஸூலிப்பதற்காகச் செய்திருந்த ஒரு ஆக்ட் ஆகிய இம் மூன்றையும் ஒன்றுசேர்த்து புது ஆக்டாகப் பாஸ் செய்தார்கள். இதில் ரயத்துவாரி நிலஸ்வான்களுக்கே யன்றி மற்ற ஜமீன்தார்களுக்கும் இனாம்தார்களுக்கும் வரி போடுவதற்கும் அதிகாரம் ஏற்படுத்திக் கொண்டார்கள். ஸெஸ்ஸும் ரூபாய்க்கு 1-அணாவாக உயர்த்தப்பட்டது. சற்றேறக்குறைய அதே காலத்தில், அப்போது இம்பீரியல் கவர்ன்மெண்டுக்குப் பணத்தட்டாக இருந்ததனால் அதுவரையில் இம்பீரியல் கவர்ன்மெண்டாருடைய செலவில் போட்டும் செப்பனிட்டும் வந்த எல்லா ரோடுகளையும் பாலங்களையும் டிஸ்ட்ரிக்ட் போர்டுகள் தங்கள் ஸொந்த செலவிலேயே நிர்வகித்து வரவேண்டுமென்று சொல்லி அந்த ரோடுகளினுடையவும் பாலங்களினுடையவும் நிர்வாகத்தை டிஸ்ட்ரிக்ட் போர்டுகளுக்கு விட்டு விட்டார்கள். 1884-ம் வருஷத்தில் அந்த ஆக்டை புதுப்பித்தார்கள். இப்போது அது சில மாறுபாடுகளுடன் அநுஷ்டானத்தில் இருந்து வருகிறது.

இவ்விதம் லாண்ட் ஸெஸ்ஸின் சரித்ரத்தைச்சொல்லிவிட்டு, லாண்ட்ஸெஸ பணத்தை ஜில்லாவிலுள்ள சிறிய ரோடுகளுக்கே உபயோகிக்க வேண்டுமெனவும் பெரிய ரோடுகளுக்கும் பாலங்களுக்கும் உபயோகிக்கக்கூடாதெனவும் 1853-ம் வருஷத்திலும் 1856-ம் வருஷத்திலும் வ்யக்தமாய் ஏற்படுத்தப்பட்டிருக்கிறதென்று மேற்படி சரித்ரத்தால் தெரியவருமென்றும், நிலஸ்வான்கள் ஏற்கனவே ரொம்ப அதிகமான வரி அதாவது 100-க்கு 50 வீதம் வரி செலுத்துகிறார்களாகையால் இன்னம் ஏதாவது வரி போடுவதென்றால் அது அந்தந்த ப்ரதேச துக்கார்யங்களுக்கு உபயோகிப் பதற்காகவென்றிருந்தால் மட்டும் வரிபோடுவது ந்யாயமாகுமென்றும், விவஸாயிகள், வ்யாபாரிகள், உத்யோகஸ்தர்கள் முதலிய பலராலும் உபயோகிக்கப்பட்டு வரும் பெரிய ரோடுகளுக்காக நிலஸ்வான் கொடுக்கும் வரியை உபயோகிப்பது ந்யாயமில்லையென்றும், பெரிய ரோடுகளுக்கு வேண்டிய பணத்தை பொது ரெவின்யூவிலிருந்து எடுத்துக்கொள்ள வேண்டுமென்றும் சொன்னார். இன்றும், மாகாண கவர்ன்மெண்டுக்குப் பணம் போதாவிட்டால் இம்பீரியல் கவர்ன்மெண்டைப் பண உதவி கேட்கலாமென்றும், இம்பீரியல் கவர்ன்மெண்டின் பைனான்ஸ் மெம்பர் 1912-ம் வருஷத்தில் ஜில்லா போர்டுகளுக்குப்பண உதவி செய்வதைபற்றிப் பேசினபோது அது விஷயம் பொதுவாய் ஒன்றும் சொல்ல முடியாதென்றும் ஏதாவது ஒரு மாகாணத்தில் பணத்தட்டாக இருந்து அது விஷயம் தாம் ஆலோசிக்கவேண்டிவந்தால் அதைப்பற்றி கவனிப்பதாகச் சொல்லியிருப்பதால் இம்பீரியல் கவர்ன்மெண்டைப் பண உதவிகேட்டால் அவர்கள் க்ராண்ட் கொடுப்பார்கள் என்றும், இதனால் ஜில்லா போர்டுகள் மிச்சமான பணத்தைக்கொண்டு ஸுகாதாரம், கல்வி முதலிய விஷயங்களுக்குச் செலவழிக்கலாமென்றும், ரோடுகளின் ரிபேர் நிர்வாகத்துக்காகும் செலவை மாத்ரம் கவர்ன்மெண்டார் ஏற்றுக்கொண்டால் போதுமென்றும் அதற்கு வேண்டிய நிபந்தனைகள் ஜில்லா போர்டின் நிபந்தனைகளாகவே இருக்கட்டுமென்றும் சொன்னார்.

இந்தத் தீர்மானத்தைத் தாங்கிப் பேசின ஆனரபிள் மிஸ்டர் நரஸிம்மய்யர், 1871-ம் வருஷத்தில் இந்தியா கவர்ன்மெண்டுக்குப் பணத் தட்டாயிருந்ததென்று சொல்லி ரோடுகளின் செலவை டிஸ்ட்ரிக்ட் போர்டுகள் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று சொன்னது போல, இப்போது டிஸ்ட்ரிக்ட் போர்டுகளுக்குப் பணத்தட்டாயும், இந்தியா கவர்ன்மெண்ட்

அதிகப் பணமுள்ளவர்களாயு மிருப்பதால் ரோடு நிர்வாகத்துக்காகும செலவை கவர்ன் மெண்டே ஏற்றுக்கொள்ளவேண்டு மென்று கேட்பதற்கு இது ஸரியான காலமென்று சொன்னார்.

ஆனரபிள் ஸர் ஹாரோல்ட் ஸ்டீவர்ட் கவர்ன் மெண்ட் பக்கம் இந்தத் தீர்மானத்தை ஆக்ஷே பித்துப் பேசினபோது, தீர்மானத்திலுள்ள வார்த்தைகளாலும், ராவ் பகதூர் ராமானு ஜாசார்யார பேசிய பேச்சாலும் ரோடுகளை நிர்வகிக்கும் கார்யத்தை பப்ளிக் வொர்க்ஸ் டிபார்ட்மெண்டுக்கு மாற்றிவிட வேண்டு மென்று சொல்வதாகத் தமக்குத் தோன்று கிறதென்றும், இது விஷயமாய்ப் பத்து வருஷத்துக்கு முன்னால் யோசித்துப் பார்த் திருக்கிறார்களென்றும், இந்த ரோடுகளுக் காக ஜில்லா போர்டுகளுக்கு 20-லக்ஷம் ரூபாய் செலவு ஏற்பட, பப்ளிக் வொர்க்ஸ் டிபார்ட்மெண்டிற்கு மாற்றினால் 40-முதல் 67-லக்ஷம் ரூபாயாகுமாகையாலும், ரோடுகளை இப்போதிருப்பதைவிட உயர்ந்த நிலைமையில் வைத்திருக்க அந்த டிபார்ட்மெண்டார் விரும்பு வார்களாதலால் அதற்கு அதிக பணம் வேண் டியிருக்குமாகையாலும் தற்காலம் ட்ரங்க் ரோடுகள் ட்ரங்க் ரோடுகளாய் இல்லாமல் எல்லாரோடுகளும் அந்தந்த ப்ரதேசத்துக்கு உபயோகப்பட்டு அந்தந்த ப்ரதேசத்தாரால் கவனிக்கப்படவேண்டிய ரோடுகளாக இருக் கின்றனவாகையாலும், இந்த ரோடுகளின் நிர்வாகத்துக்காகும் செலவை கவர்ன்மெண்ட் ஏற்றுக்கொள்ள முடியாதாகையாலும் ரோடு களின் நிர்வாகத்தை தாங்கள் ஏற்றுக்கொள்ள முடியாதென்று அப்போதே முடிவு செய்தா யிற்றென்றும், இந்தியா கவர்ன்மெண்டைப் பண உதவி கேட்டால் அவர்கள் பணம் கொடு க்க மாட்டார்கள் என்பது நிச்சயமென்றும், மாகாண கவர்ன்மெண்டார் என்ன உதவி கொடுக்கக்கூடுமோ அந்த உதவியை ஜில்லா போர்டுகளுக்குக் கொடுப்பதில் தடையில்லை யென்றும் சொன்னார். உத்யோகஸ்தர்க ளல்லாத மெம்பர்களில் சிலர் இந்தத் தீர்மா னத்தைத் தாங்கிப்பேசினார்கள்.

கடைசியில் ராவ்பகதூர் ராமானுஜாசார்யார் எழுந்து பேசினபோது, ரோடுகளின் நிர்வா கத்துக்கு வேண்டிய பணம் தான் கவர்ன் மெண்டு கொடுக்க வேண்டுமென்று தாம் சொன்னதே யொழிய வேலையைக்கூட வேறு டிபார்ட்மெண்டுக்கு மாற்றவேண்டும் என்று தாம் சொல்லவில்லையென்றும் ஸர்ஹாரோல்ட் ஸ்டீவர்ட் ரோடுகள் நல்ல ஸ்திதியில் இல்லை யென்றும் பப்ளிக் வொர்க்ஸ் டிபார்ட்மெண் டிற்கு விட்டால் அவைகள் நல்ல ஸ்திதியில் இருக்குமென்றும் சொன்னதில் தாம் ஸந்தோ ஷப் படுவதாகவும், வாஸ்தவத்தில் லோகல் போர்டுகள் நிர்வகித்துவரும் ரோடுகள் ரொம்ப கேவல ஸ்திதியிலிருக்கிறதாகவும், இதற்காக கவர்ன்மெண்டார் பணங்கொடுத்து உதவிசெய் தோ அல்லது வேலையைத் தாங்களே பார்த் தோவந்தால் ஜனங்களுக்குரொம்பவும் நன்மை உண்டாகுமென்றும், லோகல் பண்டுபணத்தில் பெரும்பாகம் நில ஸெஸ்ஸாகச் செலுத்தும் நிலஸ்வான்களுக்கு உபயோகமாயிருக்கிற க்ராம ரஸ்தாக்களுக்காக அவர்கள் கொடுக்கும் பணத்தைச் செலவழிக்க வேண்டியது க்ரம மென்றும், பெரிய ரோடுகளுக்கு கவர்ன் மெண்டார் பண உதவி செய்தால் டிஸ்ட்ரிக்ட் போர்டுகளுக்கு கஷ்டமிராதென்றும் சொன் னார்.

தீர்மானத்தை வோட்டுக்கு விட்டதில் அது நிறைவேறாமல் போயிற்று.

HOW TO GROW CUCUMBERS.

வெள்ளரி ஸாகுபடி செய்தல்.

வெள்ளரி ஸாகுபடிசெய்வதைப்பற்றி ஆஸ்

ட்ரேலியா தேசத்து விவஸாயப் பத்ரிகை ஒன்று பின்வருமாறு எழுதுகிறது:—

வெள்ளரிக்கு இன்ன நிலந்தான் ஏற்றதென்பதில்லை. ஆனால் இளகலாகவும், வண்டல்படிந்தும், நல்ல வளப்பம் பொருந்தியுமுள்ள நிலங்கள் ச்லாக்யமானவை. ரொம்ப மணல் பாங்காயிருந்தாலும் பாதமில்லை. ரொம்ப ஆழமாகக்கொத்தி நல்ல எருப்போட்டு ஸரிப்படுத்திவிடலாம். நிலத்தை ஆறடி சதுரமுள்ள பாத்திகளாகப் பிரிக்கவேண்டும். சதுரங்களின் மூலைகள் ஒன்றோடொன்று சேருமிடத்தில் இரண்டடி குறுக்களவுள்ள வட்டமான குழிகள் தோண்டவேண்டும். நிலம் இயற்கையாகவே வளப்பமாயில்லாவிட்டால், நன்றாய் மட்கின தொழுவத்தெரு, ஆட்டெரு, மரச்சாம்பல், அகப்படக்கூடுமானால் எலும்புத்தூள் ஆகிய இவைகள் கலந்த எருக்களையும், கொஞ்சம் உப்பையும் மண்ணோடு கலந்து குழியில் போட்டு, அந்தக்குழியில் ஐந்தாறு வெள்ளரி விதைகளை நட்டுவிடவும். விதைகளை அரையங்குலம் ஆழத்தில் நட்டால்போதும். எல்லாம் முளைத்தவுடன் குழிக்கு இரண்டு செடிவீதம் விட்டுவிட்டு மற்றவைகளை பிடுங்கிவிடவும். காய்க்கத் தொடங்கினதும் பக்கத்து வாட்டில் முளைத்துப் பிரிந்துபோகும் கொடிகளைக் கத்தரித்து விடவேண்டும். காற்றுவறட்சியாயிருந்தால் வாரத்துக்கு ஒருதடவை, எருவை ஜலத்தில் கரைத்து குழிகளில் சதும்பத் தெளிக்கவேண்டும். ஒவ்வொரு நாளும் ஸாயந்தரம் செடிகளின் வேர்கள் வரையில் ஊறும்படி பாத்திகளில் ஜலம்பாய்ச்சவேண்டும்.

முதலில் வெள்ளரி பயிர் செய்த மாஸத்துக்குப் பிறகு அடுத்த மூன்று மாஸங்களில் ஒவ்வொரு மாஸமும் வெள்ளரிவிதை விதைக்கவேண்டும். (இதன் தாத்பர்யம் நீண்டகாலத்துக்குப் பலன் கிடைப்பதற்கும் போதும்.)

வெள்ளரிக்காய் நேராக இருக்கவேண்டுமானால் 3-அங்குலம் அகலம் உள்ளவும், 3-பக்கங்கள் உள்ளவுமான பெட்டிகளை திறந்தபக்கம் மேல்நோக்கியிருக்கும்படி வெள்ளரிப்பிஞ்சுகளின் அடியில் வைக்கவேண்டும். குழிகளில் பாய்ச்சும் ஜலம் வேர்வரையில் போகும்படிக்குச் செய்ய பின்வருமாறு செய்யலாம். கெரோஸின் ஆயில் ஸீஸாவால் 1½ ஸீஸா கொள்ளக் கூடிய ஒரு குவளையை எடுத்து அதின் அடியில் சிறு த்வாரங்கள் செய்து, குவளையை வைக்கும்படிக்கு வேருக்கு ஸமீபத்தில் ஒரு குழிசெய்து, அதில் குவளையை இரண்டங்குல ஆழம் கீழே புதையும்படி வைத்து, அதில் ஒருநாள் விட்டொரு நாளாக ஜலம் ஊற்றிவர வேண்டும். வெள்ளரிக் கொடி படர ஆரம்பித்த பிறகுதான் இந்த மாதிரிஜலம் பாய்ச்ச வேண்டும்.

75-முதல் 105 நாட்களுக்குள் காய்பறிக்க ஆரம்பிக்கலாம்.

WATERING.

ஜலம் பாய்ச்சுதல்.

செடிகளுக்கு ஜலம் விடுவதைப்பற்றி திட்டமான விதி ஒன்றும் சொல்வது முடியாது. ஒவ்வொரு செடி அல்லது பயிருக்கு எவ்வளவு ஜலம் வேண்டுமென்பது அந்தந்தச் செடி அல்லது பயிரின் ஸ்வபாவத்தைப் பொருத்ததாயிருக்கிறது. ஜலம் பாய்ச்சுவதில் ஒரு செடிக்கு எவ்வளவு ஜலம் வேண்டுமென்பதையறிவதோடு, நிலத்தின் தன்மையையும் அறிந்துகொள்வது அவச்யமாகும். முதலாவது நாம் கவனிக்கவேண்டியதென்னவென்றால் செடிகளில் அதிக பாகம் ஜலமாகவேயிருக்கிறது. உலர்ந்த பட்டாணிவிதைகளில் நூற்றுக்குப் பத்து பாகம் ஜலம் இருக்கிறது. கீரைகளிலோ நூற்றுக்கு 85-முதல் 90 பாகம் வரையில் ஜலம் நிறைந்திருக்கிறது. இன்னும் சில காய்கறிகளில் நூற்றுக்கு

99-பாகம் ஜலமாகவே இருக்கிறது. இரண்டாவது, செடி எவ்வளவு நிறையுள்ளதாகவிருக்கிறதோ அதைவிட பல மடங்கு அதிக நிறையுள்ள ஜலம் செடிக்குப் பல கார்யங்களுக்கு வேண்டியிருக்கிறது. செடி பூமியிலிருந்து வேரின் மூலமாக க்ரஹிக்கும் ஜலம் உயரப்போய் இலைகள் வழியாக ஆவியாகப்போகிறது. இப்படி ஜலம் வேரிலிருந்து இலைக்குப் போகும்போது பூமியிலுள்ள தாதுப்பொருள்களையும் எடுத்துக் கொண்டுபோய் செடி வளருவதற்கு உபயோகப்படும்படி செய்கிறது. மேலும், ஜலம் இலை மூலமாயும் செடியின் வேறுபாகங்கள் மூலமாயும் ஆவியாய்ப் போவதால் செடியானது சரியான சீதோஷ்ண நிலைமையில் இருப்பது ஸாத்யமாகிறது.

செடியின் வேர்களுக்கு ஜலம் மாத்ரம் போதாது; அவைகளுக்குக் காற்றும் வேண்டும். ஆகையால் நிலத்தில் எப்போதும் ஜலம் தங்கியிருந்தால் அநேகமாய் எல்லா செடிகளுக்கும் கெடுதல் உண்டாகும். செடிக்கு விடும் ஜலத்தின் அளவுக்குத் தகுந்தபடி செடியின் வளர்ச்சிக்குக் கெடுதலோ ஸௌகர்யமோ ஏற்படுகிறது. செடிகளுக்கு எப்போதும் ஏராளமான ஜலம் ஊற்றி அவைகள் நன்றாய் வளர்ந்து கொண்டிருக்கும் படிக்கும் வெகு காலம் பூக்காமலிருக்கும் படிக்கும் செய்யலாம். பொதுவாய் செடி பூக்க ஆரம்பிக்கு முன்னால் அதற்கு அதிக ஜலம் ஊற்றாமலிருக்க வேண்டியது அவச்யம் என்று சொல்லலாம்.

ப்ரான்ஸில் ஒரு ப்ரொபஸர் செடிகளுக்கு விடுகிற ஜலத்தின் அளவைப்பற்றிப் பரிசீலனை செய்து வந்ததில் செடிகளுக்கு ஏராளமான ஜலம் அடிக்கடி ஊற்றுவதில் கொஞ்சமும் ப்ரயோஜனம் ஏற்படாமலிருப்பதோடு அப்படி அதிக ஜலம் விடுவதால் செடிக்கு ரொம்ப கெடுதல் உண்டாகக்கூடும் என்று தெரியவந்தது.

நல்ல வெயில் அடித்துக் கொண்டிருக்கும் போது நடுப்பகலில் செடிகளுக்கு ஜலம்விடுவது ரொம்பவும் கெடுதல். ஏனென்றால் நல்ல வெயிலடிக்கும் போது செடிகளுக்கு ஜலம் ஊற்றினால் பூமியிலிருந்து ரொம்ப உஷ்ணம் வெளிப்பட்டு செடிகளின் வேர்களுக்குக் கெடுதலை உண்டு பண்ணும்.

GREEN MANURE.

பசுந்தாளுரம்.

பசுந்தாளுரத்தைப்பற்றி ஒருவிருபர் 'சுதேசமித்திர'னில் ஒரு குறிப்பு எழுதியிருக்கிறார்:—

பசுந்தாள் உரப்பயிர் என்பது எந்த நிலத்திற்கு உரம் இடவேண்டுமோ அந்த நிலத்திலேயே ஸாகுபடி செய்யப்பட்டு மறு ஸாகுபடிக்கு உரமாகும்படி மடித்து உழப்படும் பயிராகும். நன்செய் நிலங்களில் நெல் ஸாகுபடிக்கு அவ்விதமாய் உரம் செய்வது அநேகவிதமான அநுகூலங்களைக் கொடுக்கும். அப்படி ஸாகுபடி செய்யக்கூடிய பயிர் வகைகள் ஆவாரை, கொளுஞ்சி, புங்கம், தக்கைப் பூண்டு முதலியன. பசுந்தாள் உரமானது பூமியில் மடிக்கப்பட்டு அழுகும்போது கொதிப்புண்டாகி பூமியில் ஏற்கனவே யுள்ள ஸுலபமாய்க்கரையாத பயிருணவை கரையும்படி மாற்றி உடனே பயிருக்கு உதவும்படி செய்கிறது.

அது விதைத்த மூன்று மாஸத்திற்குள் மடித்து உழுவதற்கு தயாராயிருக்கக்கூடியதாயும் குறைந்தது 6-மாஸம் வரையில் பசுமையோடு வளரக்கூடியதாயுமிருக்கவேண்டும். அது ஆடுமாடுகள் தின்னாததாகவும் பூச்சி முதலியவைகளால் நாசமடையாததாகவும் இருக்கவேண்டும். எல்லாப் பயிர்களுக்கும் தக்கைப் பூண்டு என்ற பசுந்தாள் பயிர் மற்ற எந்தப் பயிரைக் காட்டிலும் மேலே சொல்லப்பட்ட விவரங்களுக்கு ஒத்ததாயிருக்கிறது. அது கடுமையான காய்ச்சலையும் நீர்ப்பிடிப்பையும் தாங்கும். ஸ்வல்ப களருள்ள நிலத்

திலும் பயிராகும். அதை 3-மாஸத்தில் மடித்து உழுது விடலாம்; அல்லது 5, 6-மாஸம் வரையில் வளரவும் விடலாம். வளர்ந்த பிறகு ஆடு மாடுகள் அதைத்தின்னும். அது அதிக ஜாஸ்தியான பசுந்தழையைக்கொடுக்கும். அதின் தண்டு ஸ்வல்ப நாரும் கழியுமுள்ளதாயிருக்கிறது. நைட்ரஜன் என்ற உப்பு வாயுவை பூமியில் சேர்க்கிறது.

நெல் அறுவடையான பிறகு வயலை உழுது தக்கைப்பூண்டின் விதையை கைவிதைப்பாய் விதைத்து விதையை மூடுவதற்கு லேசாய் மறு உழவு செய்தால் வெகு ச்லாக்யமாய் வளருகிறதென்று அனுபவத்தில தெரிகிறது. விதைத்த பிறகு முளைப்பதற்குத் தகுந்த ஈரம் நெல் அறுவடையான பிறகு பூமியிலிருந்தாலும் அல்லது விதைக்கப்பட்ட பிறகு ஜலம் பாய்ச்சப்பட்டாலும் தகுந்த மழை பெய்தாலும் ஆடுமாடுகளால் மேய்ந்து விடாமலிருக்கும்படி பாதுகாக்க வேண்டியதைத் தவிர வேறு யாதொரு விதமான வேலையும் செய்ய வேண்டியதில்லை. அவ்விதைகள் முளைத்து செடிகள் சீக்ரமாக வளர்ந்து பூமியை மூடும்படி பரவிக்கொள்ளும். முளையாமற்போன விதைகள் அடுத்த மழையில் முளைத்து விடும். முதல் வருஷம் தக்கைப்பூண்டு லாகுபடி செய்யப்பட்ட வயலில் மறு வருஷம் விதைக்க, முதல் வருஷத்தைவிட அதிகக் கொழுமையாய் வளருகிறது. இதன் விலை பட்டணம் படி 1-க்கு 6-அணா. ஒரு ஏக்கர் விதைக்க 2½-பட்டணம் படி விதை போதும்.

FOREST PUNCHAYATS.

பாரஸ்ட் பஞ்சாயத்துகள்.

ஸர் மர்ரே ஹாமிக் இந்த ராஜதானிக்கு ஆக்டிங் கவர்னராக இருந்தபோது, பாரஸ்ட் நிர்வாகத்தால் ஜனங்களுக்கு உண்டாகும் அஸௌகர்யங்களைப் பற்றி விசாரணை செய்து வேண்டிய ப்ரேரணைகள் செய்யும்படி ஒரு கமிட்டி நியமித்திருந்தார். அந்தக் கமிட்டி பல விடங்களுக்குப்போய் விசாரணை நடத்தி சில ப்ரேரணைகள் செய்து கவர்ன்மெண்டாருக்கு அனுப்பிற்று. அந்த ப்ரேரணைகளில், க்ராமங்களுக்கு அடுத்தாப்போலிருக்கிற மேய்ச்சலுக்கு உதவும் காடுகளை மாடுகளின் மேய்ச்சலுக்காக வேண்டி, க்ராமங்களில் பஞ்சாயத்துகள் ஏற்படுத்தி அவாகளைக் கொண்டு நிர்வாகம் செய்யும்படி செய்ய வேண்டும் என்பது ஒன்றாகும். இந்த ப்ரேரணையை கவர்ன்மெண்டார் ஏற்றுக்கொண்டு, அதன்படி சில ஜில்லாக்களில் பரீக்ஷார்த்தமாக பஞ்சாயத்துகள் ஏற்படுத்திப் பார்ப்பதாய் சென்ற வருஷம் தீர்மானித்தார்கள். அந்தத் தீர்மானத்தின்படி ரெவின்யூ போர்டில் பாரஸ்டிலாகா மெம்பராகிய ஆனரபிள் மிஸ்டா ஆர். வி. வி. கார் பொறுக்கி எடுத்த சில ஜில்லாக்களில் இந்த மாதிரி பஞ்சாயத்துகள் நியமிக்கும்படி ஏற்பாடு செய்து வருகிறார். தற்காலம் செங்கல்பட்டு, நெல்லூர், வடக்குவேலூர், சேலம் ஜில்லாவின் தென் பாகம், கோயம்புத்தூரின் தென்பாகம், தஞ்சாவூர் - திருச்சிறுப்பள்ளி, க்ருஷ்ணா ஆகிய இந்த விடங்களில் பஞ்சாயத்துகள் பரீக்ஷார்த்தமாய் நடத்தப்படும். இது புது ஏற்பாடாதலால் இது த்ருப்திகரமாய் நிறைவேறுவதற்காக வேண்டிய முயற்சிகள் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். ஸமீபத்தில் மிஸ்டர் கார் கோயமுத்தூருக்குப் போய் அந்த ஜில்லா கலெக்டர் மிஸ்டர் ஹெமிங்வேயுடன் பல க்ராமங்களைச் சுற்றிப்பார்த்து க்ராமவாஸிகளுடன் இது விஷயமாய்க் கலந்து பேசி, இந்த புது ஏற்பாடு நன்றாய் நிறை வேறவேண்டுமென்று தாம் மிகவும் கவலை கொண்டிருப்பதாகவும், இது நிறைவேறுவதற்காக க்ராமவாஸிகள் தங்களாலானமட்டில் ச்ரமப்பட்டு ஒத்து உழைக்க வேண்டுமென்றும் அவர்களுடைய மனதில்

பதியும்படிப் பேசினர். இந்த ஏற்பாடு யாதொரு தவக்கமுமில்லாமலே சீக்ரம் அநுஷ்டானத்துக்கு வரும். இந்தப் பரீக்ஷார்த்தமான ஏற்பாடு கைகூடிவருதால் விவஸாயிகளுக்கு தங்கள் கால்நடைகளின் மேய்ச்சல் விஷயமாய் ரொம்ப ஸௌகர்ய மேற்படுமாதலாலும், இந்த ஏற்பாட்டை சாச்வதமாய் நடத்திவர ஏற்பாடு செய்து மற்ற ஜில்லாக்களிலும் இதை அநுஷ்டிக்கும்படி செய்யக் கூடுமாதாலும் இந்த ஏற்பாடு நடக்கப்போகும் ஜில்லாக்களிலுள்ள க்ராமவாஸிகள் இது விஷயத்தில் ரொம்பவும் பாடுபட்டு உழைத்து இதை கைகூடும்படி முயலவேண்டியது ரொம்பவும் அவச்யமாகும்.

MINOR VETERINARY DISPENSARIES.

சிறு ம்ருகவைத்யசாலைகள்.

1905-ம வருஷத்தில் கவர்ன்மெண்டார் சென்னை ராஜதானியில் 82-பெரிய ம்ருக வைத்யசாலைகள் ஸ்தாபிக்க ஸாங்க்ஷன் செய்தார்கள். தற்போது சில மருக வைத்யசாலைகளே ஸ்தாபிக்கப் பட்டிருக்கின்றன. பற்பல காரணங்களால் வைத்யசாலைகள் ஏற்படுத்துவது தாமஸமாகிறது. பெரிய பட்டணங்களில் தான் பெரிய ம்ருக வைத்யசாலை ஏற்படுத்தலாமே ஒழிய சிறுபட்டணங்களில் ஏற்படுத்துவது முடியாது. மருக வைத்ய டிபார்ட்மெண்டின ஸூபரிண்டெண்டண்டு சிறு பட்டணங்களிலும் ஜனங்களுக்குள் ம்ருக வைத்ய உதவியைப் பரவச் செய்வதற்கு சில மாஸங்களுக்கு முன்னால் ஒரு ஸ்கீம் தய்ாரித்து கவர்னமெண்டுக்கு அனுப்பினர். அந்த ஸ்கீமை கவர்னமெண்டார் பொதுவாய் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். அந்த ஸ்கீமின்படி தெரிந்தெடுக்கப்பட்ட சிறு பட்டணங்களில ம்ருக வைத்ய டிஸ்பென்ஸரி அதாவது மருந்து கொடுத்து உதவும் சிறு வைத்யசாலைகள் ஸ்தாபிக்கப் படும். தற்போது 6-டிஸ்பென்ஸரிகள் ஆறு பட்டணங்களில் ஸ்தாபிப்பார்கள். கோயம் புத்தூர் ஜில்லாவிலுள்ள பொள்ளாச்சியிலும், பல்லாரி ஜில்லாவிலுள்ள ஆதோனியிலும் இன்னும் 4-ஊர்களிலும் மேற்சொன்ன டிஸ்பென்ஸரிகள் ஸ்தாபிக்கப்படும். இந்த டிஸ்பென்ஸரிகளுக்காகும் செலவில் ஒருபாதியை மாகாண கவர்ன்மெண்டாரும் ஒரு பாதியை லோகல் போர்டுகளும் பொறுத்துக்கொள்வார்கள்.

DISINFECTING A COWSHED.

மாட்டுக் கொட்டிலை மருந்து போட்டு சுத்தம்செய்வது.

மாட்டுக்கொட்டிலை சுண்ணும்படிக்க சுண்ணும்பைப் பின் வருமாறு தயார் செய்யலாம். $7\frac{1}{4}$ ராத்தல் சுண்ணும்பைத் தாளிக்கவேண்டும். நன்றாய் தாளிக்க வேண்டுமானால் சுடு ஜலத்தை உபயோகித்துக் கொள்ளலாம். பிறகு வேண்டிய அளவு ஜலம் கலந்து கெட்டிக்குழம்பாகச் செய்துகொண்டு அதில் 15-ஔன்ஸ் சுத்தமான கார்பாலிக் ஆஸிடைச் சேர்த்துக் கரைத்து $12\frac{1}{2}$-படி சுண்ணும்பு கரைத்த நீர் கிடைப்பதற்கு எவ்வளவு ஜலம் இன்னம் சேர்க்கவேண்டுமோ அதைச் சேர்த்துக்கொண்டு பிறகு நன்றாய்க் கலக்கவும். பூஞ்செடிகளுக்கு ஜலம் வார்க்கும் கருவியால் இந்த சுண்ணும்பு நீரை உபயோகப்படுத்துவதாயிருந்தால் சுண்ணும்பு நீரை வடிக்கட்டுவது நல்லது. மாட்டு வ்யாதிகள் பரவியிருக்கும் இடங்களில் சுவர்களுக்கு சுண்ணும்படிப்பதே யன்றி தரையிலும் சுண்ணும்பு நீரை சதும்பத்தெளிக்க வேண்டும்.

BRANCHING OF RICE.

நெல்பயிரில் கிளைகள் உண்டாவது.

அநேக தினுஸு நெல் பயிர்களின் கதிர்களில் உண்டாகும கிளைகள் சில ஸமயங்களில் ஸரியாய்க் கதிர் பிடிக்காமல் போய்விடு

தண்டு. பயிரானது பூமியிலுள்ள உணவை சரியாய் க்ரகித்துக்கொள்ளாததனாலும், செடியின் வளர்ச்சிக்குக் குறைவு ஏற்படுவதனாலும், முளை விடும்போது வயலில் அளவுக்கு மிஞ்சி ஜலம் நிற்பதனாலும் கிளைகளில் மேல்சொன்னபடி தான்யம் பிடிக்கிறதில்லையென்று சொல்லப் படுகிறது.

இந்த உபயோகமற்ற கிளைகள் செடியில் 100-ல் பத்து பாகமாயிருப்பதாலும், செடிக்கு வேண்டிய உணவில் ஒரு பாகத்தை வீணில் க்ரகித்துக் கொள்ளுகிறபடியாலும் இப்படி நேராமல் பார்த்துக் கொள்ளவேண்டியது மிகவும் அவச்யம். இதற்குப் பின்வரும் விஷயங்களைக் கவனிப்பது நல்லது.

அனுவச்யமாய் ரொம்பத் தாமஸமாய் எரு விடுவது கூடாது. அதிலும் நைட்ரோஜின் ஸம்பந்தமான எரு தாமஸமாய் இடக்கூடாது. ரொம்ப தாமஸமாய் களை பிடுங்குவதும் தகுதியல்ல. கிளை விடுங்காலத்தில் வயலில் மிதமிஞ்சி அதிக ஜலம் இருப்பதும் கூடாது.

SHEEP MANURE.

ஆட்டெரு.

இது மிகக் காரமான எரு. ஒரு ஏக்கருக்கு 2,00 ஆடுகளை ஓர் இரவு கிடைவைத்தால் அந்நிலத்துக்கு அது போதுமான எருவாகிறது. இது உடனே பலனைக்கொடுக்குந் தன்மையுடையதுபற்றி, 'ஆட்டெரு அந்த போகம், மாட்டெரு மறுபோகம்;' என்று சொல்வதுண்டு. இதை ஜலத்திற்கரைத்து உபயோகித்தாற் பயிருக்கு மிகவும் நன்மையைக் கொடுக்கிறது. சட்டிகளில் வளர்க்கும் புஷ்பம் முதலிய அலங்காரப் பயிர்களுக்கு ஆட்டுப் புழுக்கைகளை மேலே தூவி தண்ணீரூற்றிவர அதன் ஸாரம் நாளடைவிற் கீழே இறங்கி பயிர் செழிப்பாய் வளரும்.

GUINEA GRASS.

கினியா புல்.

கினியா புல் வ்ருத்தி செய்வதைப் பற்றி ஒரு நிருபர் 'கிருஷிகனில்' பின் வருமாறு தெரிவிக்கிறார். நிலத்தை நன்றாய்க் கொத்திப் புழுதிசெய்துகொண்டு மட்கின சாம்பல் எருப்போட்டு அதன்பேரில் கினியா புல் விதையை காற்றுக் கொண்டுபோகாதபடி தூவித் தண்ணீர் பாய்ச்சவேண்டும். மேல் ஈரம் காயாதபடி தண்ணீர் பாய்ச்சிக்கொண்டு வந்தால் முளைக்கும். மூன்று மாதத்தில் ஒவ்வொரு செடியும் ஒவ்வொரு தூராகும். அதை எடுத்து ஒவ்வொரு தூராகப்பிரித்து நட்டால் அதுவும் 3 மாஸத்தில் தூராகும். இப்படியே எவ்வளவு வேண்டுமானாலும் வ்ருத்தி செய்யலாம். புல்லை அறுத்து மாட்டுக்குப்போடுவது நல்லது.

SINGLE PLANTING.

ஒற்றை நாற்று நடுதல்.

ஒற்றை அலகு நெல் நடுவதெல்லாம் 3½ அல்லது 4 மாஸப் பயிர்களுக்கு மேற்பட்டவைகளுக்கு நல்லதேயொழிய 2½ மாஸப் பயிருக்கு நல்லதல்ல என்று "கிருஷிகன்" எழுதுகிறது. ஏனெனில் நடுவை தேறி மூடுகட்டும் ஸமயத்தில் கதிர் வந்துவிடும். அப்பால் மூடுகட்ட நாட்களில்லை. இருந்தாலும் ஸ்வர்ணவாரி திலுஸ்ஸூ போன்ற இரண்டரை மாஸத்துப் பயிரை நாற்று விட்டுவிட்டால் நாற்று விட்ட 15-நாட்கள் முதல் 18-நாட்களுக்குள் நாற்றைப் பிடுங்கி மூன்று அங்குலங்களுக்கு ஒன்று வீதம் நாற்றை நட்டுவிட்டால் நலமாயிருக்கும்.

The Co-operative World.

கோவாபரேஷன் பகுதி.

THE MADRAS PROVINCIAL CO-OPERATIVE CONFERENCE.

சென்னை ப்ரோவின்ஷ்யல் கோவாபரேடிவ் கான்பரேன்ஸ்.

சென்னை மாகாண கோவாபரெடிவ் கான்பரென்ஸ் இரண்டாந்தடவையாக இந்த மாஸம் 3-தேதி யன்று சென்னையில் கூடிற்று. சென்னை நிர்வாகக் கௌன்ஸில் மெம்பராகிய ஆனரபிள் மிஸ்டர் பி. எஸ். சிவஸ்வாமி அய்யர் ப்ரெஸிடெண்டாக இருந்தார்.

உபசாரணைக் கமிட்டி சேர்மனாக இருந்த திவான் பகதூர் கே. கிருஷ்ணஸ்வாமி ராவ் டெலிகேட்டுகளை வரவேற்றுப்பேசின தமது ப்ரஸங்கத்தில், கோவாபரெடிவ் ஸங்கங்கள் நன்றாய் நடைபெற்று கடைத்தேறுவதற்கு, கடன் வாங்குகிறவர்கள் குறிப்பிட்ட தேதிகளில் தவக்கமில்லாமல் பணம் செலுத்துதலும் ஸங்கங்களை நிர்வாகம் செய்பவர்கள் கார்யங்களை ஒழுங்காயும் பொறுப்புடனும் செய்தலும் அவச்யமென்பதை விவரித்துச் சொல்லிவிட்டு ஸங்கங்களின் மேம்பார்வையும் அதற்காகும் செலவை யார் பொறுத்துக் கொள்வதென்பதைப் பற்றியும் பேசுகையில், கோவாபரேஷன் முயற்சி ஏற்பட்டு 10-வருஷந் தானாயிற்று; இது இவ்வளவு நன்றாய் அபிவிருத்தி யடைந்திருப்பதற்கு கவர்ன்மெண்டின் ஆதரவே காரணம்; இந்தியாவின் தற்கால நிலைமையில் இந்த முயற்சியை உத்யோகப் பற்றில்லாமல் செய்வது கூடாது; ஸங்கங்களின் மேம்பார்வைக்காக நூற்றுக்கு ஐந்து விதம் வரி போடுவதாக ப்ரஸ்தாபம் இருந்து வருகிறது. அது வருமானவரிக்கு இரட்டிப்பாக இருக்கிறது. அந்த வரி போட்டால் ஸங்கங்களுக்கு மிகவும் பளுவாக இருக்கும். மேலும் இதை ஒரு புதிய வரியென்று எண்ணி ஜனங்கள் கவர்ன்மெண்டினிடம் நம்பிக்கைக் குறைவடையக்கூடும்.—என்று சொன்னார். இன்னம், நாணய ஸங்கங்கள் ஒழிந்த மற்ற ஸங்கங்கள் விஷயத்தில் இந்த ராஜதானி பம்பாய் ராஜதானிக்குப் பின் தங்கியிருக்கிறதென்று எடுத்துக் காட்டிவிட்டு, புது ஸங்கங்கள் ஸ்தாபிப்பது விஷயத்தில் 1912-1913-ம் வருஷத்திய கோவாபரேஷன் முயற்சி த்ருப்திகரமாயில்லை யென்றும், கோவாபரேஷன் முயற்சி 1912-1913-ம் வருஷத்தில் ரொம்ப குறைவாய் முன்னேற்ற மடைந்திருப்பது போலில்லாமல் அடுத்த வருஷங்களில் ரொமப முன்னேற்றம் ஏற்படவேண்டுமென்பதே தமது கோரிக்கையென்றும் சொன்னார்.

ப்ரெஸிடெண்ட் தமது ப்ரஸங்கத்தில், உபசாரணைக் கமிட்டி சேர்மன் 1912-13-ம் வருஷத்தில் கோவாபரேஷன் அதிக முன்னேற்ற மடையவில்லை யென்று சொன்னதைப்பற்றிப் பேசுகையில் கவர்ன்மெண்டார் கோவாபரேஷனின் முன்னேற்றத்தைத் தடை செய்ய எண்ணங்கொண்டிருக்கவில்லை யென்றும், ஜனங்களைப்போலவே கவர்ன்மெண்டாரும் ராஜதானியின் மூலை முடுக்குகளிலெல்லாம் ஸங்கங்கள் ஸ்தாபிக்க வேண்டுமென்று விரும்புகிறார்கள் என்றும், சென்ற வருஷம் ரெஜிஸ்ட்ராரும் அவருடைய ஸிப்பந்திகளும் ஏற்கனவே யுள்ள ஸங்கங்களில இருக்கக்கூடிய குற்றம் குறைகளைக் கண்டு பிடித்து அவைகளை சரிப்படுத்துவதற்காக அந்த ஸங்கங்களை பரிசோதனை செய்ததில் ரொம்பகாலம செலவழிந்துபோயிற்றென்றும், புது ஸங்கங்கள் ரெஜிஸ்டர் செய்வதற்கு போட்ட மனுக்களில் தவறுதல்களிருந்தனவால் அதனாலும் தடைகள் ஏற்பட்டன

வென்றும் தற்போது கவர்ன்மெண்டார் அதிக விப்பந்திகள் ஸாங்ஷன் செய்திருப்பதால் 1913-14-ம் வருஷத்தில் கோவாபரேஷன் முயற்சி அதிக முன்னேற்ற மடையுமென்றும் சொன்னார்.

பிற்பாடு கான்பரென்ஸில் அடியிற்கண்டபடி தீர்மானங்கள் செய்யப்பட்டன.

ஆடிட் சேலவு.

கோவாபரெடிவ் ஸங்கங்களின் கணக்குகளைத் தணிக்கை செய்வதற்காக ஸங்கங்களின் லாபத்தில் 100-க்கு 5-வீதம் வஸூலிக்க வேண்டுமென்று கவர்ன்மெண்டார் செய்திருக்கும் ப்ரேரணையானது ஸங்கங்களுக்கு மிகவும் கஷ்டமாக இருக்கும். ஆகையால் அப்படி தணிக்கைச் செலவை வஸூலிக்கக் கூடாது.

ஸங்கங்களின் பெடரேஷன்.

கோவாபரெடிவ் ஸங்கங்களை வெகுவாய் மெம்பர்களாகக்கொண்ட ஸெண்ட்ரல் பாங்கி யூனியன்கள் தகுந்த இடங்களில் ஸ்தாபிக்கப் படவேண்டும். ஸங்கங்களல்லாத மெம்பர்கள் எடுத்துக்கொள்ளும் ஷேர்கள் வேண்டும் போது பணம் கொடுத்தால் வாப்ஸ் செய்யக் கூடியவைகளா யிருக்கவேண்டும். ஒவ்வொரு பிடரல் பாங்கிக்கும் ஸூபர்விஷன் கௌன்ஸில் என்று ஒரு மேம்பார்வை ஸங்கம் இருக்கவேண்டும். இந்தக் கௌன்ஸிலின் வேலை பிடரேடட்ஸங்கங்களின் கணக்குகளைத்தணிக்கை செய்வதும், இன்ஸ்பெக்ட் செய்வதும், மேம்பார்வை செய்வதுமா யிருக்கவேண்டும்.

பொது நிதிகள்.

அந்தந்த ப்ரதேசங்களுக்கான கார்யங்களை, உதாரணமாக ஸுகாதாரம், கல்வி, பாசன வேலை ஆகிய இவைகளை கோவாபரெடிவ் ஸங்கங்கள் செய்து வரும்படிக்கு நன்றாய் நடந்து வரும் - கோவாபரெடிவ் ஸங்கங்களிடம் பொதுப்பணத்தைக் கொடுத்துச் செலவிடும் படி கவர்ன்மெண்டார் ஏற்பாடு செய்யவேண்டும்.

டிக்ரீயான தொகைக்கு வட்டி.

கோவாபரெடிவ் ஸங்கங்கள் கடனைச் செலுத்தாத ஒரு மெம்பர் மேல் வ்யாஜ்யம் போட்டு டிக்ரீ வாங்கினபிறகு டிக்ரீ தேதி முதல் கடன் வஸூலாகும் தேதிவரையில் வட்டியை கோர்ட்டார் தங்களுக்கு உசிதமென்று தோன்றுகிறபடி ஏற்படுத்தவேண்டும் என்றிருப்பதில் ஸங்கங்களுக்கு நஷ்டம் ஏற்படுவதால் கோர்ட்டார் நஷ்டம் ஏற்படாதபடிக்கு வட்டியைக் குறிப்பிட வேண்டும்.

ட்ராப்ட் ரூல்கள்.

கோவாபரெடிவ் ஆக்டின் கீழ் கவர்ன்மெண்டார் ப்ரசுரம் செய்திருக்கும் ட்ராப்ட் ரூல்களைப்பற்றிப் பின்வரும் தீர்மானங்கள் செய்யப் பட்டன.

ட்ராப்ட் பைலாக்களை ரெஜிஸ்ட்ரார் ஏற்றுக் கொண்டபிறகு ரெஜிஸ்ட்ரார் ஏதாவது திருத்தங்கள் செய்திருந்தாலன்றி அவைகளை மறுபடியும் பொது ஸபை மீட்டிங்கில் வைக்க வேண்டுமென்பது அநாவச்யம்.

ஸங்கங்கள் பொது நன்மைக் கார்யங்களுக்காக பணம் எடுத்து வைப்பதில் பொது நன்மைக் கார்யங்கள் இன்னின்ன வென்று நிர்த்தாரணம் செய்யும்படி சொல்லக்கூடாது. பொது நன்மைக் கார்யங்கள் தர்ம ஸொத்தைப்பற்றிய ஆக்டில், சொல்லியிருக்கும் பொது நன்மைக் கார்யங்களில் அடங்கியவையானாலும் சரி அடங்காதவைகளாயிருந்தாலும சரி, அவைகளுக்கு எவ்வளவு தொகை வேண்டியிருக்குமோ அவ்வளவு தொகையை லாபத்திலிருந்து எடுத்துக்கொள்ளும்படி 1912-ம் வருஷத்து கோவாபரெடிவ் ஆக்ட் 34-வது ஸெக்ஷனை மாற்றவேண்டும்.

அன்லிமிடெட் லையபிலிடியும் ஷேர்களாகச் சேர்க்கப்பட்ட மூலதனமும் உள்ள ஸங்

கங்களின் மெம்பர்களுக்கு அவர்கள் செலுத்தினபங்கின் பணத்துக்கு வட்டியும் டிவிடெண்டும் கிடைக்காதபடிக்கு ரூல் ஏற்படுத்தியிருப்பதாகத் தோன்றுவதால், அப்படிச் செய்யாமல் அவர்களுக்கும வட்டியும் டிவிடெண்டும கொடுக்கும்படி செய்யவேண்டும். அன்லிமிடெட் லையபிலிடி ஸங்கத்தின் ரிஸர்வு பண்டுகளை கோவாபரேடிவ் ஆக்ட் 32-வது ஸெக்ஷன் 1-வது ஸப்ஸெக்ஷன் க்ளாஸ் a, b, c, d, ஆகிய இவைகளில் சொல்லப்பட்ட வழிகளில் வட்டிக்குப் போடலாமென்றாவது, அல்லது ரெஜிஸ்ட்ராருடைய அனுமதி பெற்று ஸங்கங்களின் கார்யங்களுக்கு உபயோகித்து வரலாமென்றாவது ஏற்படவேண்டும்.

ட்ரஸ்ட் நிதிகள்.

ட்ரஸ்ட் நிதிகளை கோவாபரேடிவ் ஸங்கங்களில் வட்டிக்குப்போட அனுமதிகொடுக்கும்படி ட்ரஸ்ட் ஆக்டை மாற்றவேண்டும். அதுவரையில் அப்படி வட்டிக்குப் போடலாமென்று ஹைகோர்ட்டார் ஒரு ரூல் ஏற்படுத்தும்படி கவர்ன்மெண்டார் ஹைகோர்ட்டைக் கேட்கவேண்டும்.

ஸங்கங்களின் ரெஜிஸ்ட்ரேஷன்.

1913-ம் வருஷத்தில் அதிக ஸங்கங்கள் ரெஜிஸ்டராகாததைப் பற்றி கான்பரென்ஸ் வருத்தப்படுகிறது. அதிக இன்ஸ்பெக்டர்கள் ஏற்படுத்துவதால் அதிக ஸங்கங்கள் ரெஜிஸ்டர் செய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்படும் என்று கான்பரென்ஸ் நினைக்கிறது.

பள்ளிக்கூடங்களில் கோவாபரேஷன்.

வித்யா டிரெக்டர் எலிமெண்டரி ஸ்கூல்களின் பாடஜாப்தாவில் கோவாபரேஷனையும் சேர்க்க வேண்டியது அவசியம்.

ஸர்க்கார் உத்யோகஸ்தர்களும் கோவாபரேடிவ் ஸங்கங்களும்.

முப்பத்தைந்து ரூபாய்க்கு மேற்பட்ட சம்பளமுள்ள ஸர்க்கார் உத்யோகஸ்தர்கள் கோவாபரேடிவ் ஸங்கங்களில் நடவடிக்கை வைத்துக் கொள்வதைப்பற்றியுள்ள நிர்ப்பந்தங்களை எடுத்துவிட்டு, அவர்கள் ஸங்கங்களின் கார்யங்களில் கலந்து கொள்ள அனுமதி கொடுக்க வேண்டும்.

விவஸாயக் கோவாபரேஷன்.

விவஸாயக் கோவாபரேடிவ் ஸங்கங்கள் ஸ்தாபிக்கவேண்டியது மிகவும் அவசியம். கோவாபரேடிவ் பால் தயிர்ச் சாலை ஸ்தாபிப்பதற்கு கவர்ன்மெண்டார் பண உதவி செய்து ஆதரிக்கவேண்டும்.

கட்டாயப் படிப்பு.

கோவாபரேடிவ் ஸங்கங்கள் நடந்து வரும் இடங்களில் கட்டாயப் படிப்புச் சொல்லிக் கொடுக்கும்படி இந்தியா கவர்ன்மெண்டார் வேண்டிய சட்டம் செய்யவேண்டும்.

வட்டி செலுத்தும் காலம்.

தாங்கள் கொடுத்த கடனுக்கு ஆறுமாஸத்துக்கு ஒரு தடவை வட்டி செலுத்தவேண்டுமென்று சொல்லும் ஸெண்ட்ரல் பாங்கிகள் ஒரு வருஷத்துக் கொருதடவை வட்டி வாங்கிக் கொள்ளவேண்டும்.

இப்படித்தீர்மானங்களான பிறகு ஆனரபிள் மிஸ்டர் சிவஸ்வாமி அய்யர் தமது முடிவுரை ப்ரஸங்கத்தில், கவர்ன்மெண்ட் க்ராமங்களிலேயன்றி ஜமீன்தாரி க்ராமங்களிலும் கோவாபரேஷன் பரவும்படி செய்ய ஜமீன்தார்கள் முன் வரவேண்டுமென்றும், பள்ளிக்கூடத்துச் சிறுவர்களுக்கு கோவாபரேஷனின் கொள்கைகளைக்கற்பித்தால் அவர்கள் அதை க்ரஹித்துக்கொள்வார்கள் என்பதில் தாம் ஸந்தேகம் கொண்டிருப்பதாகவும், கோவாபரேஷனைப் பாடஜாப்தாவில் சேர்க்கும்படி வித்யா டிரெக்டரைக் கேட்குமுன் ப்ரைவேட் ஸ்கூல்களின் மானேஜர்கள் தங்கள்ஸ்கூல்களில் கோவாபரேஷனைக் கற்றுக்கொடுத்துப் பார்க்கலாமென்றும், கோவாபரேஷனில் சம்பளமின்றி

உழைப்பவர்கள் இன்னம் அதிகமாக வந்து பாடுபடவேண்டு மென்றும், தேசபாஷைப் பத்ரிகைகள் கோவாபரேஷனைப்பற்றி ரொம்பவும் எழுதிவர வேண்டுமென்றும், ஸங்கங்கள் அந்தந்த ப்ரதேசத்திலுள்ள ஜனங்களிடமிருந்து டெபாஸிட்டுகள் பெற முயலவேண்டுமென்றும், நாணயஸங்கங்கள் ஒழிந்த மற்ற கோவாபரேடிவ் ஸங்கங்கள் ஸ்தாபிக்க முயலவேண்டும் என்றும், மற்ற ஸங்கங்கள் ஸ்தாபித்து விஸ்தியடையாதவரையில் கோவாபரேஷன் முயற்சி வேரூன்றிவிட்டதென்றாவது அல்லது ஜனங்கள் கோவாபரேஷனின் கொள்கைகளை க்ரஹித்துக்கொண்டு விட்டார்கள் என்றாவது சொல்வதற்கில்லை யென்றும் சொன்னார். பலகனவான்கள் கான்பரென்ஸுக்கு அனுப்பியிருந்த வ்யாஸங்களைச் சேர்த்து ஒரு புஸ்தகமாக ப்ரசுரித்திருக்கிறார்கள்.

CO-OPERATION IN TANJORE.

தஞ்சாவூரில் கோவாபரேஷன்.

தஞ்சாவூர் ஜில்லா கோவாபரேடிவ் கான்பரென்ஸ் மூன்றாவது தடவையாக இந்த மாஸம் 10-தேதி யன்று அம்மாப்பேட்டையில் கூடிற்று. அந்த ஜில்லா கலெக்டர் மிஸ்டர் வுட் ப்ரெஸிடெண்டாக இருந்தார். ராவ் பகதூர் அண்ணாஸாமிதேவர் உபசாரணைக் கமிட்டியின் சேர்மனாக விருந்தார்.

ராவ் பகதூர் அண்ணாஸாமித்தேவர் தமது ப்ரஸங்கத்தில் கோவாபரேஷன் அந்த ஜில்லாவில் வேரூன்றி விட்டதென்றும், அது வரவர பரவிக்கொண்டு வருகிறதென்றும் சொன்னார்.

ஸுலபமான வட்டியில் பணம் கடனாகக் கிடைத்து வருகிறதென்றாலும் அதனால் அநேக கெடுதல்கள் உண்டாகக்கூடும் ஆகையால் கடன் ஸௌகர்யமாய்க் கிடைப்பதற்கு அனுகுணமான விஷயங்களைப்பற்றி யோசிப்பதோடுகூட மட்டுக்கு மிஞ்சிக் கடன் வாங்கும் வழக்கத்தை ஒழிப்பதற்கு ஏற்பாடுகள் செய்ய வேண்டியதைப் பற்றியும் யோசிக்க வேண்டியதவச்யம். ஜனங்களுக்குக் கடன் வாங்க ஸௌகாய மேற்படுவதோடு அவர்களிடம் சிக்கனமும், வ்யாபாரத்துக்கேற்ற நற்குணங்களும் வ்ருத்தியாக வேண்டும். தஞ்சாவூர் ஜில்லா பெரும்பாலும் விவஸாய ஜில்லாவாதலால் திருந்திய விவஸாயக்கருவிகள், விதைகள், கால்நடைகள், உரங்கள் முதலியவைகளை வாங்கி விற்கவும் ஸங்கங்கள் ஏற்படுவது நல்லது. இந்தக் கோவாபரேஷனால் ஏற்படும் ஸௌகர்யங்களால் கூலியாட்கள் அந்யநாடுகளுக்குப் போவதை முழுவதும் நிறுத்த முடியாவிட்டாலும் குறைக்கவாவது வழி தேடலாம் என்று பேசினார்.

ப்ரெஸிடெண்ட் தமது ப்ரஸங்கத்தில் ஆதிகாலத்தில் த்ராவிடர்கள், ஆர்யர்கள் ஆகிய இவர்களிட மிருந்துவந்த கோவாபரேஷன் அதாவது கூட்டுவறவைப் பற்றிப் பேசிவிட்டு, தஞ்சாவூர் ஜில்லாவில் 62-ஸங்கங்களே இருக்கின்றன வென்றும் தஞ்சாவூரிலுள்ள பெரிய மிராசுதார்கள் கடன் வாங்கவேண்டியவர்களாயிராமல் கடன் கொடுப்பவர்களா யிருப்பதால் இந்த முயற்சி விஷயமாய் உபேக்ஷையா யிருக்கிறார்களென்றும், இதனால் தான் அந்த ஜில்லாவில் கோவாபரேடிவ் ஸங்கங்கள் . அதிகரிக்கவில்லையென்று தோன்றுகிறதென்றும், பெரிய மிராசுதார்கள் ஏழைகளுக்குக் குறைந்த வட்டி கிடைக்கும்படி செய்வதில் சற்று ஊக்கமெடுத்துக் கொள்ளவேண்டுமென்றும் சொன்னார்.

நாணய ஸங்கங்களொழிந்த மற்ற ஸங்கங்களைப்பற்றிப் பேசினபோது கோவாபரேடிவ் கொள்வினை ஸங்கங்களும் விற்பனை ஸங்கங்களும் வைத்து நடத்துவது ரொம்ப ச்ரமமான கார்யமென்றும், அவைகளின் பிரிவுகளாகிய கட்டிட ஸங்கங்கள், நிலம் விலைக்கு வாங்கும் ஸங்கங்கள், கால் நடை இன்ஷூரென்ஸ்ஸங்கங்கள், நெசவு ஸங்கங்கள், பால் தயிர் ஸங்கங்கள் முதலியவைகள் ஒவ்வொன்றையும் ப்ரத்யேகமான வழியில் நடத்த வேண்டியிருக்கும் என்றும், இவைகள் இந்த தேசத்துக்குப் புதியவை யாகையால் ஜனங்களில் ரொம்ப அறிவாளிகளா யிருப்பவர்களே இவைகளை ஸ்தாபித்து நடத்தவேண்டுமே யொழிய மற்றவர்கள் ஸ்தாபிப்பது மிகவும் கஷ்டமானதென்றும், எந்த ஸங்கங்கள் ஸ்தாபிப்பதாயிருந்தாலும் அவைகளுக்கு மிகவும் அவச்யமாய் வேண்டியிருப்பவை நாணயமும் பரஸ்பர நம்பிக்கையுமே என்றும் சொன்னார். பிறகு தஞ்சாவூர் ஜில்லாவில் கோவாபரேஷனின் முன்னேற்றத்தைப் பற்றிய ஒரு ரிபோர்ட்டு வாசிக்கப்பட்டு பல தீர்மானங்களும் செய்யப்பட்டன.

The Commercial World

வ்யாபாரப்பகுதி.

INDUSTRIAL PROGRESS.

கைத்தொழில் முன்னேற்றம்.

சென்றமாஸம் கராச்சியில் இண்டியன் இண்டஸ்ட்ரியல் கான்பரென்ஸ் என்னும் இந்திய கைத்தொழில் கான்பரென்ஸ் கூடின போது கான்பரென்ஸின் ப்ரெஸிடெண்டாகிய ஆனரபிள் மிஸ்டர் லல்லுபாய் ஸமால்தாஸ் தமது ப்ரஸங்கத்தில் இந்திய கைத்தொழிலின் முன்னேற்றத்தைப் பற்றிப்பேசினார். அவர் பேசினதை ஸங்க்ரஹமாக இங்கு எழுதுகிறோம்.

பெரிய கைத்தொழில்களில் மிகவும் ப்ரபலமானவை பம்பாய் பருத்திமில்லுகளும், வங்காளத்து ஜூட்டுமில்லுகளுமாகும். இந்தியாவில் நெய்யப்பட்ட துணிகளின் மொத்த அளவு ஒரே நிதானமாக அதிகரித்துக் கொண்டேயிருக்கிறது. மேலும் இந்த பருத்தி ஸாமான்களின் வேலைப்பாடும் ரொம்ப அபிவ்ருத்தியடைந்து கொண்டிருக்கிறது. அமெரிக்காவிலிருந்து பருத்தி ரொம்ப அதிகமாக இங்கு வருவதால் வெகு நயமான நூல்கள் நூற்பது ஸாத்யமாகிறது. சென்ற பத்துவருஷத்தில் இந்தியாவில் நெய்யப்பட்ட துணிகளின் அளவு இரட்டிப்பு மடங்காகிவிட்டது. அப்படியிருந்தும் வெளிநாடுகளிலிருந்து வரும் துணிகளின் அளவு கொஞ்சமும் குறைவுபடவில்லை. ஏனென்றால் இந்தியாவில் ஸலவைசெய்த துணிகள் ரொம்ப குறைவாகவே செய்யப்படுவதால் அன்ய இறக்குமதி வ்யாபாரம் இதனால் குறைவடையவில்லை. யந்த்ரங்களுக்கு அந்ய நாடுகளை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் வரையிலும், அந்த தேசங்களில் டெக்னிகல் ஸம்பந்தமான ரஸாயனசாஸ்த்ரம் வ்ருத்தியடைந்திருப்பதுபோல் இந்தியாவில் ரஸாயனசாஸ்த்ரம் அபிவ்ருத்தியடையாதவரையிலும், அமெரிக்காவிலும் ஈஜிப்டிலும் உண்டாகும் உயர்ந்த பருத்தியைப்போல் நமது தேசத்தில் உயர்ந்த பருத்தி விளைவிக்கப்படாமலிருக்கும் வரையிலும் இந்த தேசம் மான்செஸ்டர் முதலிய நெசவு தொழில் பட்டணங்களோடு போட்டிபோட முடியாது.—என்று மிஸ்டர் ஸமால்தாஸ் சொன்னார்.

மிஸ்டர் ஸமால்தாஸ் எக்ஸைஸ் வரியைப் பற்றிப் பேசுகையில் பருத்தித் துணிமேல் போடப்படும் இறக்குமதி வரி ரெவின்யூவை உத்தேசித்து ஏற்படுத்தப்பட்டதே யொழிய இந்தியாவின் பருத்திமில் தொழில்களை ஆதரிக்கும் நோக்கத்துடன் ஏற்படுத்தப்படவில்லையென்றும், வரிகளால் தடை செய்யாத வ்யாபாரமே இந்தியாவுக்கு வேண்டுமென்று தாம் விரும்புவதால் எக்ஸைஸ்வரியை எடுத்துவிட வேண்டியது அவச்யம் என்றும் சொன்னார்.

மற்ற தொழில்களைப்பற்றிச் சொன்னபோது, பருத்திஜூட் ப்ரெஸ்ஸுகள், கொட்டையெடுக்கும் பாக்டரிகள், இரும்புபித்தளைத் தொழில்கள், அரிசி மில்லுகள், ஓடு செய்யும் சாலைகள் முதலியவைகள் நன்றாய் அபிவ்ருத்தியடைந்திருக்கின்றன வென்றும், நீலச்சாயத் தொழில் ஒன்றுதான் அபிவ்ருத்தியடையாமல் க்ஷீணித்து வருகிறதென்றும், வெளிநாட்டிலிருந்து செயற்கை நீலம் வந்து விலையாவதால் தான் இந்திய நீலச் சாயத்தொழில் க்ஷீணிக்க ஆரம்பித்திருக்கிறதென்றும், ஓடு பாக்டரிகளைத் தவிர மற்ற தொழில்களில் பாக்டரிகளின் ஸங்க்யை அதிகரித்திருக்கிறதென்றும் சொன்னார்.

ஜாயிண்ட் ஸ்டாக்கம்பெனிகளில் பல நஷ்டமடைந்து போனதைக் குறித்துப் பேசினபோது அப்படி அவைகள் நஷ்டமடைந்ததற்குச் சில காரணங்கள் சொன்னார். அவையாவன.

(1) எடுத்துக்கொண்ட கைத்தொழில்கள் லாபகரமாய் நடந்துவருமா என்பதைப்பற்றி ஆரம்பத்தில் நிபுணர்களைக் கொண்டு ஆராய்ச்சி செய்யாமல் போனது.

(2) கம்பெனிகளை மானேஜ் செய்பவர்கள் அவைகளை மானேஜ் செய்யத் தகுந்தவர்களாயிராமை, அல்லது மானேஜ்மெண்டு சரிவர நடந்து வராமை.

(3) கைத்தொழில்களை வைத்து நடத்தி வரும் ஏஜென்ஸி கம்பெனிகள் கைத்தொழில்களை ஸரிவர கவனியாமை.

(4) நடத்திவரும் கைத்தொழில்களைப் பற்றிய வ்யாபார ஸம்பந்தமானவும் பொருளாதார ஸம்பந்தமானவுமான விஷயங்களைப் பற்றித் திட்டமாய் தெரியாமலிருப்பது.

(5) குறைந்த வட்டியில் நடை முதல் பணம் வேண்டிய வளவுக்கு அகப்படாதது.

மிஸ்டர் ஸமால்தாஸ் இன்னும் சில கைத்தொழில்களைப் பற்றி ப்ரஸ்தாபம் செய்தார். பருத்திக்கொட்டை எண்ணெய்க் கைத்தொழிலில் சென்றவருஷம் ரொம்ப முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. இந்தத் தொழிலை முதலில் ஸ்தாபித்தவர்கள் டாடா வம்சத்தார்கள். அவர்கள் தாங்கள் ஆட்டியெடுத்த எண்ணெயை விற்பதில் முதலில் கொஞ்சம் ச்ரமம் அடைந்தார்கள். பிறகு வ்யாபாரம் ஸ்திரமாய் ஏற்பட்டுப்போகவே வேறு சில கம்பெனிகளும் பருத்திக்கொட்டை எண்ணை ஆட்ட ஏற்பட்டு இப்போது லாபமடைந்து வருகின்றன.

சென்ற வருஷம் ஸிமெண்ட் செய்யும் தொழில் ஒன்று புதிதாய் ஸ்தாபிக்கப் பட்டிருக்கிறது. கத்தியவாரிலுள்ள போர்பந்தரிலும் மத்ய மாகாணத்திலுள்ள காட்னியிலும் அந்தத் தொழில் செய்ய பாக்டரிகள் கட்டிக்கொண்டிருக்கிறார்கள்.

அகமெதாபாத்தில் கையால் செய்யப்படும் கடுதாசி செய்ய ஒரு பாக்டரி ஸ்தாபிக்க ஆலோசித்துக் கொண்டிருக்கிறார்கள்.

கைத்தறி நெசவைப் பற்றிச்சொன்னபோது மிஸ்டர் ஸமால்தாஸ் சென்னையிலும், ஐக்ய மாகாணங்களிலும், பம்பாயிலும் கைத்தறி நெசவு பாக்டரிகள் ஸ்தாபிக்கப் பட்டிருக்கின்றனவென்று சொன்னார்.

THE INDIAN INDUSTRIAL CONFERENCE.

இண்டியன் இண்டஸ்ட்ரியல் கான்பரென்ஸ்.

இண்டியன் இண்டஸ்ட்ரியல் கான்பரென்ஸ் என்னும் இந்திய கைத்தொழில் கான்பரென்ஸ் சென்றமாஸம் கராச்சியில கூடினபோது பின்வரும் தீர்மானங்கள் செய்யப்பட்டன.

பாங்கிகள், பாங்கி வ்யாபாரிகள் (' Banks and ' Bankers ') என்னும் பெயர்களை யார், உபயோகிக்கலாம் எனபதைப்பற்றியும், பாங்கி வ்யாபாரத்துக்காக ஏதாவது சட்டம் செய்ய வேண்டுமா என்பதைப்பற்றியும் கவர்ன்மெண்டார் அபிப்ராயம் கேட்டுவிட்டிருப்பதை யுத்தேசித்து இந்த கான்பரென்ஸ் பின் வருமாறு அபிப்ராயப்படுகிறது.

(a) புதிய ஜாயிண்ட் ஸ்டாக் கம்பெனிச் சட்டத்தின்படி ரெஜிஸ்டர் செய்யப்பட்ட கம்பெனிகள் தான் 'பாங்கி' 'Bank' என்ற பெயரை உபயோகிக்கலாம்.

(b) ப்ரிட்டிஷ் இந்தியாவில் ரெஜிஸ்டர் செய்யப்படாமல் ப்ரிட்டிஷ் இந்தியாவில் ஆபீஸ் அல்லது ப்ராஞ்ச் வைத்து வ்யாபாரம் செய்யும் எல்லா பாங்கிகளும் ப்ரத்யேக சட்டத்தால் ஏற்படுத்தப்பட்டிருந்தாலன்றி மறுபடியும் புதுக கம்பெனிச் சட்டத்தின்படி ரெஜிஸ்டர் செய்யப்படவேண்டும்.

(c) ஒவ்வொரு பாங்கிக் கம்பெனியி

னும் மூலதனத்தில் குறைந்தது இவ்வளவு பாகத்தை ஷேர்ஹோல்டர்கள் எடுத்துக் கொண்டிருக்கவேண்டும் என்று விதிக்கவேண்டியது அவச்யமில்லை. ஆனால் செலுத்தப்பட்ட மூலதனம் எடுத்துக்கொள்ளப்பட்ட பங்குகளின் மதிப்பில் குறைந்தது மூன்றிலொரு பங்காயிருக்கவேண்டும். அந்தப் பணமும் ரெஜிஸ்டர் செய்த ஆறுமாஸக் காலத்திற்குள் செலுத்தி யிருக்க வேண்டும்.

(d) கம்பெனிகளின் மெமொராண்டத்தின் படி பாங்கி வ்யாபாரத்தைத் தவிர வேறு தொழில் நடத்தலாமென்றிருந்தால் அந்த கம்பெனிகளை கம்பெனிகளின் ரெஜிஸ்ட்ரார் ரெஜிஸ்டர் செய்ய மறுக்கலாம். ரெஜிஸ்ட்ராருடைய தீர்மானத்தின் மேல் அந்தந்த ப்ரதேசத்திலுள்ள பெரிய கோர்ட்டுகளுக்கு அப்பீல் செய்யவும் அனுமதி ஏற்பட்டிருக்க வேண்டும்.

(e) சென்னை, மதராஸ், கல்கத்தா ஆகிய இவ்விடங்களிலுள்ள ப்ரெஸிடென்ஸி பாங்கிகளையும் கவர்ன்மெண்ட் போஸ்டல் டிபார்ட்மெண்டையும் தவிர வேறு எந்த பாங்கியும், டெபாஸிட்டுகளில் மூன்றில் இரண்டு பாகத்தை ட்ரஸ்ட் ஆக்ட்டுகளில் சேர்ஸியிருக்கும் ஸெக்யூரிட்டிகளில் போட்டுவைத்து அவைகளை ஸேவிங்க்ஸ பாங்கிக்கென்று தனியாய் எடுத்து வைத்திருந்தாலொழிய அது ஸேவிங்ஸ் பாங்கி டிபார்ட்மெண்டு என்று ஒரு பிரிவு ஏற்படுத்திக்கொள்ளக் கூடாது.

பாங்கியைப்பற்றி மேற்சொல்லியபடி தீர்மானம் செய்த பிறகு இரண்டாவதாக எல்லா இந்திய வ்யாபாரக் காங்ரெஸின் நோக்கங்களை அபிவ்ருத்தி செய்வதற்கு இந்திய கைத்தொழில் கான்பரென்ஸ் எவ்விதத்தில் ஒத்துழைக்கலாம் என்பதைப்பற்றி ஆலோசித்து ரிபோர்ட்டு செய்ய ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டது.

இந்திய சேம்பர் அப் காமர்ஸ் அதாவது இந்திய வ்யாபார ஸங்கங்களுக்குள் ஒற்றுமை ஏற்படவேண்டுமென்று ஒரு தீர்மானம் செய்யப்பட்டது.

இன்னும் படிகளும் படிக்கல்களும் தேசமெங்கும் ஒரே மாதிரியாய் இருக்கவேண்டுமென்றும், வேலை கற்றுக்கொள்ளும் அப்ரென்டிஸ்களை இப்போதுள்ளதைவிட அதிகமாக முதலாளிகள் வேலை பயில எடுத்துக்கொள்ள வேண்டுமென்றும் தீர்மானங்கள் செய்யப்பட்டன.

THE COMMERCIAL CONGRESS.

வ்யாபாரக் காங்க்ரேஸ்.

இந்தியாவின் கைத்தொழில் வ்யாபார விஷயங்களைப்பற்றி கவனிப்பதற்காக ஒரு வ்யாபாரக் காங்க்ரெஸ் ஸதாபிக்க வேண்டுமென்று ஆனரபிள் ஸர் பஸுல் பாய் கரீம்பாய் ஸமீபத்தில் ப்ரேரித்திருந்ததையும், பிறகு அதன் அவச்யத்தைப் பற்றி அவர் பம்பாயில் பேசியிருந்ததையும் முறையே சென்ற ஸெப்டம்பர் மாஸத்து ஸஞ்சிகையிலும், நவம்பர் மாஸத்து ஸஞ்சிகையிலும் குறிப்பிட்டிருந்தோம். அவருடைய யோசனை கைகூடுமென்று தோன்றுகிறது. வ்யாபார காங்க்ரெஸ் ஏற்படுத்துவதற்காக பம்பாயில் ஒரு கமிட்டி ஏற்படுத்தியிருக்கிறார்கள். இந்த முயற்சிக்கு ஸர் பஸுல்பாய் கரீம்பாய் ரொம்ப உதவியாக இருந்துவருகிறார். இந்த காங்க்ரெஸின் அமைப்பைப்பற்றி நூல்கள் வெளியிடப் பட்டிருக்கின்றன. அவைகளில் முக்யமானவை பின் வருமாறு.

இந்தியாவின் வ்யாபாரம் கைத்தொழில் முதலியவைகளை ந்யாயமான வழிகளால் அபிவ்ருத்தி செய்யவேண்டுமென்ற நோக்கத்துடன் இந்த காங்க்ரெஸ் ஸ்தாபிக்கப்படுகிறது.

இந்த நோக்கம் நிறைவேறுவதின் பொருட்டு இந்த காங்க்ரஸானது குறைந்தது மூன்று வருஷத்துக் கொருதடவை கூடி வ்யாபாரம்

கைத்தொழில் ஸம்பந்தமான எல்லா விஷயங்களையும்பற்றி ஆலோசிப்பதோடு, கெடுதலுண்டு பண்ணக்கூடிய வ்யாபாரச் சட்டங்களை நீக்கும்படிக்கும் அல்லது அவைகளை ஏற்படுத்துவதாயிருந்தால் அவைகளை ஏற்படுத்தாமலிருக்கும்படிக்கும் வ்யாபாரத்தையும் வ்யாபார ஸம்பந்தமானவைகளையும் அபிவ்ருத்தி செய்வதற்கு வேண்டியிருக்கக்கூடிய சட்டங்கள் செய்யும்படிக்கும் கவர்ன்மெண்டாருக்குத் தெரிவித்துக்கொள்ளும். இன்னும் காங்க்ரெஸின் நோக்கம் கைகூடுவதற்கு அநுகுணமான மற்ற கார்யங்களைப் பற்றியும் இந்த காங்க்ரெஸ் கவனித்துவரும். இந்த காங்க்ரெஸுக்கு இந்தியாவிலுள்ள பற்பல வ்யாபார ஸ்தாபனங்களிலிருந்தும் டெலிகேட்டுகள் வருவார்கள். வந்திருக்கும் டெலிகேட்டுகளில் பம்பாய், பெங்கால், மதராஸ், கராச்சி, ரங்கூன், கான்பூர், டெல்லி, லாகூர், அமரிட்ஸார், நாக்பூர்முதலிய இடங்களிலிருந்து வந்திருக்கும் டெலிகேட்டுகளிலிருந்து, மெம்பர்கள் தெரிந்தெடுத்து கமிட்டி அப் மானேஜ்மெண்டு என்று ஒரு நிர்வாகக்கமிட்டி ஏற்படுத்துவார்கள். பம்பாய், பெங்கால், மதராஸ், பேஹார் அண்ட் ஓரிஸ்ஸா, ஐக்யமாகாணங்கள், பஞ்சாப், மத்ய மாகாணங்கள், ஆகிய இந்த மாகாணங்களில் உள்ள பலநாளாய் இருந்து வருவனவும், இந்திய வ்யாபாரத்திலும கைத்தொழில்களிலும ஊக்கம் பாராட்டிவருவனவுமான சேம்பர் அப் காமர்ஸ், லீக்குகள், ஸங்கங்கள் முதலியவைகள் அந்தந்த மாகாணங்களுக்கு டெலிகேட்டுகளைத் தெரிந்தெடுக்கும்.

PRESERVING FRUITS.

பழங்களைக் கெட்டுப்போகாமல் வைத்திருப்பது.

பழங்களை வெகு காலம் கெட்டுப்போகாமல் வைத்திருக்க ஒரு புது முறை ஒரு ப்ரெஞ்ச் சாஸ்த்ரியால் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. மாம்பழம் போன்ற சதைப் பற்றுள்ளபழங்கள் கெடுவதற்குக் காரணம் என்னவென்றால் அந்தப் பழங்களின் தோல்களில் கண்ணுக்குத் தெரியாத சிறு ஜீவராசிகள் இருக்கின்றன. இவைகளாலும் ஸூர்ய உஷ்ணத்தாலும் பழங்கள் சீக்கிரம் அழுகிக் கெட்டுப்போகின்றன. இந்த ஜீவராசிகளை நாம அழித்து விட்டால் பழங்கள் வெகுகாலம் கெடாமலிருக்கும். அந்த முறை பின் வருமாறு.

3-பாகம் பார்மலின் (Formalin) த்ராவகத்தை 97-பாகம் சுத்த ஜலத்தில் கலந்து பழங்களை அதில் 10 நிமிஷம் அமிழ்த்திவைக்கவேண்டும் இப்படி வைத்தபின்பு பழங்களை 5-நிமிஷநேரம் சுத்த ஜலத்தில் வைத்திருந்து எடுத்தால் பழங்களின் மேலுள்ள நுட்பமான ஜீவராசிகள் இறந்துபோய் விடுகின்றன. தோலை உரிக்காமல் சாப்பிடும் த்ராக்ஷை போன்ற பழங்களைத் தான் ஜலத்தில் போட்டு எடுக்கவேண்டியது அவச்யம். தோலை உரித்து எறிந்து உபயோகிக்கும் ஆரஞ்ஜ்பழமபோன்ற பழங்களை ஜலத்தில் போட்டு எடுக்கவேண்டியதில்லை. பார்மலின் ஜலத்தில் மட்டும்போடுவது போதும். பழங்களை ஜலத்திலிருந்து எடுத்தவுடன் சுத்தமான இடத்தில் வெயில் படாமல் வைத்துக் காற்றிலேயே உலரும்படி செய்ய வேண்டும. இந்த முறை எளிதில் செய்யக் கூடியதாயும் அதிகச்செலவு பிடிக்காததாயும் இருப்பதால் யாவரும் இதை எளிதில் செய்து பார்க்கலாம்.

BUSINESS ENTERPRISE IN INDIA.

இந்தியாவில் வ்யாபார ஊக்கம்.

இந்தியாவில் சென்ற அக்டோபர் மாஸம் அடியில் கண்ட விவரப்படி 26 கம்பெனிகள் ரெஜிஸ்டர் செய்யப்பட்டன.

6	பாங்கிக் கம்பெனிகள்	...	ரூ. 64,00,000
5	இன்ஷூரென்ஸ் கம்பெனிகள்	...	2,65,000
1	கப்பல் வ்யாபாரக் கம்பெனி	...	1,00,000
8	வ்யாபாரக் கம்பெனிகள் (மேலே சொன்னவை தவிர)	...	11,40,000
1	பருத்தி மில்	...	7,00,000
1	மாவு மில்	...	1,50,000
1	எண்ணெய் மில்	...	2,00,000
1	தோட்டக் கம்பெனி	...	5,00,000
2	கம்பெனிகள் (மேலே சொன்னவை தவிர)	...	1,00,100
26		மொத்தம்	95,55,100

The Educational World.

வித்யாவிஷயப் பகுதி

MORAL INSTRUCTION.

ஸன்மார்க்க போதனை.

பம்பாய் கவர்ன்மெண்டார் பம்பாய் ராஜதானியில் ஸன்மார்க்கபோதனை எப்படிக் கற்பிக்கிறதென்பது விஷயமாய் பலவிடங்களில் போய் நிரூபணம்செய்வதற்காக மிஸ்டர் எப், ஜே. கௌல்டை நியமித்திருந்தார்கள். அவர் தமது சுற்று ப்ரயாணத்தைப்பற்றி ஒரு ரிபோர்ட் எழுதி வித்யா டிரெக்டருக்கு அனுப்பியிருக்கிறார். அந்த ரிபோர்ட்டில் ஸன்மார்க்க போதனை ஸம்பந்தமாக பற்பல யோசனைகள் தெரிவித்திருக்கிறார். அவை யாவன.—

(1) குறைந்தது வாரத்துக்கு ஒரு தடவை பத்து நிமிஷம் முதல் 30-நிமிஷம் வரையில் ஒவ்வொரு வகுப்புக்குமாவது அல்லது பல வகுப்புகளை சேர்த்தாவது ஸன்மார்க்க விஷயங்களைப் பற்றி பாடங்கள் நடத்தவேண்டும்.

(2) ஸன்மார்க்க விஷயமாகப் பாடங்கற்பிப்பதற்கு உபாத்யாயர்களுக்கு உபயோகப்படக்கூடிய புஸ்தகங்களை தெரிந்தெடுத்துக் கொடுக்கவேண்டும். உபாத்யாயர்கள் தங்களுக்கு உசிதமென்று தோன்றும் உதாரணங்களையும் பாடங்களில் சேர்த்துக்கொள்ளலாம்.

(3) ஒரு உபாத்யாயர் நன்றாய்க் கற்பிக்கக்கூடியவரா என்பதை யறிவதற்கு நல்லபரீக்ஷை அவர் தமது பிள்ளைகளை ஸன்மார்க்க வழிகளில் பழக்குகிறாரா என்பதை யறிவதே என்னும் விஷயத்தை உபாத்யாயர்கள் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவேண்டும்.

(4) வழக்கமாய் பிள்ளைகளை எழுதசெய்தோ அல்லது வாய்மொழியாகவோ பரீக்ஷிப்பதைவிட உபாத்யாயர்கள் உபயோகிக்கும் போதனுமுறைகள் சரிதானுவென்று அப்போதப்போது போய்ப் பரீக்ஷிப்பது மேலானது.

(5) ஸன்மார்க்க போதனை விஷயமாக மேல் பார்வை செய்யவும், அதை வ்ருத்தி செய்யவும் பின் வருமாறு செய்யலாம்.

(a) ஒரு ஆலோசனைக் கமிட்டி ஏற்படுத்தி அந்தக் கமிட்டியை அடிக்கடி ஆலோசனை கேட்பது.

(b) ஸன்மார்க்க போதனை விஷயத்தில் ரொம்ப ஊக்கம் பாராட்டும் உபாத்யாயர்களை அது விஷயத்தில் இன்னம் ஊக்கம் பாராட்டும்படி தூண்டி, அவர்களை அடிக்கடி ட்ரெய்னிங் காலேஜிலும் மற்ற விடங்களிலும் பாட நிரூபண உபாத்யாயர்களாக வேலை பார்க்கும்படி செய்வது.

(c) பூகோளசாஸ்த்ரம், தேச சரித்ரம், இலக்கியம், இயற்கைப்பாடம் முதலியவைகளில் மனுஷ்யஜனஸமூக ஸம்பந்தமான விஷயங்களை நன்றாய் எடுத்துக் காட்டுவது.

(d) ட்ரெய்னிங் காலேஜ்களில் மாணவர்களுக்கு ஸன்மார்க்க போதன முறைகளைக் கற்பித்து, மனஸ்தத்வ சாஸ்த்ரம், நீதிசாஸ்த்ரம் ஆகிய இவைகளின் முக்ய அம்சங்களையும் அவர்களுக்குக் கற்பிப்பது.

(6) பிள்ளைகளுக்கு ஸன்மார்க்க விஷயங்களைக் கற்பிப்பதில் மூன்று படிப்படியான நிலைமைகள் இருக்கின்றன. 7-வயஸு வரையில் கிண்டர்கார்ட்டன் பருவம், அதற்குப் பிறகு 14-வயஸு வரையில் ப்ரைமரி; அதற்குப்பிறகு யௌவனம்.

(7) மதுவிலக்கு ஸம்பந்தமான விஷயங்களை ப்ரத்யேகமாய்க் கற்பிக்கவேண்டுவதில்லை. தன் மனதை அடக்கிவைத்துக்கொள்ளு

தல் என்பதைப்பற்றிச் சொல்லும்போது இதைப்பற்றி கற்பிக்கலாம். என்றாலும் மாணவர்களின் பத்தாவது வயதில் ஆரம்பித்து அடுத்து வரும் வருஷங்களில் இதைப்பற்றி ஒழுங்காய்ப் பாடம் கற்பிக்க ஏற்பாடு செய்ய வேண்டும். மதுவிலக்கால் உண்டாகும் நன்மைகளைப் பற்றியே அதிகம் எடுத்துச்சொல்ல வேண்டும். அதனால் நேரும் தீங்குகளை ஸமயம் நேரும் போது எடுத்துக்காட்ட வேண்டும்.

(8) ஒன்றோடு ஒன்று ஸம்பந்தமில்லாத கதைகளை எடுத்துச்சொல்லுவதை விட ஒரு ஒழுங்குடன் ஸன்மார்க்க விஷயங்களைக் கற்பித்து ஸன்மார்க்க ஸம்பந்தமான எண்ணங்களை ஒழுங்குபடுத்துவது ரொம்ப மேலானது.

(9) ஒவ்வொருவரும் ராஜாங்கத்துக்குச் செய்யவேண்டிய கடமைகளை அறிவோடு மனமொப்பிச் செய்து வருவதின் பொருட்டு சிறுவர்களுக்கு கல்வி கற்பிக்கும்போதே ஸன்மார்க்க படிப்பும் கற்பிப்பது ரொம்ப அவச்யமென்பதை சிறுவர்களுடைய கல்வியில் கவலைகொண்ட ஒவ்வொருவரும் அறிந்து கொள்ள வேண்டும். ஸன்மார்க்க போதனையானது எல்லா மதஸ்தர்களும் எல்லா ஜனங்களும் ஒப்புக்கொள்ளக் கூடியதாயிருக்கவேண்டும்.

HOME WORK FOR PUPILS.

மாணவர்களுக்கு வீட்டு அப்யாஸம்.

வீட்டப்யாஸத்தைப் பற்றி ஒரு நிருபர் 'நல்லாசிரியனி'ன் ஸமீப ஸஞ்சிகை யொன்றில் ஒருவ்யாஸம் எழுதி யிருக்கிறார்.

உபாத்யாயர்கள் பிள்ளைகளுக்கு வீட்டில் செய்து வரும்படி கொடுக்கும் பார்த்தெழுதல், வ்யாஸம் எழுதல், கணக்குப்போடுதல் முதலிய அப்யாஸங்களை ஸரிவர எழுத்துப் பிழையின்றி கூடியவரையில் லக்ஷணமாய் எழுதுகிறார்களாவென்று ப்ரதி தினம் தணிக்கை செய்யவேண்டியது அவச்யம்.

வீட்டப்யாஸத்தின் உபயோகம்:—

(1) வீட்டப்யாஸம் பிள்ளைகளின் படிப்புக் காலத்தை வ்ருத்தி செய்து, படிப்பில் அபிவ்ருத்தி ஏற்படுவதற்கு ஆதாரமாயிருக்கின்றன.

(2) வீட்டில் பிள்ளைகள் சோம்பலாயிருப்பதை நீக்கி அவர்களிடத்தில் சுறுசுறுப்பை வ்ருத்தி செய்கிறது.

(3) பள்ளிக்கூடத்தில் பிள்ளைகளின் படிப்பை அளவிட்டுப் பெற்றோர்களைத் திருப்தி செய்கிறது.

(4) பிள்ளைகளிடத்தில் ஸ்வய நம்பிக்கை, கடமை, ச்ரத்தை முதலிய நற்குணங்கள் அமைகின்றன.

(5) பாடசாலையில் கற்பித்த பாடத்தைப் பிள்ளைகளின் மனதில் பதியவைக்க ஹேதுவாகிறது.

(6) மறுநாள் கற்பிக்கப்போகிற பாடத்தை தங்கள் சக்திக்கு உள்பட்ட வரையில் பிள்ளைகளும் தயார்செய்யும்படி செய்கிறது. இவ்விதமாய் பிள்ளைகளிடத்தில் ஸ்வயமாகயோசிக்கும் வழக்கத்தை உண்டாக்குகிறது.

வீட்டப்யாஸமானது மனோப்யாஸம், எழுத்து அப்யாஸம் என இருவகைப்படும்.

மனோப்யாஸமாவது கற்பித்த பாடத்தைத் தயார் செய்தலாம். எழுத்து அப்யாஸமாவது கொடுத்த வேலையை ஸ்லேட்டிலாவது, நோட்டுப் புஸ்தகத்திலாவது எழுதிக்கொண்டு வருவதாம். கீழ் வகுப்புகளுக்கு எழுத்தப்யாஸம் அதிகமாய் கொடுக்கக்கூடாது. மனோப்யாஸமும் கொஞ்சமாய்க் கொடுக்க வேண்டும். அப்யாஸங்கள் பிள்ளைகளின் சக்திக்கு மேற்பட்டவையாகவாவது அதிக யுக்தியுள்ளவையாகவாவது இருக்கக் கூடாது. அப்படியிருந்தால் பிள்ளைகள் அப்யாஸங்களைத் தாங்களே ஸ்வயமாய்ச்செய்யாமல் பிறருடைய உதவியால் செய்து கொண்டு வருவார்கள். அப்யாஸம் அளவில் கொஞ்சமாயும் உபாத்யாயர் ஸாவ

பத்தில் திருத்தக்கூடியதாயும் இருக்கவேண்டும். அப்யாஸங்களை கண்டபடி விதித்து ச்ரத்தை குறைவாய்த் திருத்தினாலும் விட்டப்யாஸங்கள் ப்ரயோஜனப்படமாட்டா. மேலும் அவ்வித அப்யாஸங்கள் அச்ரத்தை முதலிய கெட்ட குணங்களைப் பிள்ளைகளிடத்தில் உண்டாக்கும். உபாத்யாயர்கள் எவ்வளவுக் கெவ்வளவு ஜாக்ரதையாய் திருத்தித் தப்பிதங்களை பிள்ளைகளுக்கு எடுத்துக் காட்டுகிறார்களோ அவ்வளவுக் கவ்வளவு அது ப்ரயோஜனமுள்ளதாகும்.

அரை குறையாய்ச் செய்துவரும் அப்யாஸங்களை உடனுக்குடனே பூர்த்தி செய்யச் சொல்லவேண்டும். பிள்ளைகளின் கையெழுத்தை கவனிப்பதோடு எழுத்துப் பிழைகளையும் சரியாய்ப் பார்க்க வேண்டும்.

நோட்டுப் புஸ்தகங்கள் ஒரே அளவுள்ளவையாயும் ரூலிட்டவையாயும் இருக்க வேண்டும். ஒவ்வொரு பாடத்திற்கும் ஒரு புஸ்தகம் இருப்பது நலம். புஸ்தகங்கள் அதிகப் பருமனாயிராமல் சிறியவையாயு மிருக்கவேண்டும். இப்படி யிருந்தால் வருஷத்திற்கு ஒரு பாடத்திற்கு இரண்டல்லது மூன்று புஸ்தகங்கள் தான் தேவை. ஆரம்பத்தில் வைத்திருந்த புஸ்தகத்தை விட பின்னிட்டு வைத்து வரும் புஸ்தகம் எல்லா விஷயத்திலும் லக்ஷணமாயிருக்கும். நோட்டு புஸ்தகங்களி லுள்ள காகிதம் நல்லதாயிருக்கவேண்டும். காகிதம் நன்றாயிராவிடில் ஒருபுறமே எழுதவேண்டும். பக்கங்களின் இடது ஓரத்தில் காலியிடம் 1 அங்குலம் விட்டு அதில் அப்யாஸத்தின் எண்ணிக்கையையும் தேதியையும் குறிக்கவேண்டும். (உ-ம்) நம்பர் $\frac{18}{24\text{-}10\text{-}11}$. ஒவ்வொருநாள் அப்யாஸத்தின் கீழ் குறுக்குக் கோடு இழுக்கவேண்டும். ஒருநாளை அப்யாஸம் ஒரு பக்கத்தில் முடிந்துவிடுமாகில் குறுக்குக் கோடு அவச்யமில்லை.

LITERACY IN INDIA.

இந்தியாவில் எழுதப்படிக்கத் தெரிந்தவர்கள்.

1911-ம் வருஷத்து ஸென்ஸஸ் கணக்குகளின்படி இந்தியாவில் எழுதப்படிக்கத் தெரிந்தவர்கள் கோடியே 85 லக்ஷம் பேர். இவர்களில் 15-லக்ஷம் பேருக்குத்தான் இங்க்லீஷ் எழுதப்படிக்கத்தெரியும். அதாவது 12-பேருக்கு ஸ்வதேசபாஷை எழுதப்படிக்கத் தெரியுமானால் ஒருவருக்குத்தான் இங்க்லீஷ் எழுதப்படிக்கத் தெரியும். பத்து வருஷத்துக்கு முன்னால், அதாவது 1901-ம் வருஷத்து ஸென்ஸஸ்படி ஒரு கோடியே 55-லக்ஷம் ஜனங்கள் எழுதப்படிக்கத் தெரிந்திருந்தார்கள். அவர்களுள் 11-லக்ஷத்து 20-ஆயிரம் ஜனங்களுக்குத்தான் இங்க்லீஷ் பாஷை எழுதப்படிக்கத் தெரியும், அதாவது 14-ல் ஒருவருக்குத் தான் இங்க்லீஷ் பாஷை தெரிந்திருந்தது. மொத்தத்தில் இங்க்லீஷ் எழுதப்படிக்கத்தெரிந்தவர்களுடைய ஸங்க்யை அதிகமாகியிருக்கிறது.

இங்க்லீஷ் கற்பிக்கப்படும் பள்ளிக்கூடங்கள் விஷயத்தில் ரொம்ப கவனம் செலுத்தப்பட்டுவருவதும், ஜனங்கள் அந்தப் பள்ளிக்கூடங்களுக்குத் தங்கள் பிள்ளைகளை அனுப்ப ப்ரியப்படுவதும் இதற்குக் காரணமாயிருக்கலாம். வங்காளத்தில் எழுதப்படிக்கத் தெரிந்தவர்களில் 9-ல் ஒருவருக்கு இங்க்லீஷ் எழுதப்படிக்கத் தெரியும். பம்பாயிலோ-7-ல் 1; சென்னை ராஜதானியில் 11-ல் 1; பஞ்சாபில்-7 ல்-1; ஐக்ய மாகாணங்களில் 11-ல் 1. எல்லாமாகாணத்திலும் 1901-ம் வருஷத்தில் எழுதப்படிக்கத் தெரிந்த ஸ்த்ரீகளில்-9-பேரில் ஒருவருக்குத்தான் இங்க்லீஷ் தெரியும். இந்த விகிதம் 1911-ம் வருஷத்தில் 10-ல் 1-ஆகக் குறைந்து விட்டது. இந்த வீதம் மாகாணங்களில் பின் வருமாறு இருக்கிறது. வங்காளம் 7-ல் 1; பம்பாய் 6-ல் 1; (1901-ம்

வருஷத்தில் 5-ல் 1;) சென்னைராஜதானி 10-ல் 1; (1901-ம் வருஷத்தில் 8-ல் 1;) பஞ்சாப் 6-ல் 1; (1901-ம் வருஷத்தில் 5-ல் 1;) ஐக்ய மாகாணங்களில் 8-ல் 1; (1901-ம் வருஷத்தில் 5-ல் 1;) இப்படி இங்க்லீஷ் தெரிந்த ஸ்த்ரீகளின் தொகை குறைந்திருப்பதற்குக் காரணம், பள்ளிக்கூடங்களில் ஸ்த்ரீகளுக்கு இங்க்லீஷ் படிப்பதற்கு வேண்டிய சௌகர்யம் போதாமலிருப்பதா அல்லது பெண்களுக்கே இங்க்லீஷ் படிக்க ப்ரியமில்லாமலிருப்பதா என்பதை ஆராய்ந்து அறிய வேண்டும்.

HEAD MEASUREMENT.

தலையை அளப்பது.

பையன்கள் பள்ளிக்கூடங்களில் சேரவந்தால் உபாத்யாயர்கள் பையன்களை வாய்மொழியாகவோ எழுத்து மூலமாகவோ கேள்விகள் கேட்டு அவர்கள் என்ன பதில் சொல்லுகிறார்கள் என்பதைக்கொண்டு அவர்கள் புத்திசாலிகளா, அல்லது அசடுகளா என்பதை அறிவது வழக்கம். இப்படிச் செய்வதற்கு பதிலாக பிள்ளைகளினுடைய தலையின் சுற்றளவை அளந்து பார்ப்பதுதான் சரியான முறையென்று ஒரு நிபுணர் சொல்லுகிறார். தலையின் சுற்றளவைக்கொண்டு சிறுவர்களுடைய புத்திசாலித்தனத்தை அறிந்துகொள்ளலாமென்பது அவருடைய கொள்கை. அவர் 12,000 பள்ளிக்கூடத்துச் சிறுவர் சிறுமிகளைப்பற்றி ஆராய்ச்சி செய்து அந்த ஆராய்ச்சிகளின் பலன்களை ஸமீபத்தில் வெளியிட்டிருக்கிறார். தலையின் சுற்றளவு ஒரு குறிப்பிட்ட அளவுக்குக் குறைந்தால் சிறுவர்களுக்கு ரொம்ப புத்திசாலித்தனமிருக்காதாம். அவர் குறிப்பிடும் அளவு பின்வருமாறு:—

		அங்குலம்.
7-வயது	பையன்கள்	... 18·72 (18¾)
	பெண்கள்	... 18·33 (18¼)
10-வயது	பையன்கள்	... 19·29 (19¼)
	பெண்கள்	... 18·90 (18¾)
12-முதல் 14-வயது	பையன்கள்	... 19·60 (19)
	பெண்கள்	... 19·29 (19¼)

ஒரு வகுப்பிலுள்ள மாணவர்களின் தலையளவுகளையெடுத்து அந்த வகுப்புக்கு சராசரி தலையளவு எவ்வளவு என்று கண்டுபிடித்தால் கெட்டிக்காரர் மாணவர்களின் தலைச் சுற்றளவு அந்த சராசரி தலையளவுக்குக் குறைந்ததாயிருப்பது அபூர்வமாயிருக்குமாம். மந்தமான மாணவர்களின் தலையளவு சராசரி தலையளவுக்கு அதிகமாய் இருப்பதும் அபூர்வமாம். குழந்தைகள் கோர்ட்டில் ஸாக்ஷியாக வரும்போது அவர்களுடைய ஸாக்ஷ்யத்தை ஏற்றுக்கொள்ளலாமா என்பதையறிய குழந்தைகளின் தலையளவை அளந்தும் அறிந்துகொள்ளலாமாம்.

PROVIDENT FUND FOR TEACHERS.

உபாத்யாயர்களுக்கு ப்ராவிடெண்ட் பண்டு.

கொஞ்சகாலத்துக்கு முன்னால் தென்னிந்திய உபாத்யாயர்கள் ஸங்கத்தின் ஸெக்ரெடரி, உபாத்யாயர்களுக்கு ப்ராவிடெண்ட் பண்ட் ஏற்படுத்துவதற்கும், கவர்ன்மெண்ட் ஸ்கூல்களில் பென்ஷன் இல்லாத ஸர்வீஸில் இருக்கும் உபாத்யாயர்களுக்கு வயது சென்றபின் 'உபகாரச் சம்பளம் கொடுக்கும்படிக்கும் ஏற்பாடு' செய்யவேண்டுமென்று வைஸ்ராய்க்கு விண்ணப்பஞ்செய்துகொண்டார். பென்ஷன் இல்லாத ஸர்வீஸில் இருக்கும் உபாத்யாயர்களுக்கு அவர்களுடைய விருத்தாப்பிய காலத்தில் ஏதாவது பணஉதவி செய்யவேண்டுமென்பதைப்பற்றி இந்தியா கவர்ன்மெண்டார் ஆலோசித்து வருவதாக கல்வியிலாகாவிலிருந்து ஒரு கடிதம் ஷை ஸங்கத்தின் ஸெக்ரெடரிக்கு வந்திருக்கிறது.

GRANTS FOR SCHOOLS.

ஸ்கூல்களுக்கு க்ராண்டுகள்.

லோகல் போர்டுகளும் முனிஸிபாலிடிகளும் வைத்து நடத்திவரும் ஸ்கூல்களிலும் காலேஜுகளிலும் உள்ள உபாத்யாயர்களின் சம்பளத்தை உயர்த்துவதற்காக கவர்ன்மெண்டார் ரூ. 94,325 க்ராண்டு கொடுத்திருக்கிறார்கள்,

The Legal World.

வ்யவஹாரப் பகுதி.

RETURN OF DEPOSIT MONEY.

டெபாஸிட் பணத்தைத் திருப்பிக்கொடுப்பது.

ஒரு சரக்கு விற்பதைப்பற்றி விற்பவனும் வாங்குபவனும் ஒரு காண்ட்ராக்ட் ஏற்படுத்திக் கொண்டார்கள். அந்த காண்ட்ராக்ட் ப்ரகாரம் நடப்பதற்கு உத்தரவாதமாக வாங்குபவர் விற்பவரிடத்தில் ஒரு தொகையை டெபாஸிட்டாகக் கொடுத்திருந்தார். குறித்த காலத்தில் வாங்குபவர் சரக்கை வாங்கிக்கொள்ள வேண்டிய தென்பது காண்ட்ராக்டின் முக்யமான நிபந்தனையாக இருந்து, வாங்குபவர் குறித்த காலத்தில் பணத்தைக்கொண்டு வந்து செலுத்தத் தயாராயிராவிட்டால் அவர் டெபாஸிட் பணத்தைத் திரும்பிப் பெறமுடியாது. டெபாஸிட் பணமானது சரக்கின் விலையில் ஒரு பாகமாய் இருந்து, வாங்குபவர் சரக்கைக் குறித்த காலத்தில் பணம் செலுத்திப் பெறாவிட்டால் டெபாஸிட் பணத்தை அவர் இழந்துவிட வேண்டும் என்று காண்ட்ராக்டில் கண்டிருந்தால் அந்த டெபாஸிட் ஒரு ஸெக்யூரிடி போலாகிறது. வாங்குகிறவர் குறித்த காலத்தில் பணம் செலுத்தி சரக்கை எடுத்துக் கொள்ளாவிட்டால் அவர் அந்தப்பணத்தை இழந்துவிட வேண்டியது தான். இது விஷயமாக இந்தியன் காண்ட்ராக்ட் ஆக்ட் 65-வது ஸெக்ஷனும் 74-வது ஸெக்ஷனும் ஆதாரமாகமாட்டா.

சீப் ஜட்ஜ் ஒயிட்:—வாங்குபவர் காண்ட்ராக்டை நிராகரித்து விட்டால் விற்பவர் டெபாஸிட்டை தாமே வைத்துக்கொள்ளலாம். குறிப்பிட்ட காலத்திலேயே சரக்கை வாங்கிக் கொள்ள வேண்டுமென்று யாதொரு நிபந்தனையும் காண்ட்ராக்டில் இல்லாமலிருந்த தென்று வைத்துக்கொள்வோம்; வாங்குபவன் குறிப்பிட்ட காலத்தில் சரக்கை வாங்கிக்கொள்ளாததால் விற்பவன் காண்ட்ராக்டை ரத்து செய்து விடுகிறார் என்றால், வாங்குபவர் தாம் காண்ட்ராக்டில் ஒப்புக்கொள்ளப்பட்ட தேதிக்குப் பிறகு ஒரு ந்யாயமான காலத்திற்குள் காண்ட்ராக்டின்படி நடந்து கொள்ளத் தயாராயிருந்ததாக ரூபிக்க வேண்டும். காண்ட்ராக்டில் குறித்த காலத்தில் தான் சரக்கை வாங்கிக் கொள்ள வேண்டுமென்று ஒரு நிபந்தனையுமில்லாமலிருந்தால் வாங்குபவர் குறித்த தேதியில் சரக்கை வாங்கிக் கொள்ளாததனாலேயே வாங்குபவர் காண்ட்ராக்டை ரத்து செய்ததாகாது. ஆனால் வாங்குபவர் காண்ட்ராக்டை ரத்து செய்வதாக வெளிப்படையாகச் சொல்ல வேண்டு மென்பதும் அவச்யமாகாது.

காண்ட்ராக்ட்செய்துகொண்ட ஒரு பார்ட்டி குறித்த தேதியில் காண்ட்ராக்டின்படி நடக்கத் தவறினால், அவர் தாம் காண்ட்ராக்டை ரத்து செய்யவில்லை யென்பதைத் தாமே ரூபிக்க வேண்டியவராவார்.

ஜட்ஜ் ஸதாசிவய்யர்:—காண்ட்ராக்ட் ஸம்பந்தமான சட்டத்தின் பொதுக் கொள்கைகளை விரித்துச் சொல்லும் விஷயத்தில் இந்தியன் காண்ட்ராக்ட் ஆக்டானது ரொம்ப விரிவாகவே இருக்க வேண்டு மென்று செய்யப்பட்டது. காண்ட்ராக்ட்டின்படி பார்ட்டிகள் நடக்காவிட்டால் அப்படி நடக்காத பார்ட்டிகள் டெபாஸிட் பணத்தை இழந்துவிட வேண்டு மென்று நிபந்தனை செய்திருந்தால் அந்த நிபந்தனைகள் இந்தியன் காண்ட்ராக்ட் ஆக்டின்படி செல்லுமா என்று பார்க்க வேண்டும்,

ஒரு காண்ட்ராக்ட்டை பார்ட்டிகள் நிறை வேற்றுவிட்டால், பார்ட்டிகளுக்கு தர்ம ந்யாய மாய் என்ன கிடைக்க வேண்டியதோ அதைக் கொடுக்க கோர்ட்டுகளுக்கு பூரா அதிகாரம் இருக்கிறது.

நிறைவேற்றப்படாத ஒரு உடன்படிக்கை யின்படி விற்பவர் வாங்கியிருந்த டெபாஸிட் பணத்தை வாங்குபவருக்குத் திருப்பிக் கொடுத்து விடவேண்டும். காண்ட்ராக்ட் நிறை வேறாததனால் அதை ரத்து செய்த விற்பவர், காண்ட்ராக்டின்படி நடக்காத வாங்குபவரிட மிருந்து, அப்படி நடக்காததனால் ஏற்பட்ட நஷ்டத்தைப்பெற வ்யாஜ்யம் போடவேண்டும்.

1913-மதராஸ் வீக்லி நோட்ஸ் 341.

ATTACHING A POLICY OF INSURANCE.

இன்ஷூரென்ஸ் பாலிஸியை ஜப்தி செய்தல்.

ஒருவர் தமது ஆயுளின் மேல் இன்ஷூர் செய்து அந்த இன்ஷூரென்ஸால் கிடைக்கும் பணத்தை தமது மனைவியடைய வேண்டுமென்று பாலிஸியில் குறிப்பிட்டிருந்தார். அவர் இறந்த பிற்பாடு அவர் மேல் கடனுக்காக வ்யாஜ்யம் போட்டு டிக்ரீ வாங்கியிருந்தவர்கள் அந்த இன்ஷூரென்ஸ் பாலிஸியை ஜப்தி செய்தார்கள். இன்ஷூர் செய்திருந்தவருடைய விதவை அந்த ஜப்தியை ரத்து செய்ய வேண்டுமென்று கோர்ட்டில் மனுப் போட்டாள். அவளுடைய மனுவை கோர்ட்டார் தள்ளிவிடவே, அவள், தனது புருஷன் மேல் கடனுக்காக டிக்ரீ வாங்கியிருந்தவர்கள் அந்த டிக்ரீயை நிறைவேற்றுவதற்காக இன்ஷூரென்ஸ் பாலிஸியை ஜப்தி செய்வது கூடாது என்று ஒரு வ்யாஜ்யம் போட்டாள். கீழ்க்கோர்ட்டில் விதவைக்கு ஸாதகமாகத் தீர்ப்பாயிற்று. இந்த வ்யாஜ்யம் பம்பாய் ஹைகோர்ட்டுக்கு அப்பீலுக்கு வந்ததில் ஹைகோர்ட்டார் பின் வருமாறு தீர்ப்பு செய்தார்கள்:—

பாலிஸியானது ஸிவில் ப்ரொஸீஜர் கோடு 20-வது ஸெக்ஷனில் சொல்லியிருக்கிற படி, ஜட்ஜ்மெண்ட் டெடர் அதாவது தீர்ப்பு விரோதமாக அடைந்தவருக்கு ஸொந்தமான பணத்துக் கேற்பட்டுள்ள ஸெக்யூரிடியாகவாவது, அல்லது விற்கக்கூடிய ஸொத்தாகவாவது, இருந்து அதை அவர் தமக்கு ப்ரயோஜனப் படக்கூடிய விதமாக உபயோகப்படுத்தக் கூடியதாய் இருந்தால் அதை ஜப்தி செய்யலாம். பாலிஸியானது இறந்து போனவருக்கும் இன்ஷூரென்ஸ் கம்பெனிக்கும் ஏற்பட்ட ஒரு உடன்படிக்கையாகும். இந்த உடன்படிக்கையாலுண்டாகும் பலன் இன்ஷூர் செய்தவருடைய மனைவிக்குச் சேரவேண்டுமென்று அதில் சொல்லியிருக்கிறது. அதன்படி இன்ஷூரென்ஸ் கம்பெனியானது இன்ஷூர் செய்தவர் இறந்து போனதாக எழுத்து மூலமான ஸாக்ஷ்யம் கிடைத்தவுடன் அவருடைய ட்ரஸ்டீக்கும், ட்ரஸ்டீயில்லாவிட்டால் இறந்தவருடைய மனைவிக்கும், மனைவி இறந்துபோயிருந்தால் வார்ஸுகளுக்கும், பாலிஸியில் கண்ட தொகையைக் கொடுப்பதாக வாக்களிக்கிறது. இன்ஷூர் செய்தவருடைய மனைவிக்காக ட்ரஸ்டீயை நியமிக்கிறவரையில் இன்ஷூர் செய்தவர் ப்ரீமியத்தை செலுத்தாமலிருந்தோ அல்லது பாலிஸியை கடன் கொடுத்தவர் பேருக்கு மாற்றியோ தமது மனைவிக்குப் பணம் கிடைக்காமல் செய்து விடக்கூடும். பாலிஸியால் தாம் அடையக் கூடிய பலனை பிறருக்கு மாற்ற வேண்டுமானல் எழுத்து மூலமாய்த்தான் மாற்றலாம். இறந்தவர் மேற்குறித்த இரண்டு வழிகளில் ஒன்றையும் செய்யவில்லை. ஆகையால் அவர் இறந்ததன்மேல் பாலிஸியானது அவருடைய ஆஸ்தியில் ஒருபாகமாக ஆய்விட்டது,

இன்ஷுரென்ஸ் கம்பெனி மேல் வ்யாஜ்யம் வழக்குகள் செய்யக்கூடிய பாத்யதையும் இறந்தவருடைய எக்ஸிக்யூடரிடமிருந்து வருவதோடு மனைவிக்கு ஸாதகமாக ஒரு ட்ரஸ்டும் இல்லாததால் அந்த பாத்யதையானது எக்ஸிக்யூடரிடம் குறைவுபடாமலிருந்து வருகிறது. மேலும் இன்ஷுரென்ஸ் கம்பெனியும் இன்ஷுர் செய்தவரும் செய்து கொண்ட ஒரு உடன்படிக்கையில் மனைவியானவள் பணம் கொடுப்பதாக வாக்களிப்பவராகவாவது வாங்கிக் கொள்ளுபவராகவாவது சேர்ந்திருக்கவில்லை. ஆகையால் இன்ஷுர் செய்தவருடைய மனைவி அந்த உடன்படிக்கையில் ஒரு பார்ட்டியாக மாட்டாள். அந்த உடன்படிக்கையில் ஒரு பார்ட்டியாயிராத ஒருவர் அந்த உடன்படிக்கைமேல் வ்யாஜ்யம் செய்யலாமென்பதற்கு யாதொரு ஆதாரவுமிருப்பதாகத் தெரியவில்லை. ஆகையால் இன்ஷுரென்ஸ் பாலிஸியானது கடனுக்காக ஜப்தி செய்யக் கூடியது.

PROMISSORY NOTE AS EVIDENCE.

ப்ராமிஸரி நோட்டு ருஜுவாக ஏற்படுதல்.

ஒரு பத்ரம் ப்ராமிஸரி நோட்டா இல்லையா என்பதை அந்த பத்ரத்தில் உபயோகித்திருக்கும் வார்த்தைகளைக் கொண்டு தீர்மானிக்க வேண்டும். ஒரு பத்ரம் ப்ராமிஸரி நோட்டென்றால் அதில் ஒரு குறிப்பிட்ட தொகையை யாதொரு நிபந்தனையும் இல்லாமல் கேட்டபோது கொடுப்பதாக எழுதிக்கொடுத்தவர் வாக்களித்திருக்க வேண்டும். அந்தப் பத்ரத்தால் பத்ரம் எழுதிக்கொடுத்தவர் யாருக்கு எழுதிக் கொடுத்தாரோ அவருக்கு ஒரு குறிப்பிட்ட தொகை கொடுக்கக் கடமைப்பட்டவர் என்று ஏற்பட்டால் மாத்ரம் போதாது. ஒரு ப்ராமிஸரி நோட்டில் பின்வருமாறு வாக்யங்கள் இருந்தன.

"(இன்னாரு)க்கு (இன்னா)ர் (இன்ன) தேதியில் எழுதிக் கொடுத்த ப்ராமிஸரி நோட்டு: நாளது தேதியில் உங்களுடைய கடையில் நான் ஜவளி விலைக்கு வாங்கின வகையில் பட்டியில் கண்டிருக்கிறபடி நான் கொடுக்கவேண்டிய தொகை ரூ 600. இந்தத் தொகையை நூற்றுக்கு $1\frac{1}{4}$ விதம் வட்டியுடன் கேட்டபோது தங்களுக்காவது தங்களுடைய உத்தரவு பெற்றவர்களுக்காவது கொடுப்பேனாகவும்." மேலே காட்டியுள்ள பத்ரத்தில் பத்ரம் எழுதிக் கொடுத்தவர் யாதொரு நிபந்தனையுமில்லாமல் பணம் செலுத்துவதாய்ச் சொல்லுவதோடு அது ஒரு ப்ராமிஸரி நோட்டென்றும் சொல்லுவதால் அந்தப்பத்ரம் ஒரு ப்ராமிஸரி நோட்டேயாகும். அதில் சரியானபடி ஸ்டாம்பு ஒட்டாமலிருந்தால் அதை ருஜுவாக ஏற்றுக்கொள்ள முடியாது. இ. லா. ரி., 36 மதராஸ் 370.

RESPONSIBILITY OF DUBASH.

துபாஷின் பொறுப்பு.

வாதி, ப்ரதிவாதிகளுடைய கம்பெனியில் சீமை ஜவுளி துபாஷாயிருந்து அந்த வகையில் கம்பெனிக்கு நஷ்டம் நேரிட்டால் தாம் ஜவாப்தாரியாக இருப்பதாய் ஒப்புக் கொண்டார். ப்ரதிவாதிகள் மெஸர்ஸ் தேசி பெருமாள் செட்டி கம்பெனியோடு மாஸாமாஸம் நூல் பேல்கள் டெலிவர் செய்வதாக ஒப்பந்தம் செய்து கொண்டார்கள். அந்தப்படி ப்ரதிவாதிகள் ஸப்ளை செய்யவில்லை. சரக்குகள் காலதாமஸமாய் வந்தன. மெஸர்ஸ் பெருமாள் செட்டிக்கு ப்ரதிவாதிகள் நோட்டீஸ் கொடுத்தார்கள். பெருமாள்செட்டி சரக்குகளை எடுக்கவில்லை. ஆகவே ப்ரதிவாதிகள் சரக்குகளை பக்கத்தில் விற்றுப்போட்டு அதனால் உண்டான நஷ்டம் ரூ. 10, 990-10-யை துபாஷின் பேரில் 'பத்தெ'ழுதினார்கள். இப்படி 'பத்து' எழுதினது வாதி துபாஷுக்குத் தெரியாது. தெரிந்தவுடன் வாதி வ்யாஜ்யம் கொண்டு வந்தார்.

ஒப்பந்தப்படி ப்ரதிவாதிகள் பெருமாள் செட்டி கம்பெனிக்கு சரக்கை காலாகாலத்தில் கொடுக்கவில்லை யாதலால், அவர்கள் சரக்கை ஒப்புக்கொள்ளவில்லை யென்றும், ஆதலால் ப்ரதிவாதியின் அலக்ஷ்யமானவும் அஜாக்ரதையானவுமான நடவடிக்கைக்காக துபாஷின் பேரில் 'பத்ர' எழுத ப்ரதிவாதிகள் பாத்யமற்றவர்கள் என்றும், ஆகவே வாதிக்கு ரூ 5900-க்கும் செலவு தொகைக்கும் டிக்ரி கொடுப்பதாகவும் ஹைகோர்ட்டார் தீர்ப்பு சொன்னார்கள்.

EX PARTE DECREE.

எக்ஸ்பார்டி டிக்ரீ.

எக்ஸ்பார்டி டிக்ரீ கொடுக்கப்பட்ட ஒரு வ்யாஜ்யத்தில் டிக்ரீ கொடுத்த பிறகு ப்ரதிவாதி இறந்து போய்விட்டால் இறந்து போனவருடைய "லீகல் ரெப்ரெஸெண்டெட்டிவ்" அதாவது, சட்டப்படி அவருடைய ஸொத்துக்களை பார்த்து வருகிறவர், அந்த வ்யாஜ்யத்தில் ஒரு கக்ஷிக்காராக சேர்க்கப்பட்டிருந்தாலும் சரி, சேர்க்கப்படாமலிருந்தாலும் சரி, அவர் லிமிடேஷன் ஆக்ட் 164-வது ஸெக்ஷன்படி கொடுக்கப்பட்டிருக்கும் காலத்துக்குள் அந்த டிக்ரீயை மாற்றுவதற்கு மனுச்செய்து கொள்ளலாம். லிமிடேஷன் ஆக்ட் 181-வது ஸெக்ஷன் இந்த விஷயத்திற்கு ஆதாரமாகாது.

ஒரு வ்யாஜ்யத்தில் முதலில் ப்ரதிவாதியாக இருந்தவருடைய எக்ஸிக்யூடர் டிக்ரீயை மாற்றுவதற்கு மனுப்போடும்போது அவர் பெயர் ரிகார்டில் இருந்திராவிட்டாலுங் கூட லிமிடேஷன் ஆக்ட் 164-வது ஸெக்ஷனில் கூறப்பட்ட "ப்ரதிவாதி" என்னும் வார்த்தையில் இந்த எக்ஸிக்யூடரும் அடங்கும்.

PARTNERSHIP.

கூட்டு வ்யாபாரம்.

ப்ரஸ்தாபக்கேஸில் வாதிப்ரதிவாதி இரண்டு பேரும் ஒரு கூட்டாகச்சேர்ந்துகொண்டு புல் லறுப்பதற்காக ஒரு ரயில்வே கம்பெனியினிடம் சில நிலங்களைக் குத்தகைக்கு எடுத்துக் கொண்டார்கள். இவர்கள் ரெயில்வே கம்பெனிக்குக் கொடுக்க வேண்டிய பணத்துக்காக கம்பெனியார் இவர்கள் மேல் வ்யாஜ்யம் போட்டு டிக்ரீ வாங்கிக்கொண்டு, கொடுக்க வேண்டிய பணத்தை வாதியினிடமிருந்து வஸூல் செய்து கொண்டார்கள். கூட்டு வ்யாபாரக் கணக்கைத் தீர்ப்பதற்காக வ்யாஜ்யம் போடுவதற்கு காலாவதியான பிறகு, வாதி, ரெயில்வே கம்பெனிக்கு ப்ரதிவாதி கொடுக்கவேண்டிய பாகத்துக்காக ப்ரதிவாதிமேல் ஸ்மால்காஸ் கோர்ட்டில் வ்யாஜ்யம் போட்டார்.

கூட்டு வ்யாபாரக்கணக்கை வாதி ப்ரதிவாதி தீர்க்காமல் போனது ரெயில்வே கம்பெனிக்குக் கொடுக்க வேண்டிய பாகத்துக்காக வ்யாஜ்யம் போடுவதற்கு ஒரு தடையாகாது. வாதி ஸ்மால்காஸ் கோர்ட்டில் வ்யாஜ்யம் கொண்டு வந்தது ந்யாயமானது. ஸ்மால்காஸ் கோர்ட்டார் அந்த கேஸை விசாரிக்கலாம்.

11. அல்லகபாத் லா ஜானல் 657.

MISTAKE IN A DOCUMENT.

ஒரு பத்ரத்தில் உள்ள தவறு.

ஒரு ஈட்டுக்கடன் பத்ரத்தில் ஈடுவைக்கப்பட்டிருந்த ஒரு ஸொத்து ஒன்றின் வடக்கேயிருப்பதாகக் கண்டிருந்தது. ஆனால் உண்மையில் அந்த ஸொத்து தெற்கே யிருந்தது. இந்தத் தவறானது ஈட்டுக்கடன் பத்ரத்தின் மேல் போடப்பட்ட ஒரு வ்யாஜ்யத்தில் தெரியாமலிருந்து வந்து டிக்ரீயும் ஆகிவிட்டது. நிறைவேற்று நடவடிக்கைகளின் போது இந்தத் தவறு தெரியவந்ததின்மேல் அதைத் திருத்துவதற்காக டிக்ரீயை மாற்றவேண்டு மென்று மனுசெய்து கொள்ளப்பட்டது.

அந்தத்தவறு எழுத்துப்பிழை யாகுமே தவிர வேறு ஒன்றுமில்லை. கோர்ட்டாருக்கு டிக்ரியை மாற்றுவதற்கு அதிகாரம் உண்டு.

The Sanitary World.
ஸுகாதாரப் பகுதி.

SOME ERRORS IN HYGIENE.

ஸுகாதாரத்தைப்பற்றிய சிலதவறான கொள்கைகள்

ஸுகாதாரத்தைப் பற்றிய சில தப்பான கொள்கைகளில் குடி ஜலத்தைக் காய்ச்சிக் குடிக்க வேண்டுமென்பதைப்பற்றி காப்டன் ராஸ் சொன்னதை சென்ற மாஸம் எழுதியிருந்தோம். இந்த மாஸம் தேக ஸ்திதிக்காக வேறிடம் செல்லுதலைப் பற்றியும், வ்யாதி க்ருமிகளைப் போக்கும் மருந்துகளைப்பற்றியும் எழுதுகிறோம்.

சீதோஷ்ணஸ்திதி விஷயம்.

சீதோஷ்ணஸ்திதி விஷயத்திலும் பலர் தப்பெண்ணங்கொண்டிருக்கிறார்கள். ஒரு இடத்தில் வஸிப்பவர் வேறு இடங்களுக்குப் போய் அங்கே வேறு காற்றை ச்வாஸிப்பதால் அவருக்கு தேகஸுகம் ஏற்படுகிறதென்று பலர் ஐரோப்பிய வைத்யர்கள் நம்பி வருகிறார்கள். இப்படி ச்வாஸிக்கிற காற்று வித்யாஸமாயிருப்பதால் அல்லது அவ்விடங்களில் உள்ள காற்றும் ஜலமும் வித்யாஸமாயிருப்பதாலேயே தேகஸுகம் ஏற்படுகிறது என்று எண்ணி வருகிறார்கள். தேகஸுகம் ஏற்படுகிறது என்பது என்னவோ வாஸ்தவந்தான். ஆனால் காற்றானது இடத்துக்கிடம் ரொம்ப மாறியிருக்கிறதென்றாவது, அல்லது காற்றில் வ்யாதி தீர்க்கும் குணமிருக்கிறதென்றாவது சொல்வதிற்கில்லை. ஸாதாரணமாய் உபயோகிக்கும் ஜலத்திலுங்கூட வ்யாதியைத் தீர்க்கக்கூடிய குணம் இருக்கிறதாகவும் தெரியவில்லை. ஆனால் இடம் விட்டு இடம்போனதால் ஆகாரமும் ஜலமும் வித்யாஸப்பட்டு, அதனால் குடலில் ஒரு வித மாறுபாடு ஏற்பட்டு, வ்யாதிஸ்தருக்கு தேகஸுகம் உண்டாக இடமேற்படுகிறது. இதுவே தகுந்த காரணமாயிருக்கவேண்டும் என்று காப்டன் ராஸ் அபிப்ராயப்படுகிறார். காற்று ஈரம் ஆகிய இவைகளின் தன்மை வித்யாஸப்படுவதும் தேகஸுகம் ஏற்படுவதற்கு அநுகுணமாயிருக்கும் என்றாலும், அது மாத்ரமே தேகஸுகத்துக்குக் காரணமாகும் என்பது அவ்வளவு தகுந்த காரணமல்ல என்கிறார்.

வ்யாதிக்ருமிகளைக் கொல்லும் மருந்து.

இது விஷயமாய் ஜனங்கள் ரொம்ப தப்பெண்ணங் கொண்டிருக்கிறார்கள். இந்த மருந்துகள் எக்காலத்திலும் ரொம்ப அவச்யமானவையென்றும், எப்போதும் நன்மையை உண்டாக்கக் கூடியவை என்றும், ஜனங்கள் எண்ணிவருகிறார்கள். வ்யாதி க்ருமிகளைக்கொல்லும் மருந்துகளின் நன்மையைப் பற்றி ஆராய்ந்தவர்கள் பாஸ்டரும் லிஸ்டரும் ஆவார். ஆனால் அவர்களுடைய மேலான கொள்கைகளை ஜனங்கள் தங்களுடைய மனஸுக்குத் தோன்றியவாறு மாற்றி இக்காலத்தில் அநுஷ்டித்துவருகிறார்கள். எல்லா ஐரோப்பிய ராணுவ உத்யோகஸ்தர்களும் மற்ற உத்யோகஸ்தர்களும் கல்வி நலம் வாய்ந்த இந்தியர்களில் பலரும் தங்களுடைய ஊர்களில் தொத்துவ்யாதி நேர்ந்தால் தங்கள் வீட்டைச் சுற்றிலும் வ்யாதி க்ருமிகளைக் கொல்லும் மருந்துகளை கண்ட இடத்தில் எதேஷ்டமாய் ஊற்றிவிடுகிறார்கள். பொதுவாய் அவர்கள் ஸுகாதாரம் வேண்டுமென்றால் வ்யாதி க்ருமிகளைக் கொல்லும் மருந்துகளை உபயோகித்துவிட வேண்டியது என்று எண்ணி வருகிறார்கள். மருந்துகளை சரியாய் உபயோகிக்கத் தெரியாமல் அவைகளை வெகுவாய் வீணாக்குகிறார்கள்.

ஸாதாரணமாய் ஜனங்கள் உபயோகிக்கும் மருந்துகளாவன: ரஸ ஸம்பந்தமான உப்புகள்

கார்பாலிக் ஆஸிட், பினைல், ஸைலின் ஆகிய இவைகளும் இன்னம் சில மருந்துகளுமே. இவைகளுக்கு பாக்டீரியாக்களைக் கொல்லும் சக்தி உண்டு. இந்த சக்தி மேற்சொன்ன மருந்துகளில் சிலவற்றில் அதிகமாகவும், சிலவற்றில் குறைவாயும் இருக்கிறது.

இந்த மருந்துகளை நமது தேசத்தில் இரண்டு காரணங்களை உத்தேசித்து உபயோகிக்கிறார்கள்.

முதலாவது ப்ளேக், காலரா முதலிய தொத்துவ்யாதி பரவியிருக்கும் காலங்களில் மல ஜலங்கள், ஸாமான்கள், வீடுகள் ஆகிய இவைகளுக்கு மருந்தை உபயோகித்து அவைகளில் இருக்கக் கூடிய வ்யாதிக்ருமிகளைக் கொல்வது.

இரண்டாவது வ்யாதி, நாற்றம் முதலியவைகள் உண்டாகக் கூடிய அல்லது உண்டாகிற கக்கூஸ் சாக்கடை ஆகிய இவைகளில் மருந்தை உபயோகித்து அவைகளில் இருக்கக் கூடிய க்ருமிகளைக் கொல்வது. இப்படிச் செய்வதில் நினைத்த கார்யம் சரியாய்க் கைகூடுவதில்லை. இவைகளைச் சரிவர உபயோகிக்கத் தெரியாததனால் இவைகளால் வெகுவாய் அதிக ப்ரயோஜனம் ஏற்படுவதில்லை. ஜனங்கள் மாத்ரம் தங்கள் வீடுகளுக்கு மருந்து போட்டு சுத்தம் செய்து விட்டதாக ஸந்தோஷப்பட்டு தங்களிடம் வ்யாதி அணுகாது என்று நம்பிவருகிறார்கள். உதாரணமாக, ப்ளேக் வ்யாதியை எடுத்துக் கொள்ளலாம். ப்ளேக் கமிஷன் ப்ளேக் வ்யாதி விஷயமாய் ஆராய்ச்சி செய்து ப்ளேக் வ்யாதிக்ருமிகள் வ்யாதியைப் பரவச் செய்யும் ஜீவராசிகளில் தான் வ்ருத்தியடைகின்றனவே ஒழிய அவைகளை விட்டு வெளியில் இருந்தால் அவைகள் அதிககாலம் உயிரோடிருப்பதில்லை என்றும், ப்ளேக் க்ருமிகள் ஒருவருடைய ரத்தத்தில் சேர்ந்தால் தான் அவருக்கு அந்த் வ்யாதி பிடிக்கிறதே ஒழிய ப்ளேக் வ்யாதிஸ்தர்களுடைய தேகத்தில் படுவதாலும், அவர்களுடைய ஆகாரம், குடிஜலம், இவைகளில் மூலமாயும், ரோடு, வீட்டின் தரைகள் இவைகளின் தூசிகள் மூலமாயும் வ்யாதி பரவுவதேயில்லை யென்றும் சாஸ்த்ரரீதியாய் ரூபித்துக் காட்டியிருக்கிறார்கள். இருந்தாலும் ஜனங்கள் தங்கள் வீடுகளையும், ஸாமான்களையும் சுத்தம் செய்வதற்கென்று மருந்துகளை உபயோகித்து வருகிறார்கள். இந்த விஷயங்களை நன்றாய் அறிந்திருக்கும் ஸானிடரி ஸிப்பந்திகள் இருக்கிற பெரிய பட்டணங்களில் தான் வ்யாதி பரவுவதற்கு முக்ய காரணமாயிருக்கிற தெள்ளுப்பூச்சியைத தொலைக்க அவர்கள் முயற்சிகள செய்து வருகிறார்கள். ஜனங்களுக்கு இநத விஷயத்தைப்பற்றி என்ன சொன்ன போதிலும் அவர்கள் வ்யாதி க்ருமிகளைக் கொல்லும மருந்துகளை உபயோகிக்காமல் இருப்பதில்லை என்று காப்டன் ராஸ்சொல்லுகிறார்.

காலரா விஷயத்திலோ என்றால வ்யாதிக்ருமிகள் பரவுவதற்கு வ்யாதிஸ்தருடைய மலந்தான் முக்ய ஆதாரம். இது மூலமாய் துணிகளிலும் வீட்டிலும் வ்யாதி க்ருமிகள் பரவுகின்றன. ஆனால் இப்படி பரவக்கூடிய காலம் ஸ்வல்ப நேரந்தான். இந்த ஸ்வல்ப நேரத்துக்குள் தான் க்ருமிகளுக்கு வீர்யம் அதிகமாயிருக்கிறது. மலங்களின்மேல் வெயில்பட்டால் வீர்யம் குறைந்துபோகிறது. ஆனல் அப்படி வீர்யம் குறைந்துபோவதற்கு முன் க்ருமிகள் துணி பாத்ரம் முதலியவைகளில் தொத்திக் கொள்வதாலும், ஈக்கள் மலங்களில் உட்காருவதாலும், அந்த க்ருமிகள் உணவு, ஜலம் இவைகளில் ஸம்பந்தப்படக்கூடும். அநேக ஸந்தர்ப்பங்களில் இப்படியே க்ருமிகள பரவுகின்றன. ஆகவே மருந்துகளை எப்போதும் உடனுக்குடன் உபயோகிக்க வேண்டுமென்று ஏற்படுகிறது.

காலரா காலங்களில் தொத்து வ்யாதி க்ருமிகளைப் போக்கடிக்கும் மருந்துகளை வ்யாதியுள்ள வீடுகளில் உபயோகித்து வீடுகளை சுத்தம் செய்வதற்காக கவர்னமெண்டார் சில விப்பந்திகளை ஏற்படுத்தி யிருக்கிறார்கள். இவர்கள் பொதுவாய் ஒரு குறிப்பிட்ட இடத்தில் இருந்துகொண்டு அப்போதைக்கப்போது நேரும் கேஸ்களை கவனிக்க அந்தந்த இடங்களுக்குப் போகிறார்கள். இவர்களில் சிலர் ஒரு ஊரில் இருந்துகொண்டு மற்ற ஊர்களுக்குப்போயும், சிலர் ஒரு ஊரிலேயே ஓரிடத்திலிருந்து மற்ற இடங்களுக்குப்போயும் வருகிறார்கள். இதனால் சில இடங்கள் இவர்களிருக்கும் இடத்துக்கு ஸமீபமாயும் சில இடங்கள் தூரமாயும் இருக்கின்றன. காலரா கேஸ் ஓரிடத்தில் நேர்ந்துவிட்டால் அதைப்பற்றியரிபோர்ட்டுகள் அநேக கைகள்மாறி அந்த விப்பந்திகளுக்குப் போக வேண்டியிருக்கிறதால் அவர்கள் காலரா நடந்த இடத்துக்குப் போக காலதாமஸம் ஏற்படுகிறது. அந்தக் காலத்தில் அவர்கள் வேறு கேஸ்களை கவனித்துக்கொண்டிருந்தால் இன்னம் வெகு தாமஸமாகும்.

இதனால் ஸாதாரணமாய் இந்த விப்பந்திகள் காலரா நடந்த மறுநாள்தான் அந்த இடத்துக்குப்போய் மருந்து போட முடிகிறது. காலராகேஸ் கண்ட ஆறுமணி நேரத்துக்குள் இவர்கள் அவ்விடத்துக்குப் போய் மருந்து போட்டுவிட்டால் அதுரொம்ப அபூர்வமென்று சொல்லலாம்.

இப்படி தாமஸமாய் மருந்து போடுவதில் வெகுவாய் யாதொரு ப்ரயோஜனமும் ஏற்படுவதில்லை. மருந்துக்கும் விப்பந்திகளுக்கும் செலவிடும் பணம வீண்தான்; மருந்து போட்டுவிட்டால் யாவரும் ஸௌக்யமாயிருக்கலாம் என்று ஜனங்கள் தப்பெண்ணம் கொள்வார்களாகையால் அப்படி ஜனங்களுக்கு தப்பெண்ணம் உண்டாக்குவதும் கெடுதலை உண்டாக்கக்கூடியதே என்று காப்டன்ராஸ் சொல்லுகிறார்.

கக்கூஸ சாக்கடை முதலியவைகளுக்கு மருந்து போடுவதைப்பற்றி காப்டன் ராஸ் பின் வருமாறு அபிப்ராயப்படுகிறார். வ்யாதி க்ருமிகளைக்கொல்லும் மருந்துகளைக்கொண்டு கக்கூஸ் சாக்கடைகளை சுத்தம் செய்வதில் பணமும் காலமும், பொருளும் வீணாகச்செலவழிகிறது. ஏனென்றால் அநேகமாய் வ்யாதி க்ருமிகளைக் கொல்வதென்பது நேருகிறதில்லை. வ்யாதிக்ருமிகள் இருந்தாலல்லவா அவைகளைக் கொல்வதென்பது ஏற்படும்? இப்படி மருந்து உபயோகிப்பதால நாற்றம் கொடுக்கக்கூடிய மலஜலாதிகளும் சாக்கடை அசுத்தங்களும் சீக்ரம் நாற்றமெடுத்துப்போகாதபடி தடுக்கப் படுகின்றனவே யொழிய வேறில்லை. இப்படிச செய்வதில் ரொம்ப பணச்செலவாகிறது.

சாக்கடை கக்கூஸுகளை சுத்தம் செய்வதற்குத்தகுந்த ஏற்பாடுகள் போதாத இடங்களில் தான் இந்த முறை வெகுவாய் உபயோகத்தில் இருக்கிறது.

மருந்து போடுவதால் மல ஜலாதிகள் நாற்றமெடுக்காதபடி ஸ்வல்ப காலம் இருக்கின்றனவேயொழிய வெகுகாலம் இருக்கமுடியாது. அவைகளை அப்புறப்படுத்திவிடடாலுங்கூட கக்கூஸுகள் தினந்தோறும் அசுத்தமாகிக்கொண்டே வருவதால் மருந்துகளால் அதிகப்ரயோஜனமில்லை. இப்படி மருந்து உபயோகிப்பதை விட ஸாதாரண ஜலத்தைக்கொண்டு அடிக்கடி காலாகாலத்தில் கக்கூஸுகளை சுத்தம் செய்யும்படி ஏற்பாடு செய்வதுதான் மேலானது. மருந்து உபயோகிப்பதால் வெகுவாய் ப்ரயோஜனம் ஏற்படாமலிருப்பதோடு, கக்கூஸ் சாக்கடைகளை சுத்தம் செய்வதற்குள்ள ஏற்பாடுகள் ஒழுங்கீனமாயிருந்தாலுங்கூட அந்த ஒழுங்கீனங்கள் வெளிக்குத் தெரியாமல் மறைத்து வைக்கவும் ஹேதுவாகிறது.

தொத்து வ்யாதி காலங்களிலும் மருந்துகளை ஸரியாய் உபயோகிப்பதில்லை.

ஜனங்கள் தொத்து வ்யாதி காலங்களில் தெருக்கோடிகளில் தாரையும் கந்தகத்தையும் எரிக்கும் வழக்கத்தை வைத்யர்கள் ஹேளனம் செய்தபோதிலுங்கூட அப்படிச் செய்தால் நன்மை யுண்டாகக்கூடும். ஏனென்றால் வ்யாதி பரவுதற்கு ஸாதாரணமாயிருக்கும் ஈக்கள் அப்படிச் செய்தால் ஓடிப்போகின்றன. மருந்துகளையோ வென்றால் வ்யாதி க்ருமிகள் இறந்துபோன பிறகே வெகுவாய் உபயோகப்படுத்துகிறார்கள்.

HOW TO HEAL CUTS.

வெட்டுக்காயங்களை ஸ்வஸ்தம் செய்ய.

வெட்டுக்காயத்தை ஒருபோதும் மருந்து போட்டு மூடி விடக்கூடாது. வெட்டுக்காயத்தின்மேல் ஒரு ப்ளாஸ்த்ரித் துண்டைப் போடுவது ரொம்பவும் பிசகு. ஏனென்றால் வெட்டுக் காயத்திலிருக்கக் கூடிய கெட்ட க்ருமிகள் ப்ளாஸ்த்ரித் துண்டிற்குள் அகப்பட்டுக்கொண்டு காயம் ஆறுவதற்குத் தடையாயிருக்கின்றன. வெட்டுக்காயம் உண்டானால் அது எவ்வளவு சிறியதாயிருந்தாலுங் கூட அதை சுத்த ஜலத்தால் கழுவி, காயம் அழுகிப் போகாமல் தடுக்கக்கூடிய மருந்து போட்டுக்கழுவி, பிறகு கொஞ்சங்கூட அழுக்கில்லாத லினன் துணி அல்லது பருத்தித் துணியைப்போட்டுக் கட்டிவிட வேண்டும். வெட்டுக்காயம் அழுகிப்போகாமல் வைத்திருக்கக்கூடிய மருந்துகள் அநேகம் இருக்கின்றன. அல்கஹால் சாராயம் ரொம்ப மேலானது. சில ரண வைத்யர்கள் அயோடைன் எல்லாவற்றையும்விட மேலானது என்று சொல்லுகிறார்கள். வீட்டு உபயோகத்துக்கு ரொம்ப ஸௌகர்யமாய் இருப்பது பெராக்ஸைட் அப் ஹைட்ரோஜின் என்னும் மருந்தாகும். இந்தக்கடைசி மருந்து எப்படி உதவுகிறதென்றால், அது ரத்தம், சீழ், மற்ற அசுத்த நீர் முதலியவைகளோடு சேர்ந்து வேறு பொருளாகமாறி அதிலுள்ள ப்ராணவாயுவை வெளிப்படுத்துகிறது. மற்றவாயுக்களோடுகலக்காத ப்ராணவாயு எல்லா க்ருமிகளையும் கொன்றுவிடுகிறது. மருந்துக்கடைகள் பக்கத்தில் இல்லாவிட்டால் கொஞ்சங் கூட அசுத்தமில்லாமல் ரொம்ப சுத்தமாயிருக்கும் துணிகள் அகப்படுவது கஷ்டமாயிருக்கும். அதிக சூடானது எல்லா க்ருமிகளையும் கொன்றுவிடுமாகையால் தட்டையான இரும்பை நன்றாய்க் காய்ச்சி எந்தத் துணிமேலாவது பத்துப் பன்னிரண்டு தடவை வைத்து தேய்த்தால் பிறகு அந்தத் துணியை வெட்டுக்காயத்துக்குச் சுற்ற உபயோகிக்கலாம். அல்லது நல்ல ஜலத்தில் துணியைப்போட்டு பத்து நிமிஷம் காய்ச்சினாலும் க்ருமிகள் எல்லாம் இறந்துவிடும்.

A USEFUL MEDICINE.

ஒரு உபயோகமுள்ள மருந்து.

முதிர்ந்த நெல்லிக்காய்களை இடித்து ரஸம் பிழிந்து, 1-படி ரஸம் வடிகட்டி எடுத்து, அத்துடன் திப்பிலி சூர்ணம் 6-பலமும், அதிமதுர சூர்ணம் 2 பலமும், த்ராக்ஷப்பழத்தை அரைத்து அந்த கல்கத்தில் 4 பலமும் சர்க்கரையும் சேர்த்து, சிறுகச் சிறுக சிறுதீப்போட்டுக் காய்ச்சி, கொஞ்சம் கட்டியாய் வரும் ஸமயத்தில் 6 பலம் தேன் விட்டுக் கிளறி இறக்கிவிடவும். இதைப் பக்வம் செய்வதற்கும், பிறகு எடுத்து வைக்கவும் கற் சட்டியையாவது பீங்கான் பாத்ரத்தையாவது உபயோகிக்க வேண்டும். உலோஹபாத்ரங்களை உபயோகித்தால் களிப்பேறிவிடும். அரோசகமே, அக்னி மாந்த்யம், காமாலை, கல்லீரலைப் பற்றிய வ்யாதிகள் ஆகிய இவைகளை குணப்படுத்தும். பாண்டு ரோகத்திற்கும் உபயோகப் படுத்தலாம். ஒரு வேளைக்கு $\frac{1}{4}$ பலம் விதம் மூன்று வேளை உபயோகித்து வரவேண்டும்.—வைத்திய கலாநிதி.

The Boys' World
பையன்கள் பகுதி.

A TRICK IN ASTROLOGY.
ஜோதிஷ ஜாலக்கணக்கு.

ஒருவன் பிறந்த வருஷம், மாஸம், தேதி முதலானவைகளை ஜாலக்கணக்கினால் வெகு ஸுலபமாய்க் கண்டு பிடிக்கலாம். கணிக்கும் போது ப்ரபவாதி 60 வருஷங்களுக்கும் 1 முதல் 60 என்றும், மாஸங்களுக்கு 1 முதல் 12 என்றும், சுக்ல பக்ஷத்துக்கும் பகலுக்கும் 1 என்றும், க்ருஷ்ண பக்ஷத்துக்கும் ராத்ரிக்கும் 2-என்றும், இவ்விதமாகவே திதி, வாரம், நக்ஷத்ரங்களுக்கு, முறையே, 1 முதல் 15, 1 முதல் 7, 1 முதல் 27 என்றும் கணக்கிட்டு கணிக்க வேண்டும். ஒருவன் நள வருஷம் கார்த்திகை மாஸம் சுத்த சதுர்த்தசி செவ்வாய்க்கிழமை தினம் ராத்ரி 8 நாழிகைக்குப் பிறந்ததாக வைத்துக்கொள்வோம். மேற்குறித்த விதியின்படி நள வருஷத்துக்கு 50 என்றும், கார்த்திகை மாஸத்துக்கு 8 என்றும், சதுர்த்தசிக்கு 14 என்றும், செவ்வாய்க்கிழமைக்கு 3 என்றும், ராத்ரிக்கு 2 என்றும் ஏற்படுகிறது. ஜாலக்கணக்கின் விவரம்:—பிறந்த மாஸத்தின் எண் குறித்துக் கொள்ளவும்—8; அதை 2-ஆல் பெருக்கவும், $8\times2=16$; அத்துடன் 5ஐச்சேர்த்துக் கொள்ளவும், $16+5=21$; அதை 50-ஆல் பெருக்கவும், $21\times50=1050$; அதனுடன் பிறந்த வருஷத்தின் எண் சேர்த்துக் கொள்ளவும், $1050+50=1100$; அதிலிருந்து 360ஐக் கழிக்கவும்; $1100-360=740$; விடை என்ன வென்று கேட்கும்போது 740 என்று சொன்னால் பின்பு ஜாலம் செய்கிறவன் அதனுடன் 110ஐசசேர்த்துக்கொண்டு விடை 850 என்று செய்து கொள்வான். இந்த விடையில் கடைசி இரண்டு [ஸ்தானங்களிலுள்ள 50 என்பது வருஷத்தையும், மீதியுள்ள 8 என்பது மாஸத்தையும் குறிக்கும், நள வருஷம் கார்த்திகை மாஸம் என்று சொல்லி விடலாம். இதே மாதிரியான கணக்கு சொல்லாமல் வேறு விதத்திலும் கணக்கைப்புரட்டிச் சொல்லலாம். அதையும் பின் வரும் கணிதத்தில் சொல்லுவோம். பிறந்த திதியின் எண் குறித்துக்கொள்ளவும், 14; அதை 4 ஆல் பெருக்கவும், $14\times4=56$; அதனுடன் 9-ஐச் சேர்த்துக் கொள்ளவும், $56+9=65$; அதை 25-ஆல் பெருக்கவும், $65\times25=1625$; அதனுடன் பிறந்த வாரத்தின் எண்ணைச்சேர்த்துக் கொள்ளவும், $1625+3=1628$, விடை என்ன வென்று கேட்கும் போது 1628 என்று சொன்னால் பின்பு ஜாலம் செய்கிறவன் அதிலிருந்து 225ஐக் கழித்துக்கொண்டு விடை 1403 என்று செய்துகொள்வான். இந்த விடையில் கடைசி 03 என்பதற்கு (பூச்யத்துக்கு மதிப்பில்லை) 3 வது வாரமாகிய செவ்வாய்க்கிழமை யென்றும், மீதியிருக்கும் 14-க்கு சதுர்த்தசி திதி என்றும் சொல்லி விடலாம். இப்படியே ஜாதகம் எல்லாவற்றையும் பலவித ஜாலக்கணக்கு முறைகளால் கணிக்கச் செய்து ஜாதகத்துக்குச்சரியான நகல் எழுதிக் கொடுத்து விடலாம்.

HOW THEY WON THE MATCH.
ஆட்டத்தில் ஜயமடைந்த விதம்.

மேல்நாட்டு விளையாட்டுகளில் பல தற்காலம் நமது நாட்டில் உபயோகப்பட்டு வருகின்றன. உதாரணமாக: டென்னிஸ, பாட்மின்டன், புட்பால், க்ரிக்கெட், கால்ப் முதலியவைகளைச் சொல்லலாம். இவைகளால், முக்யமாய் க்ரிக்கெட்டால் தைர்யமும் சௌர்யமும் வ்ருத்தியாகும் என்று சொல்வதுண்டு. கொஞ்ச

காலத்துக்கு முன்னால் இந்தியாவின் ஒரு பாகத்தில் ஒரு க்ரிஸ்தவப் பாதிரியார் ஸ்வதேசச் சிறுவர்களுக்காக ஒரு பள்ளிக்கூடம் வைத்து நடத்திவந்தார். அவருக்கு க்ரிக்கெட்டில் ரொம்ப ப்ரியம். தமது பள்ளிக்கூடத்திலுள்ள பையன்கள் க்ரிக்கெட் விளையாடி ஆண் சிங்கங்களாக வேண்டுமென்று எண்ணி க்ரிக்கெட் விளையாட்டில் பள்ளிக்கூடத்துப்பிள்ளைகளை பழக்கினர். பையன்கள் முதலில் நன்றாய் ஆடத்தெரியாவிட்டாலும் காலக்ரமத்தில் ஸமமாராய் ஆடவே பாதிரியார் அவர்களில் ஒரு "டீம்" அதாவது கக்ஷி தயாரித்து பக்கத்துப் பள்ளிக்கூடத்து "டீமோடு" பந்தய ஆட்டத்துக்கு ஏற்பாடு செய்தார். ஆட்டத்துக்கு இரண்டொரு நாள்களுக்குமுன் அவர் "டீமின்" தலைவனிடம் 15-ரூபாய் கொடுத்து புது "பாட்கள்" (துடுப்பு) வாங்குவதற்கோ, அல்லது மாட்சில் (பந்தயம்) ஜயிப்பதற்கு வேண்டிய ஸாதகங்கள் செய்துகொள்வதற்கோ அந்தப் பணத்தைச் செலவழிக்கலாம் என்று சொன்னர்.

குறிப்பிட்டதினம் எல்லாரும் "மாட்ச" நடக்கும் இடத்துக்குப் போனர்கள். எல்லார் முகத்திலும் நல்லகளையிருந்தது. அன்று ஜயிப்பது நிச்சயமென்று எல்லாரும் எண்ணியிருப்பதாகத் தோன்றிற்று. அப்போது பாதிரியார் பையன்களைப் பார்த்து "பணத்தை என்னசெய்தீர்கள்? உங்களுடைய புது "பாட்"கள் எங்கே" என்றார். அதற்கு "டீமி"ன் தலைவன், "நீங்கள்தான், மாட்சில் ஜயிப்பதற்கு எது ஸாதகமாயிருக்குமோ அது விஷயமாய் செலவு செய்யுங்கள் என்று சொன்னீர்களே. நாங்கள் மத்யஸ்தருக்கு ("அம்பையா") அதைக்கொடுப்பது தான் நல்லது என்று எண்ணி அப்படியே அவருக்குக் கொடுத்துவிட்டோம்" என்றான். பையன்கள் அன்றைய மாட்சில் ஜயித்துவிட்டார்கள். ஆண் சிங்கங்களாக வேண்டியவர்கள் பயங்கொண்ட குள்ள நரிகளாய் விட்டார்கள்.

SANITARY EDUCATION OF CHILDREN.

குழந்தைகளுக்கு ஸுகாதாரக் கல்வி.

சிறுவர் சிறுமிகள் தங்களுடைய தேகத்தை ஸௌக்யமாய் வைத்திருப்பதற்கு பின்வரும் விதிகளை அனுஸரிக்க வேண்டுமென்று லண்டனிலுள்ள ஒரு ஸங்கத்தார் ஒரு பத்ரிகையில் வெளியிட்டிருக்கிறார்கள்.

(1) இரவிலும், பகலிலும், படுக்கை யறையின் ஜன்னல்களைத்திறந்து வைக்கவேண்டும். இதனால் குழந்தைகளுக்கு ஜலதோஷம் பிடிக்காமலிருக்கும்.

(2) குழந்தைகள் வாரத்தில் குறைந்தது ஒரு தடவையாவது ஸ்நாநம் செய்யவேண்டும்.

(3) சிறுவர்கள் தங்களுடைய தலை, முகம், கைகள், நகங்கள் ஆகிய இவைகளை எப்போதும் கூடியமட்டும் சுத்தமாய் வைத்திருக்கவேண்டும்.

(4) ஒவ்வொருநாளும் காலையில் பல்லைத் தேய்த்து சுத்தம் செய்யவேண்டும். இரவில் படுக்கப் போகும்போதும் வாயையும் பல்லிடுக்குகளையும் நன்றாய் சுத்தம் செய்யவேண்டும்.

(5) சாப்பிடுவதற்கு முன்னால் எப்போதும் கையை சுத்தம் செய்து விடடுத்தான் ஆகாரத்தைத் தொடவேண்டும்.

(6) எப்போதும் மெதுவாக நிதானமாகச் சாப்பிடவேண்டும். அவஸர அவஸரமாய் சாதத்தை விழுங்கக் கூடாது. ஆகாரத்தை எப்போதும் நன்றாய் மென்றே சாப்பிடவேண்டும்.

(7) மூச்சு விடும்போது எப்போதும் மூக்கின் வழியாக ஆகாயத்தை ச்வாஸிக்க வேண்டும். வாயைத் திறந்து வைத்துக்கொண்டு வாயால் ச்வாஸம் வாங்குவதும் விடுவதும் கூடாது.

(8) இருமலாவது தும்மலாவது வந்தால் ஒரு புறமாய்த் திரும்பிக்கொண்டு இருமவேண்டும் அல்லது தும்மவேண்டும். இல்லாவிட்டால் வாய்க்கெதிரே கைக்குட்டையைப் பிடித்து மறைத்துக்கொண்டு தும்மவேண்டும்.

(9) தரையிலாவது, படிக்கட்டுகளிலாவது எச்சில் துப்பக்கூடாது.

(10) சிறுவர்கள் பெற்றோர்களிடம் அன்பு பூண்டு அவர்களுக்குப் பணிந்து நடக்கவேண்டும். ஒவ்வொரு நாளும் பிறருக்கு ஒரு நல்ல செய்கையாவது செய்யவும், ஒரு ஹிதமான வார்த்தையாவது சொல்லவும் முயலவேண்டும். வாயில்லா ப்ராணிகளிடத்தில் எப்போதும் பக்ஷமாயிருக்கவேண்டும்.

TO AVERT DROWNING.

தண்ணீரில் மூழ்கிச்சாகாமலிருக்க.

தண்ணீரில் ரொம்ப ஆழமான இடத்தில் அகப்பட்டுக்கொண்டு மூழ்கிப் போகும்போல் இருந்தால், பின் வரும் விதிகளை அனுஸரிப்பது நல்லது.

(1) பயங்கொள்ளலாகாது. நிதானமாயிருக்க வேண்டும்.

(2) இரண்டொரு தடவை ஜலத்துக்குள் மூழ்கினாலும் அதற்காக பயப்படக்கூடாது. ஏனென்றால் மூழ்கின பிறகு ஜலமட்டத்துக்கு மேல் தலை கிளம்புவது நிச்சயம்.

(3) கையை எப்போதும் ஜலத்துக்குள்ளேயே வைத்திருக்க வேண்டும். ஒருவர் நீந்தாவிட்டாலும் அவர் தமது கைகளை ஜலத்துக்குள்ளேயே வைத்திருந்தால் அவர் வெகு நேரம் மிதந்து கொண்டிருக்க முடியும். அநேகம் பேர் ஜலத்தில் மூழ்கி தரை மட்டத்துக்கு வந்ததும் தங்களுடைய கைகளை ஜலத்தின் மேல் தூக்கி உதவிக்காகக் கூச்சலிடுகிறார்கள். இதனால் அதிக நேரம் மிதக்க முடியாமல் இறந்து போகிறார்கள்.

(4) தேகம் மிதக்கும் நிலைமையை அடையும் வரையில் வாயை மூடி வைத்திருக்கவேண்டும். மிதந்து முகம் வெளியில் வந்தவுடன் வாயால் ச்வாஸிக்க முயலவேண்டும்.

(5) கைகால்களால் ஜலத்தைக் கூடிய மட்டும் தள்ளிக்கொண்டு கரைக்கு வரப்பார்க்கவேண்டும்.

(6) ஜலத்தில் விழுந்தவருக்கு கொஞ்சம் நீந்தத் தெரிந்தால் உடனே அவர் தமது உடைகளைக் கழற்றிவிட முயலவேண்டும். இல்லாவிட்டால் உடைகள் ஜலத்தில் நனைந்து கனமாவதால் விழுந்தவரை சீக்ரம் அமிழ்த்திவிடும்.

(7) யாராவது உதவி செய்ய வந்தால் ஜலத்தில் விழுந்தவர் உதவி செய்ய வந்தவர் என்ன செய்யச்சொல்லுகிறாரோ அப்படியே செய்ய வேண்டும். உதவி செய்ய வருபவரை ஒரு போதும் கெட்டியாய்ப் பிடித்துக்கொள்ளக் கூடாது.

A NEWSPAPER FOR CHILDREN.

குழந்தைகளுக்கு ஸமாசாரப் பத்ரிகை.

ஹாலிபாக்ஸ் என்னும் பட்டணத்தில் பள்ளிக்கூடத்துச் சிறுவர்களுக்காக வென்று ஒரு ஸமாசாரப் பத்ரிகை நடந்து வருகிறது. அதற்கு "ஸாட்சல்" என்று பெயர். அது மாஸம் இரண்டு தடவையாக ப்ரசுரம செய்யப்படுகிறது. அதில் தேகப்பயிற்சி விளையாட்டுகளைப் பற்றிய குறிப்புகள் ஸமாசாரங்கள், தேசத்தில் நடக்கும் ஸம்பவங்களைப் பற்றிய ஸமாசாரக்குறிப்புகள், தோட்டவேலைக்குறிப்புகள், ஆகிய இவைகள் எழுதப்படுகின்றன. இன்னும் அதில் கதையும் இங்க்லீஷ் இலக்கியங்களிலிருந்து எடுத்த சிறு வ்யாஸங்களும், கவிகளும் இருக்கின்றன. ஒரு சாஸ்த்ராபிமானி அந்தப் பத்ரிகையில் அந்த ஊரிலுள்ள பக்ஷிகள், புஷ்பங்கள் முதலியவைகளைப்பற்றி வ்யாஸங்கள் எழுதிக்கொண்டு வருகிறார். இன்னொருவர் ஹாலிபாக்ஸ் பட்டணம் பழைய

நாளில் எப்படியிருந்த தென்பதைப்பற்றி தொடர்ச்சியாக வ்யாஸம் எழுதிக்கொண்டு வருகிறார்.

இன்னம் விடுகதைகளும் வேடிக்கைகளும் காலஸ்திதியைப்பற்றிய குறிப்புகளும் அந்தப் பத்ரிகையில் வெளியாகின்றன.

பத்ரிகையை பள்ளிக்கூடத்தில் வாசகபாடமாக உபயோகித்தபின் பிள்ளைகள் வீட்டுக்குக் கொண்டுபோவது வழக்கமாம். இது முதலில் ப்ரதி ஒன்று அரையணாவுக்கு விற்கப்பட்டது. ஆனால் இப்போது சிலவகுப்புகளில் எல்லாப் பிள்ளைகளுக்கும் இனாமாகக் கொடுத்து வருகிறார்கள். நமது தேசத்துப் பள்ளிக்கூடங்களிலும் இந்த பத்ரிகையைப்போல் சிறு பத்ரிகைகள் நடத்தினால் ரொம்பவும் நன்மை யுண்டாகும்.

WHY THE OCEAN IS SALTISH.

ஸமுத்ரம் உப்பாயிருப்பதற்குக் காரணம்.

பூமியிலுள்ள நதிகள் எல்லாம் ஓடி கடைசியில் ஸமுதரத்தில் விழுகின்றன. அவைகள் பூமியில் ஓடும்போது பூமியிலுள்ள பொருள்களைக் கரைத்துக் கொண்டு போகின்றன. அந்தப் பொருள்களில் உப்புத்தான் பெரும்பாகமாகும். இது நதிகளின ஜலத்தில் ரொமபக் குறைவாயிருப்பதால் நதிகளின் ஜலத்தைக் குடிக்கும்போதுஉப்பு இருப்பது நமக்குத் தெரிவதில்லை. ஸமுத்ரத்திலுள்ள ஜலம் ஸதா ஆவியாய்மாறிக்கொண்டே இருக்கிறது. ஆனால் அதிலுள்ள உப்பு மாத்ரம் ஸமுத்ரத்திலேயே தங்கிவிடுகிறது. ஆவியாய்ப்போன ஜலம் மறுபடியும் மழையாகப் பெய்து ஆறுகளின் வழியாய்ப் போய் பூமியிலுள்ள உப்பைக் கரைத்துக்கொண்டு வந்து ஸமுத்ரத்தில் கலக்கிறது. இப்படி ஸதா ஸமுத்ரத்தில் உப்பு சேர்ந்து கொண்டேயிருப்பதால் ஸமுத்ர ஜலம் உப்பாயிருக்கிறது.

YOUNG MENS' INDIAN ASSOCIATION.

இந்திய சிறுவர்களின் ஸங்கம்.

சென்னையில் தற்காலும் 3000 இந்திய மாணவர்களுக்கு மேல் வஸித்து வருகிறார்கள். இவர்களில் பெரும்பான்மையோர் வெளியூர்களிலிருந்து வந்து வாசிப்பவர்கள். இவர்களில் அநேகர் ஸௌகாதாரக் குறைவுள்ள இடங்களில் வஸித்து வருகிறார்கள். இவர்கள் இவ்விடத்திலுள்ள பெரியவர்களுடன் பேசிப்பழகவாவது, ஒரு தக்க இடத்தில் கூடி ஒருவர்க்கொருவர் பழகவாவது, வஸதிகளில்லாமல் இருந்து வருகிறாகள். இப்படிப்பட்ட குறையை நீக்க ஏற்பாடு செய்வதற்காக சென்னையிலுள்ள பல ப்ரமுகர்கள் ஒன்றுகூடி "யங் மென்ஸ் இண்டியன் அஸ்ஸோஸியேஷன்" என்று ஒரு ஸங்கம் ஸ்தாபித்திருக்கிறார்கள். இந்த ஸங்கத்தின் நோக்கங்களாவன:—தேகப் பயிற்சிக்கு உதவும் ஜிம்னாஷ்யம் என்னும் தேகப் பயிற்சிக்கூடம், ப்ரஸங்கம் செய்ய ஹால், புஸ்தகசாலை, ரீடிங்ரூம் அதாவது ,வாசகசாலை, மாணவர்கள் தங்கி வஸிப்பதற்கு வீடுகள், ஆகிய இவைகள் ஏற்படுத்தல், மாணவர்களுடைய ஸங்கங்கள் நடைபெறுவதற்கு உதவி செய்தல், மாணவர்களுக்கு ப்ரஸங்கங்கள் செய்ய ஏற்பாடு செய்தல் முதலியவைகளாகும்.

SOCIAL SERVICE LEAGUE.

ஸோஷல் ஸர்விஸ் ஸங்கம்.

சென்னையில் ஸோஷல் ஸர்விஸ் லீக் என்று பெயருள்ள ஜனஸமூக ஊழிய ஸங்கம் ஒன்று 1912-ம் வருஷம் அக்டோபர் மாஸத்தில் ஸ்தாபிக்கப்பட்டது. ஜன ஸமூகத்தின் அபிவ்ருத்திக்காகப் பாடுபடுவதே இதன் நோக்கமாகும். நோயாளிகளுக்கு உதவி செய்தல், தாழ்ந்த ஜாதியார்களை உயர்ந்த நிலைமைக்குக் கொண்டுவருவது. மாணவர்களுக்கு இருப்பிட வஸதி ஏற்படுத்துவது, தரித்ரம், குடி முதலிய கெடுதல்களைப் போக்க வழிதேடுவது, முதலிய கார்யங்களை இந்த ஸங்கம் செய்து வரும். இந்த ஸங்கத்தின் மெம்பர்கள் சென்ற வருஷம் ஜெனரல் ஹாஸ்பிடலிலுள்ள வ்யாதிஸ்தர்களுக்கு வாசிக்க புஸ்தகங்கள் கொடுத்து உதவியும், எழுதப்படிக்கத் தெரியாத வ்யாதிஸ்தர்கள் தங்கள் பந்துக்களுக்குக் கடிதம் எழுத வேண்டியிருந்தால் அவர்களுக்கு எழுதிக் கொடுத்தும், வ்யாதிஸ்தர்களுக்கு உதவியாயிருந்தார்கள். இந்த ஸங்கத்தின் ஆதீனத்தில் ஒரு இலவசப் பள்ளிக்கூடம் நடந்து வருகிறது.

The Ladies' World.

ஸ்த்ரீகள் பகுதி.

SMALL INDUSTRIES FOR POOR WOMEN

BY

T. C. V. RAMANAIYAR.

ஏழை ஸ்த்ரீகளுக்கு ஏற்ற சிறு தொழில்கள்.

[நூறு ரூபாய் முதல் போடக்கூடிய ஏழை ஸ்த்ரீகள் என்னென்ன தொழில்கள் செய்தால் லாபமடையலாம் என்பதைப்பற்றி சென்ற கார்த்திகை மாஸத்தில் ஒரு வ்யாஸம் ப்ரசுரித்திருக்கிறோம். அது விஷயமாய் மிஸ்டர் டி. வி. வி. ரமணய்யர் சொல்லும் விஷயங்கள் கவனிக்கத் தக்கவை. அவை பின் வருமாறு.]

நூறு ரூபாய் முதல் போடக்கூடிய ஸ்த்ரீகள் செய்யத் தகுந்த தொழில்கள் பலவாயும் பல வகைப்பட்டவையாயும் இருந்தாலும் ஜாதிமத வேற்றுமைகளுக்குத் தக்கவிதம் அவரவர்களுக்கு ஏற்றதைத் தெரிந்தெடுத்துக் கொண்டு செய்யலாம்.

1. தையல் யந்த்ரம்:—தையல் யந்த்ரம் 50-ரூபாயில் கிடைக்கிறது; இதை வாங்கி, சட்டை, பாவாடை, ரவிக்கை முதலியவைகள் தைத்து கூலி ஸ்ம்பாதிக்கலாம். சட்டை, ரவிக்கை முதலியவைகள் வெட்டுவதற்கு சிறிது ஞான அப்யாஸம் போதுமானது.

2. நிட்டிங் மெஷின்:—இது 100-ரூபாயில் வாங்கக்கூடும். சிறிது கைமுதல் கூடவிருந்தால் நிட்டிங்நூல்கள் பலவித வர்ணமுள்ளனவாய் வரவழைத்து வைத்துக்கொண்டு, மேல் ஜோடு, கையுறை, சட்டை, குல்லாய், கழுத்துப் பட்டி, கால்பட்டி முதலியவைகள் செய்து விற்று அதிக லாபமடையலாம். இத்துடன் கையினாலும் ஏற்ற ஊசிகளைக்கொண்டு, குல்லாய், கழுத்துப்பட்டி முதலியவைகள் செய்யக்கூடும். சிறிது பழக்கம் மட்டும் வேண்டும்.

3. பசு வளர்த்தல்:—ஒரு கறவைப்பசு 50-முதல் 70 ரூபாய்க்குள் வாங்கலாம். இதற்கு வேண்டிய புல், பருத்திக்கொட்டை, பிண்ணாக்கு முதலியவைகளை சிறிது சிறிதாக வாங்கி வைத்துக்கொண்டு, பால்கறந்து விற்றும், தயிர் வெண்ணெய், நெய்முதலியவைகள் செய்து விற்றும், சேரும் எருவை விற்றும் பணம் ஸம்பாதிக்கலாம். இப்படி பட்டணங்களில் ஸம்பாதித்து ஜீவிப்பவர் அநேகம். இது இசத்திற்கும் பரத்திற்கும் ஏற்ற ஸாதனம். ஒரு பசு வாங்கி வளர்த்து ஜீவிக்கிறவர் மாஸத்தில் ஸகல செலவும் போக 10 ரூபாய் மீத்துவைக்கிறார்.

4. அப்பளாம், வற்றல், ஊறுகாய் முதலியவை செய்தல்:—புதிய தான்யங்கள் வெளிப்பட்டு ஸகாயமாய் விற்கும் ஸமயத்தில், உளுந்து வேண்டிய அளவும், பாகல், வெண்டை, கொத்தவரை, அவரை, கத்தரி, சுண்டக்காய், மாங்காய், மணத்தக்காளி, தூதுவளாங்காய், குருமத்தன் முதலியவைகளை ஸகாயமாய் விற்கும் காலத்தில் அவச்யமான அளவும், எலுமிச்சை, நாரத்தை, நெல்லி, மாகாளிக்கிழங்கு, மாங்காய் முதலியவைகள் விலை ஸரசமாய் கிடைக்கும் காலத்தில் அவைகளையும் வாங்கிவைத்துக்கொண்டு, உளுந்தை நல்ல பருப்பாக்கி, அப்பளாமாகச் செய்து 100 க்கு 4-அணா வீதம் விற்றால் ஒன்றுக்கு இரண்டாக சம்பாதிக்கலாம்; பாகல் வெண்டை முதலிய காய்களை தகுந்தபடி நறுக்கி உலர்த்தி புளித்ததயிரில் ஊறவைத்து, உப்பிட்டு உலர்த்திவைத்துக்கொண்டு, வகைக்குத் தகுந்தபடி விலைவைத்து விற்கலாம்; இவற்றிலும் ஒன்றுக்கு இரண்டுபங்கு லாபம் கிடைப்பது நிச்சயம்.

எலுமிச்சை, மாங்காய் முதலியவைகளை

சரியான காரமும் உப்புமிட்டு ஊறுகாய் செய்து சுத்தமான ஜாடிகளில் அடைத்துவிற்க லாம். இவற்றிலும் தகுந்த லாபமே கிடைக் கிறது.

இவைகளோடு, எழுதும் கருப்பு, சிவப்பு இங்கியும், பொடியும்; பலர் தேய்க்கும் பல் பொடியும்; புருஷர்களும் ஸ்திரீகளும் அணி யும் விபூதி, குங்குமம், ஸ்ரீசூர்ணம் முதலிய வைகளும்; எண்ணெயிட்டுத் தேய்த்துக் கொள் ளும் சீயக்காய்ப்பொடி, அரைப்புப்பொடி முத லியவைகளையும், நேர்த்தியாய் செய்து சிறிய தகர டப்பிகளில் போட்டு விற்கலாம்.

அன்றியும், வாஸனையுள்ள சந்தனவில்லை களையும், ஊதுவர்த்திகளையும் செய்து விற்க லாம். இவைகளில் விசேஷ லாபமுண்டென் பதில் ஸந்தேகமில்லை.

5. பாய் முடைதல்:—கோரைப்புல், பனை யோலை, ஈச்சமட்டை, தாழையோலை முத லியவைகளைக்கொண்டு, சாயமிட்டும், இடா மலும், பாய், பெட்டி, கூடைமுதலிய பலவித ஸாமான்கள் செய்து விற்று ஜீவிக்கலாம். இவ்வித வேலைக்கு அதிக முதல் வேண்டிய தில்லை. இத்தொழில்களை கற்பதும் கடின மான தன்று.

6. புஸ்தகம் கட்டுதல் :—இத் தொழிலைத் தெரிந்துகொண்டால் வீட்டிலிருந்துக்கொண் டே வேண்டிய வேலைகள் செய்து பணம் ஸம் பாதித்து ஜீவிக்கலாம்.

7. பக்ஷணக்கடை:—ஜிலேபி, மைஸூர்ப் பாகு, லட்டு, பூந்தி, பக்கோடா முதலியவை களை நல்ல நெய்யில் செய்து க்ரமமாய் விற் பதில் ஒன்றுக்கிரண்டு லாபமுண்டு. இப்படியே காபி, டீ, உப்புமா, இட்டலி முதலியவைகள் செய்து விற்பதிலும் நல்ல லாபமே. இவற்றில் புரட்டில்லாமலும், சுத்தமாயும் செய்தால் வ்யா பாரம் அதிகமாகு மென்பதில் தடையென்ன?

எத்தொழிலை மேற் கொண்டாலும் கௌர வமாய் செய்ய எண்ண முண்டானால், விடா முயற்சியுடன் நேர்த்தியாகவும், பார்ப்பவர் மனதைக் கவரும்படியாகவும் செய்து ஜீவிக்க லாம. எத்தொழிலுக்கும் ஹீனமென்பது கிடையாது. ஜோடு தைத்து விற்பதை ஹீன மாக நமது தேசத்தார் நினைக்க, ஐரோப்பியர் கள் விளம்பரப் பலகை யிட்டு தொழில் செய்து விற்று மரியாதையாய் ஜீவிக்கிறார்கள்.

சாப்பாட்டுக்கடை (ஹோட்டல்) வைத்து நடத்துகிற வரும், வக்கீல், டாக்டர் தொழில் செய்கிறவர்களும் வீட்டு முகப்பில் விளம்பரப் பலகையிட்டு தொழில் செய்கிறார்கள். நாட் டுப் புறத்தான் வக்கில் வீட்டில் ப்ரவேசித்து ‘சாப்பாடு கிடைக்குமா’ என்று கேட்பதும், ஹோட்டலில் நுழைந்து ‘வக்கீல் எங்கே’ என்றுகேட்பதும் ஸகஜமாயிருக்கிறது ஆகை யால் தொழில் ஹீனமென்பது இல்லை. நாண யமே புகழ்தாத்தக்கது.

சுடுகாட்டில் விறகும் வரட்டியும், தயார் செய்து வைத்திருந்து சவம்வந்தவுடனே கொடுப்பதில் நல்ல லாபமிருப்பதை யறிந்த ஸுப்பராய ரென்ற ஒரு ப்ராமணர் அத்தொ ழிலை மேற் கொண்டு செய்ய அவரை ஒவ்வொ ருவரும் சுடுகாட்டு ஸுப்பராயர் எனக்கார ணப் பெயரிட்டு அழைத்து கேலி செய்தார் கள். அவர் அதை லக்ஷ்யஞ்செய்யாமல் தனது தொழிலை செவ்வையாய் நடத்தி வரவே சிறிது காலத்தில் பத்தாயிரக்கணக்காய் ஸம் பாதித்து கஞ்சிக்குக் கஷ்டப்படாமல் ஜீவித் தார். கோயமுத்தூரில் மீனாக்ஷியம்மாள் அப்ப ளாம் செய்தும், அம்மணியம்மாள் அவலிடித் தும், கோனம்மாள் வத்தல் செய்தும் விற்று எவ்வளவோ மரியாதையாகவும், கஷ்டமின்றி யும் ஜீவித்ததன்றி புகழும் பெற்றார்கள்.

MISS TARA.

மிஸ் தாரா.

சென்னையில் கொஞ்சநாட்களுக்கு முன்னால்

மிஸ்தாரா என்னும் 27-வயதுள்ள ஒரு குஜராத்தி ஸ்த்ரீ ரொம்பவும் அற்புதமான ஸர்க்கஸ் வித்தைகள் செய்து காண்பித்தாள். முன் நெற்றி மயிரை இரண்டாகப்பிரித்து ஒரு பெரிய பாராங்கல்லைக் கட்டித் தூக்கியும், 7 பேர் ஏறியிருந்த ஒரு வண்டியை முன் சொன்னமாதிரி மயிரால் இழுத்தும், மார்பில் நாலு ஆள் தூக்கவேண்டிய ஒரு பெரிய பாராங்கல்லை வைத்துக்கொண்டு அந்தக்கல்லை இரண்டு பேர்கள் சம்மட்டியால் நெருப்புப் பறக்க அடிக்கச்செய்தும், நல்ல பலசாலிகளான நாலு புருஷர்களை இரண்டு காதுகளை கெட்டியாய்ப் பிடித்துக் கொள்ளச்சொல்லி தலையை அசக்கி அவர்களை உதறியும், வரிசையாய் நட்டிருந்த நாலு அம்புகளின் மேல் மிஸ்தாராவை நாலுபேர் தூக்கிப் படுக்கப்போட வேறு ஒருவித ஆதாரவுமில்லாமல் 'அலாக்காய்' படுத்திருந்தும் இப்படி அநேக ஆச்சர்யமான வித்தைகள் செய்து காண்பித்தாள். மிக பலசாலிகளான இங்க்லீஷ்கார ஸாண்டோவையும் இந்தியாவில் ராமமூர்த்தியும் அநேகம்பேர்கள் பார்த்திருக்கலாம். மேற்சொன்ன புருஷர்களைப்போல் பராக்ரம செயல்கள் செய்யக் கூடிய ஸ்த்ரீகளில் முதலாய்த் தோன்றியவர் மிஸ் தாராவே யாவர்.

CHILD AND SLEEP.

குழந்தையும் தூக்கமும்.

வயது சென்றவர்கள் தினம் எவ்வளவு நேரம் தூங்க வேண்டுமென்பதைப் பற்றிப் பலர் பல்விதமாகச் சொல்லி வருகிறார்கள். ஆனால் குழந்தைகள் விஷயத்தில் மாத்ரம் அவர்கள் அதிகநேரம் தூங்கவேண்டு மென்பது பொது அபிப்ராயமாயிருக்கிறது. 5-வயதுக்குள்பட்ட குழந்தை தினந்தோறும் குறைந்த பக்ஷம் 12-மணிக்குக் குறையாமல் தூங்கவேண்டும். 5-வயதுக்கு மேல் 15-வயதுவரையில் குழந்தையானது வளரும் பருவத்திலிருக்கிறபடியால் அது குறைந்தது 10 மணியாவது தூங்கவேண்டும். குழந்தைகளுக்குச் சரியான அளவு தூக்கம் இல்லாததால் தான் இங்க்லண்டில் அநேக சிறுவர்களும் சிறுமிகளும் சித்த ஸ்வாதீனமில்லாமல் பைத்யம் பிடித்துப்போய் விடுகிறார்கள் என்றும் குழந்தைகள் அதிக நேரம் தூங்கும்படி செய்தால் இப்படி நேருவது குறையும் என்றும் ஒரு ப்ரபல டாக்டர் சொல்லுகிறார். தூங்கும்போது தான் தளர்ச்சி யடைந்த நரம்புகள் நல்ல ஸ்திதியடைகின்றனவாம். ஆகையால் சிறுவர் சிறுமிகளினுடைய தேகங்களில் நரம்புகள் நன்றாயிருக்கும் பொருட்டு அவர்கள் அதிக நேரம் தூங்கும்படிப் பலவிதங்களிலும் ஸௌகர்யம் செய்யவேண்டும்.

CHAKKARAI PONGAL.

சர்க்கரைப் பொங்கல்.

அரைச்சேர் நல்ல பச்சரிசியும் சிவக்க வறுத்த பாசிப்பயிறு அரைக்கால் சேரும் எடுத்துக்கொண்டு இரண்டையும் கலந்து நன்றாய்த் தண்ணீரில் களைந்து, நீரைவடித்துவிட்டு ஒரு அணு எடையுள்ள குங்குமப்பூவை இரண்டு தோலா அளவுள்ள தண்ணீரில் அரைத்து எடுத்து அரிசியோடு கலந்து விடவேண்டும். பிறகு இரண்டரைச்சேர்கொள்ளும் படியான வெண்கலப் பானையில் கொட்டி ஒரு சேர் சுத்தமான தண்ணீரை வார்க்கவேண்டும். நிதானமாக நாற்புறமும் எரிகிற அடுப்பில்வைத்து நன்றாகக் கொதிவருகிறபோது கிளறிக்கொடுக்க வேண்டும். முக்கால் பதத்தில் 4 தோலா வெண்ணெய், 30 தோலா வெள்ளைச் சர்க்கரை, 24 தோலா நெய் ஆகிய இவைகளைப்போட்டுக் கிளறி 5 நிமிஷம் அடுப்பின்மேல் வைத்திருந்து கீழே இறக்கிவிடவேண்டும். மறுபடியும 3 தோலா பாதம பருப்பு, 21 தோலா முந்திரிப்பருப்பு இரண்டையும் 4 தோலா நெய்யில் வறுத்து, ½ தோ

லா ஏலம், 2 தோலா ஜாதிப்பத்திரி இவைகளை யும் சேர்த்து தயாராக வைத்துக்கொண்டு கீழ் இறக்கின வுடன் கலந்து கிளறிவிட வேண் டும். இரண்டு அணு எடையுள்ள பச்சைக் கற்பூரத்தைப் பொடி செய்து அதில் போட் டுக் கலந்து விடவேண்டும். இதை சாப் பிட்டுப் பார்த்தால் அப்போது கை நிதானத் தில் சர்க்கரைப்பொங்கல் செய்கிறதற்கும் அளவின்பேரில் செய்கிறதற்கும் வித்யாஸம் தெரியும்.—பெண் கல்வி.

LADIES' RECREATION CLUB.

ஸ்த்ரீகளின் உல்லாஸ ஸங்கம்.

இந்த ஸங்கத்தைப்பற்றிச் சென்றவருஷம் தைமாஸத்து ஸஞ்சிகையில் குறிப்பிட்டிருந் தோம். அதன் வருஷாந்த மீட்டிங்கு இந்த மாஸம் 6-தேதி யன்று நடைபெற்றது. இந்த ஸங்கத்துக்கு லேடி பெண்ட்லண்ட் ப்ரெஸி டெண்டாக இருக்கிறார். இதில் 225-மெம் பர்கள் இருக்கிறார்கள். இந்த ஸங்கத்தில் ஒவ்வொரு வாரமும் செவ்வாய்க்கிழமையினும் சனிக்கிழமையிலும் மீட்டிங்குகள் நடைபெறு கின்றன. மெம்பர்கள் டென்னிஸ்—ம் பில்லி யார்டு பந்தும் ஆடுவதற்கு ஸௌகர்யங்கள் செய்து கொடுக்கப்பட்டிருக்கின்றன. சென்ற வருஷம் லேடி ஹார்டிஞ்ஜ் சென்னைக்கு வந்த ஸமயத்திலும் இன்னொரு ஸமயத்திலும் உல்லா ஸக் கச்சேரிகள் நடத்தப்பட்டன. இந்த ஸங்கத்தில் ஐரோப்பிய ஸ்த்ரீகள் மட்டுமில்லா மல் இந்திய ஸ்த்ரீகளும் மெம்பர்களா யிருந்து வருகிறார்கள்.

A SANSKRIT GIRLS' SCHOOL.

ஒரு ஸம்ஸ்க்ருதப் பெண் பள்ளிக்கூடம்.

சென்னை திருவல்லிக்கேணியில் ஒரு ஸம்ஸ் க்ருதப் பெண் பள்ளிக்கூடம் நடந்து வரு கிறது. அதில் தற்போது 30 கன்னிகை களும் 10 பெரிய ஸ்த்ரீகளும் ஸம்ஸ்க்ருதம் வாசித்து வருகிறார்கள். இந்தப் பள்ளிக் கூடம் தஞ்சாவூர் ஜில்லா கோமலைச் சேர்ந்த வெங்கடேச்வர தீக்ஷிதருடைய புத்ரியாகிய கமலாம்பாள் அம்மாளால் ஸ்தாபிக்கப்பட் டது.

WOMEN AND CO-OPERATION.

கோவாபரேஷனும் ஸ்த்ரீகளும்.

வடக்கே ஐக்யமாகாணங்களில் உள்ள பாமீ பூர் என்னும் க்ராமத்து கோவாபரெடிவ் ஸங் கத்தில் ஸ்த்ரீகளும் மெம்பர்களாயிருக்கிறார் களாம். ஸமீபத்தில் அந்த ஸங்கத்தின் மீட் டிங் ஒன்று நடந்தபோது 8-ஸ்த்ரீ மெம்பர் கள் மீட்டிங்குக்கு வந்திருந்தார்களாம். மே லும் அந்த ஸங்கத்து மெம்பர்களுடைய குழந் தைகளுக்கு இலவசமாயும் கட்டாயமாகவும் படிப்பு சொல்லிக் கொடுக்கிறார்களாம்.

A DAILY FOR WOMEN.

ஸ்த்ரீகளுக்கு ஒரு தினஸரி பத்ரிகை.

துருக்கியின் ப்ரதான நகரமாகிய கான்ஸ் டாண்டிநோபிளில் ஸ்த்ரீகளுக்காகவென்று ஒரு தினஸரிப் பத்ரிகை நடந்து வருகிறது. அதற்கு "காண்டிலரீ டீனியாஸ்ஸி" அதாவது ஸ்த்ரீ ப்ரபஞ்சம் என்று பெயர். அதற்கு சந்தாதாரர்கள், 5800 பேர் இருக்கிறார்கள். இதை நடத்துபவர் ஒரு ஸ்த்ரீயாம். இலக் கியங்களிலும் லோகவிஷயங்களிலும் ஸ்த்ரீகள் அதிக ஊக்கம் பாராட்டும்படி செய்வதும், தங்கள் குழந்தைகளுக்கு எப்படிக் கல்வி கற் பிப்பது என்பதை அவர்களுக்குக் கற்பிப் பதும், ஸ்த்ரீகள் ஸ்வயேச்சையாயும், பிறரு டைய பண உதவியை எதிர் பாராமலும் எப் படி ஜீவனம் செய்கிற தென்பதைக் காட்டு வதுமே அந்தப் பத்ரிகையின் நோக்கங்க ளாம்.

Biography.

ஜீவ்ய சரித்ரம்.

Mr. G. SUBRAMANIA AIYAR.

மிஸ்டர். ஜி. ஸுப்ரமணிய ஐயர்.

ஸ்ரீ. ஜி. ஸுப்ரமணிய ஐயர் 1855-ம் வருஷம், ஜனவரிமாஸத்தில் தஞ்சாவூர் ஜில்லாவைச் சேர்ந்த திருவையாற்றில் பிறந்தவர். இவருடைய முன்னோர்களுக்குப் பூர்வீகமான ஊர் ஸப்த ஸ்தலங்களுக்குள் ஒன்றாகிய நந்திமங்கை யென்ற நல்லிச்சேரி. இவருடைய தகப்பனாரின் பெயர் கணபதி ஐயர். இவர் திருவையாற்று முன்ஸிப் கோர்ட்டில் வக்கீல் உத்யோகம் செய்துவந்தார். ஸுப்ரமணிய ஐயருக்கு ஆறு ஸஹோதரர்களும் ஒரு ஸஹோதரியும் உண்டு. பதினன்கு வயதாக இருக்கும்பொழுதே அவர் தகப்பனார் இறந்துபோனார். அது முதல் ஸுப்ரமணிய ஐயர் முதலிய எட்டுப் பிள்ளைகளையும் பாதுகாக்கும் பொறுப்பு அவருடைய தாயார் தர்மாம்பாளுக்கு நேர்ந்தது. ஸுப்ரமணிய ஐயர் பால்யத்தில் திருவையாறு தாலூக்கா பாடசாலையில் கல்விகற்று, பிறகு தஞ்சை எஸ். பி. ஜி. காலேஜ் என்ற மிஷன்காலேஜை யடைந்து, 1871-ம் வருஷம் மெட்ரிகுலேஷன் பரீக்ஷையிலும், 1873-ஆம் வருஷத்தில் எப். ஏ. பரீக்ஷையிலும், தேறினார், பி. ஏ. பரீக்ஷைக்கும் வாசித்துவிட வேண்டுமென்று ஆசை யிருந்தும், ஸௌகர்யங்களில்லாமையால் சென்னை நார்மல் ஸ்கூலில் உபாத்திமைத் தொழில் கற்று, வி. எஸ். எம். என்னும் ஒரு மிஷன் பாடசாலையில், மாதம் ஒன்றுக்கு 40 ரூபாய் சம்பளத்தில் அமர்ந்து, பிறகு 1877-ம் வருஷத்தில் பச்சையப்ப முதலியார் கலாசாலையில் உபாத்யாயரா யிருந்து, ப்ரைவேட்டில் படித்து, சென்னை யூனிவர்ஸிடியில் 17 வது மாணக்கராய் பி. ஏ. பரீக்ஷையில் தேறி, 1878-ம் வருஷத்தில் பி. ஏ. பட்டம் பெற்றார். அதற்கு அடுத்த வருஷம் திருவல்லிக்கேணி "ஆங்கிலோ வெர்னகுலர்" பாடசாலைக்கு தலைமை உபாத்யாயரானார். இப்படி சென்னையில் ஐந்து வருஷ காலம் உபாத்யாயர் தொழில் செய்து, பிறகு லோகோபகாரமான பெரிய விஷயங்களிலே செல்ல வேண்டுமென்ற எண்ணங்கொண்டு, தனக்குற்ற நண்பரான காலஞ்சென்ற எம். வீரராகவாசாரியாருடன் சேர்ந்து, 1878-ம் வருஷத்தில் "ஹிந்து" பத்ரிகையைத் தொடங்கினார். அந்தப் பத்ரிகை தொடக்கம் முதல் பொது ஜனங்களின் ஆதரவையும் மதிப்பையும் பெறத் தொடங்கிற்று. 1881-ம் வருஷத்தில் சேலத்தில் இந்துக்களுக்கும் மகம்மதியர்களுக்கும் மத ஸம்பந்தமாய் நேர்ந்த கலகத்தில் ஜி. ஸுப்ரமணிய ஐயர் பொது ஜனங்களுக்கு மட்டுமல்ல, ஸர்க்காருக்கே செய்த பேருபகாரம் சிறிதல்ல. அப்போது ஸுப்ரமணிய ஐயரை கையெடுத்துக் கும்பிடாதவர்கள் ஒருவரும் இல்லை. இதே மாதிரியாக பல விஷயங்களிலும், ஸுப்ரமணிய ஐயருடைய பெயரும் கீர்த்தியும் சென்னைமாகாணம் முழுவதும் பரவத் தொடங்கியது. பத்ரிகை தொடங்கி மூன்று வருஷமாவதற்குள், அதனாலுண்டான பொது நன்மை அளவற்றதாய், பத்ரிகை பலப்பட்டு விட்டது. பிறகு இங்க்லீஷ் தெரியாத பொது ஜனங்களின் நன்மையின் பொருட்டு 1882-ம் வருஷம் ஏப்ரல் மாதத்தில் "சுதேச மித்திரன்" பத்ரிகையை ஸ்தாபித்து 1898-ம் வருஷம் வரையில் இரண்டு பத்ரிகைகளையும் நடத்திவந்தார். இப்படியிருக்குங் காலத்தில் அவர் இங்க்லாந்துக்குச் செல்லும்படியான

ஸந்தர்ப்பம்' வந்தது. அதென்னவெனில், இந்தியாவின் பொருட்டு செய்யப்படும் செலவு விவரங்களைப்பற்றி, இந்தியாவிலுள்ள ஜனத் தலைவர்களுடைய அபிப்ராயங்களை யறிந்து சீர்திருத்தம் செய்வதற்காக இங்லாந்தில் "வெல்பி" கமிஷன் என்று ஒரு கம்மிட்டி நிய மிக்கப்பட்டது. அப்பொழுது இந்தியாவி லுள்ள ஜனங்கள் தங்கள் தங்கள் ஜனத்தலை வர்களை யனுப்பினார்கள். மஹாஜன ஸபை யார் சென்னையிலிருந்து ஸுப்ரமணிய ஐயரை அனுப்பினார்கள். அப்பொழுது அவர் இந்தி யாவில் ராணுவத்தின் நிமித்தமும், ரயில் பாதையின் பொருட்டும், செலவு அதிகப்பட்டு விட்டதாயும், அவைகளைக் குறைத்து பொது ஜனங்களின் வித்யாபி வ்ருத்தியின் பொருட்டு செலவழித்தால் ஏராளமான நன்மை உண்டாகுமென்றும் எடுத்துக் காட்டினார். பகைவர்கள் இந்தியாவின் மேல் படையெடுத்து வராமல் கோடிக் கணக்கான பொருளைச் செலவிட்டு ஏராளமான சேனையை வைத்திருப் பதினாலுண்டாகும் ஸௌக்யம் பெரிதே என் றாலும், இந்தியர்களும் ப்ரிட்டிஷாரும் அந்த நன்மையை பொதுவாய் அனுபவிக்கிறபடியால், அதன் நிமித்தம் ஏற்படும் செலவை இந்தியரும் ப்ரிட்டிஷாரும் இரண்டு பேரும் கொடுக்க வேண்டுமேயன்றி, எல்லாச் செலவையும் இந்தியாவின் தலையிலேயே வைப்பது முற்றிலும் ந்யாயம் இல்லையென்றும், முறை யிட்டார். இந்தியாவிலுண்டாகும் விளைபொருள்களை யெல்லாம் அயல்நாட்டு வர்த்தகர் ஏராளமாயும் லகுவாயும் கொண்டு போவதற்கு, ரயிலே உதவியா யிருப்பதால், அப்பொருள்கள் லகுவாய் ஏற்றுமதி செய்யப்பட்டு, இந்தியர்களை ஏழையாகச் செய்கிறதென்றும், அந்ய நாட்டு வர்த்தகர்களால் செய்யப்பட்ட துணிமணி முதலியவை, ரயில் மார்க்கத்தின் உதவியால் இந்தியாவில் எங்கும் பரவி, இந்தியக் கைத்தொழில்களை இருக்க இருக்க குறைவடையும்படி செய்து, லக்ஷக் கணக்கான இந்தியத் தொழிலாளிகளை தரித்ரர்களாக்கி விட்டதென்றும், சொல்லி, ரயில்களால் ஜனங்களுக்கு விளைந்த நன்மையிலும் தீமையே அதிகமென்று சொன்னார். இவருடைய ராஜாங்க ஸம்பந்தமான ஆராய்ச்சியையும் அநுபவத்தையும் கேட்டு இங்கிலாந்திலுள்ள ராஜ தந்த்ரங்களில் தேர்ந்த ப்ரமுகர்கள் மெச்சினார்கள்.

1898ம் வருஷத்தில் "ஹிந்து" பத்ரிகையினின்று விலகி, தமது கவனம் முழுவதையும் "சுதேசமித்திரன்" மேல் செலுத்தினார். முதவில் அது வாரப் பத்ரிகையா யிருந்து, பிறகு வாரம் இருமுறை, மும்முறையாகவும் சில காலம் நடந்து, 1899ம் வருஷத்தில், தினப் பத்ரிகை யாகமாறிற்று. அப்படி அதை மாற்றும் பொழுது அநேகர் அவரை அதைரியப்படுத்தினார்கள். அதைக் கொஞ்சமேனும் கவனியாமலே நினைத்ததை முடித்து விடவேண்டுமென்றே கொஞ்சமேனும் மனங் கலங்காமல் துணிந்து நின்றார். சென்ற 13 வருஷகாலமாக "சுதேசமித்திரன்" தமிழ் நாட்டிற்கு அளவற்ற நன்மை செய்திருக்கிறது.

தமக்கு சரியென்று தோன்றும் விஷயங்களை வெளிப்படையாய்ச் சொல்வதிலும், தாமும் சொன்னபடி நடப்பதிலும் ஐயர் அஞ்சுவதில்லை. பால்ய விதவைகளுக்கு மறுபடி கல்யாணம் செய்துவிட வேண்டியது அவச்யமென் றுவாதித்து வந்தார். சோதனை போல் அவருடைய சிறுபெண் வித்வையாகவே ஐயர் தைர்யமாய் அந்தப் பெண்ணுக்கு மறுவிவாகம் செய்வித்தார். அந்த ஸமயத்தில் ஐயரையும் அவருக்கு ஒத்தாசையா யிருந்தவர்களையும் சென்னை திருவல்லிக்கேணியில் சில வைதிக ஜனங்கள் படுத்தின பாட்டை நாம் நன் றாய் அறிவோம். ராஜாங்க கார்யங்களில் சில விஷயங்களைக் கண்டித்து எழுதியதற்காக

கவர்ன்மெண்டார் அவரை கைது செய்து, பிறகு அவரை விடுவித்தவிஷயமும் நம்முடைய நேயர்களுக்குத் தெரிந்திருக்கலாம். ஆதியில் ஹிந்துப் பத்திரிகை மூலமாயும், பின்பு சுதேசமித்திரன் மூலமாயும் ஐயர் தென்னிந்தியாவுக்கு அளவற்ற நன்மை செய்திருக்கிறார். தென்னிந்தியாவில் பொது ஜனங்களுக்குள் தோன்றியிருக்கும் கிளர்ச்சியும், தேசாபிமானமும் வெகுவாய் ஸுப்ரமணிய ஐயரால் உண்டானவையே. நாளது மாஸம் 26-ம் தேதியன்று ஐயருக்கு ஷஷ்டி அப்த பூர்த்தி நடந்தது. இங்கிலீஷ் தெரியாத தமிழர்களுக்கு அறிவை ஊட்டுவதையே விரதமாகக் கொண்டவர்கள் ஸ்வல்பமே யாதலால் அந்த வேலையை நீடித்து நடத்திவர ஐயரவர்களுக்கு நீண்ட ஆயுளையும், தேகஸௌக்யத்தையும் கொடுக்கும்படி ஈச்வரனைப்பிரார்த்திக்கிறோம்.

Short Stories.

சிறு கதைகள்.

MADE AN ASS OF HIM.

மடையனாக்கி விட்டான்.

ஒருவன் தன் ஸ்நேகிதனைப்பார்க்க அவன் வீட்டிற்கு பகலில் நல்ல வெயிலில் புறப்பட்டுப் போனான். அவன் வருவதைப்பார்த்த அவனுடைய ஸ்நேகிதன், தன் வேலைக்காரர்களை யழைத்து, அவனைச்சுட்டிக்காட்டி "இவனுக்கு நான் வீட்டிலில்லை," வேறு எங்கேயோ விருந்துண்ணச்சென்றிருக்கிறேன், என்று சொல்லி யனுப்பி விடுங்கள்," என்றான். அப்படியே சற்று நேரத்திற்கெல்லாம், வந்தவன் வீட்டு யஜமானன் எங்கே என்று வேலைக்காரர்களைக் கேட்க, அவர்கள் "எங்கேயோ வெளியில் போயிருக்கிறார்" என்று சொல்லவே அதைக் கேட்டு, "ஆ! ஆ! பெரிய வெட்கம், எந்த முட்டாளாவது இந்தக் கடுமையான வெயிலில் வெளிப்புறப்படுவானா" என்றுவெறுத்துக்கூற, வீட்டுயஜமானன் ஜன்னலின் வெளியேதலையை நீட்டி "இவ்வெயிலில் வந்த நீயேமூடன்; நான் 'ஒரு விடத்திற்கும் அசையவில்லை; வீட்டிலே யிருக்கிறேன்' என்றானாம்.

JUST FOR HELP.

தூக்கிவிட

ஒரு காட்டில் விறகுவெட்டிக்கொண்டிருந்த ஒரு கிழவன் தன் தலைவிதியை நொந்து, விறகின் சுமை பளுவாயிருப்பதையிட்டு, தானே தூக்கித் தலையில் வைத்துக்கொள்ள சக்தியில்லாதவனாய் "அடே யமதூதா, இங்கு வந்து என்னைக்கொண்டுபோக மாட்டாயா" என்று உறக்கக்கூவினான். அப்பொழுது அவ்வழியே சென்ற ஒரு தூதன் இவன் முன் வந்து நின்று, "ஏ, கிழவா, நீ ஏன் கூப்பிட்டாய்?" என்று கேட்க, தூதனைப்பார்த்து நடு நடுங்கி வாய் குளறி, "வேறு யாதொன்றுமில்லை, சற்று இந்தச் சுமையை என் தோளில் தூக்கிவிடக் கூப்பிட்டேன்," என்று மறுமொழி சொன்னான்.

PREPARED FOR TRIAL.

விசாரணைக்குத் தயார்.

ஒருவன் வீட்டில் ஒருபை ரூபாய்கள் களவு போயின. உடனே வீட்டுக்காரன் ந்யாயாதிபதியிடத்தில் தெரிவித்தான். ந்யாயாதிபதி எவ்வித உபாயம் செய்தும் திருடனைக் கண்டுபிடிக்கக்கூடவில்லை. கடைசியாகச் சிலரைக்கூப்பிட்டு உங்களில் ஒவ்வொருவருக்கும் ஒரு முழம் நீளமுள்ள ஒருகம்பு இன்றிரவு கொடுக்கிறேன். இதில் திருடன் கையிலுள்ள கம்பு மறுநாட்காலையில் ஒரு அங்குலம் நீளும் என்று சொன்னார். அப்படியே ஒவ்வொருவரும் ஒரு கழியுடன் வீடு சென்றார்கள். அன்றிரவில் திருடன் பயந்து தன்னுக்குள் ஆலோசித்து இப்பொழுதே இதில் ஒரு அங்குலம் வெட்டிவிட்டால் விடியற்காலத்தில் எல்லாருடைய

கழியையும் ஒத்திருக்கும் என்று எண்ணி ஒரு அங்குலம் வெட்டி விட்டான். மறுநாள் உதயத்தில் எல்லாருடன் ந்யாயதிபதி முன் செல்லவே திருடன் லகுவில் அகப்பட்டான்.

TRUTH FOUND OUT.

உண்மை வெளிப்பட்டது.

ஓர் இரவில் ஒரு காஜியார் ஒரு புஸ்தகத்தில் சிறிய தலையும் நீண்ட தாடியும் உள்ளவன் மடையனாய் இருப்பான் என்று எழுதப்பட்டிருப்பதைப் பார்த்தார். தனக்கு சிறிய தலையும் நீண்ட தாடியும் இருந்தமையால் மிக வெட்கி ஒரு உபாயம் செய்தார். அதென்னவென்றால்:—தலையை பெரிது செய்துகொள்ள முடியாதே ஒழிய, தாடியைச் சிறிது செய்து விடலாமென்று எண்ணி, கத்திரியைத்தேட, அதைக்காணாதபடியால், உடனே ஸமீபத்திலிருந்த விளக்கில் பாதி தாடியை கையினால் பிடித்துக்கொண்டு மற்றொரு பாதியைக்காட்டினார். தீ பிடித்துக் கையினிடம் நெருங்கவே, தாடியினின்றும் கையை விட்டுவிட்டார். தாடி முழுமையும் பற்றி பெரிந்து விட்டது. அப்பொழுது புஸ்தகத்தில் எழுதி யிருந்தது மெய்யாயிற்றே என்று மிகவும் துக்கித்தாராம்.

POET PUT TO SHAME.

கவி வெட்கமடைந்தது.

ஒரு கவி ஒரு பணக்காரனிடத்தில் போய் மிகவும் புகழ்ந்து பாடினார். அதைக்கேட்டு ஆனந்தித்த அந்த தனிகன், "இப்பொழுது என்னிடம் பணமில்லை, வேண்டிய தான்யங்களிருக்கின்றன, நாளைக்கு வாரும், தருவேன்" என்றான். கவி மெய்யென்று எண்ணி மறுநாட்காலையில் இவர் வீட்டுக்கு வரவே, ஏன் நீர் மறுபடியும் இங்கு வந்தீர் என்று தனிகன் கேட்டான். அதற்கவர் "நேற்று தாங்கள் எனக்கு தருவதாக வாக்களித்த தான்யத்தைக் குறித்துத் தான் வந்தேன்" என்று கவி சொல்லவே, அந்தப்பணக்காரன், "நீர் என்ன, ஒரு பெரிய பேயன்போல் தோற்றுகிறது. நீர் என்னை வார்த்தையினால் ஸந்தோஷப்படுத்தினீர்; நானும் அவ்வாறே செய்தேன், ஆகையால் நீர் ஏன் இங்கு வரவேண்டும்; நான் ஏன் உமக்குத்தான்யம் கொடுக்கவேண்டும்" என்றார். கவி வெட்கி வீடு சென்றார்.

MISER'S STRATAGEM

க்ருபணன் யுக்தி.

ஒரு க்ருபணன் தன் ஸ்நேகிதனிடத்தில் போய் "என்னிடத்தில் இப்பொழுது ஆயிரம் ரூபாய் இருக்கிறது. இதை பட்டணத்திற்கு வெளியில் எங்கேயாவது புதைத்து வைக்கலாமென்று யோசிக்கிறேன். இந்த ரகஸ்யம் நம் இருவருக்கும் தெரிந்ததாக இருக்க வேண்டும்", என்று சொல்லி நகரத்திற்கு வெளியே ஒரு மரத்தடியிற் புதைத்து வைத்தான். சில நாள் கழிந்த பிறகு க்ருபணன் தனியே போய் மரத்தினடியில் பணத்தைக் காணாமல், தனக்குள் ஆலோசித்து தன் ஸ்நேகிதனைத்தவிர வேறு ஒருவனும் எடுத்திருக்க மாட்டான் என்று எண்ணி, ஆனால் அவனை கேட்பதினும் பயனில்லை என்று தைர்யப்படுத்திக்கொண்டு, அந்த ஸ்நேகிதன் வீட்டுக்குப் போய், "என்னிடத்தில் ஏராளமாகப் பணம் கிடைத்திருக்கிறது. முன் போலவே நாமிருவரும் சேர்ந்து போய் அதே யிடத்தில் இதையும் நாளைக்காலையில் புதைத்து வருவோமா?" என்று கேட்க, ஸ்நேகிதன் பேராசை கொண்டு சரி என்று மனம் ஒப்பி, அடுத்த நிமிஷமே தான் முன் கொண்டு வந்த பணத்தை முன்னிருந்த இடத்திலேயே புதைத்து வீடு வந்து சேர்ந்தான். மறுநாள் க்ருபணன் தனியே போய் தன் பணத்தை எடுத்து த்ருப்தியடைந்து இனி யாரிடத்திலும் நம்பிக்கை வைப்பதில்லை என்று தீர்மானித்தான்.

Departmental Notes.

பகுதிக் குறிப்புகள்.

FUN AND ANECDOTE.

வேடிக்கையும் துக்கடாக்கதைகளும்.

POSTAGE STAMP COLLECTING.

போஸ்டேஜ் ஸ்டாம்ப் சேகரித்தல்.

போஸ்டேஜ் ஸ்டாம்ப் சேகரிப்பதில் அநேகர் ஆவல் கொண்டிருக்கிறார்கள். இது விஷயமாக அநேக ப்ரபுக்கள் ஏராளமாய்ப் பணம் செலவழித்தும் வருகிறார்கள். உலகத்திலுள்ளவர்களில் எவரையும் விட ஏராளமான ஸ்டாம்ப் வைத்திருப்பவர் ஆஸ்ட்ரியா தேசத்தைச் சேர்ந்த ஹெர்வான் பெர்ராரி என்னும் ப்ரபு ஆவர். ஸ்டாம்புகளுக்காக அவர் $37\frac{1}{2}$-லக்ஷம் ரூபாய்க்கு மேல் செலவுசெய்திருக்கிறாராம். போஸ்டேஜ் ஸ்டாம்ப் ஏற்பட்டது முதல் நாளதுவரையில் வெளியிடப்பட்ட ஸ்டாம்புகள், கவர்கள், கார்டுகள், ராப்பர்கள் எல்லாம் இவரிடம் இருக்கின்றன. இவைகளின் தற்போதிய விலை கிட்டத்தட்ட $1\frac{1}{2}$ கோடி ரூபாய் இருக்குமாம். கொஞ்ச காலத்துக்கு முன்னால் வரையில் அந்த ப்ரபு லண்டனுக்குப்போய் ஸ்டாம்ப் சேகரித்துக்கொண்டிருந்தாராம். ஆனால் தற்போது அவர் ஸ்டாம்ப் சேகரிப்பதில் முயற்சி எடுத்துக் கொள்ளாமல் பாரிஸில் வஸித்து வருகிறார்.

MEANING OF WORDS.

வார்த்தைகளின் அர்த்தம்.

திருடன்:—நகர்ந்தீரோ நீர் பிணந்தான், ஜாக்ரதை.

வித்வான்:—என்னடா உளறுகிறாய். நான் நகர்ந்தால் நான் உயிரோடிருக்கிறேன் என்பது ஏற்படவில்லையா. வார்த்தைகளை அர்த்தம் தெரிந்துகொண்டு உபயோகி.

THE MEDICAL EXPERT.

வைத்ய நிபுணர்.

கொஞ்சகாலத்துக்கு முன்னால் கான்ஸ்டாண்டிநோபிளில் ப்ளேக்நோய் ஆரம்பமாயிற்று. அப்போது ஸுல்தான் அப்தல் ஹமீத் அங்குள்ள வைத்ய நிபுணர்களை ப்ளேக் நோய் ஆரம்பமானதற்குக் காரணமென்னவென்று கேட்டார். வைத்யர்கள் குடிஜலம் கெடுதலடைந்திருப்பதே அதற்குக் காரணமென்று சொன்னார்கள். அதன்மேல் ஸுல்தான் ஆறு புட்டிகளைக் கொண்டுவரச்சொல்லி தமது அரண்மனையிலுள்ள கிணறுகளின் ஒன்றின் ஜலத்தால் நிரப்பச்சொல்லி, அவைகளைக் கார்க் போட்டு மூடி, தமது ஸீலிட்டு, புட்டிகளிலுள்ள ஜலம் இன்ன விடத்திலிருந்து எடுக்கப்பட்டதென்பதை யாருக்கும் தெரியாமலிருக்க ஏற்பாடுசெய்து, புட்டிகளை ஒரு வைத்யருக்கு அனுப்பி, அவைகளைப் பரிசோதிக்கச் சொன்னாராம். அந்த வைத்யர் அவைகளைப் பரீக்ஷித்துப் பார்த்து, அவைகளில் நான்கு புட்டிகளில் ப்ளேக் க்ருமிகள் இருந்தனவென்றும், ஐந்தாம் புட்டி ஜலத்தில் க்ருமிகள் இல்லாவிட்டாலும் ஸாதாரண அசுத்தங்கள் இருந்தனவென்றும், ஆறாம் புட்டி ஜலந்தான் மிகப் பரிசுத்தமாயிருந்ததென்றும் தெரிவித்தார். ஸுல்தான் அதைக் கேட்டதும் மிகவும் வியப்படைந்து வைத்யர்கள் சொல்லுவதில் எவ்வளவு நம்பிக்கை கொள்ளலாம் என்பதைப்பற்றி எண்ணிக்கொண்டு அதைப்பற்றி வெளியில் சொல்லாமல் இருந்து விட்டார்.

CURIOSITIES.

விநோதங்கள்.

HUMAN "X-RAYS."

மனித "எக்ஸ் ரேஸ்"

வெளிச்சமானது கண்ணாடியின் வழியாய் ஊடுருவிச் செல்வதுபோல் பலகை சுவர் முதலியவைகளின் வழியாய் ஊடுருவிச்செல்ல முடியாது. ஸாதாரண வெளிச்சம் ஒன்றில் ஊடுருவிச் செல்லுமானால் அந்தப்பொருள் வெளிச்சம் ஊடுருவிச் செல்லும் தன்மையுடையது என்றுசொல்லப்படும். இந்தத் தன்மைக்கு இங்க்லீஷில் 'ட்ரான்ஸ்பேரன்ஸி' என்று பெயர். ஸாதாரண வெளிச்சம் ஊடுருவிச் செல்லாத பொருள்களிலும் ஊடுருவிச் செல்லக்கூடிய தான ஒரு ஜோதி சில வருஷங்களுக்கு முன்னால் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. அதைக் கண்டு பிடித்தவர் ராண்ட்ஜன் என்னும் சாஸ்த்ரியாவார். அந்த ஜோதிக்கு 'எக்ஸ்ரேஸ்' அல்லது 'ராண்ட்ஜன் ரேஸ்' என்று பெயர்.

அமெரிக்காவிலுள்ள ரோட்ஸ்தீவில் பத்து வயஸுள்ள ஒரு சிறிய பெண் இருக்கிறாள். அவளுடைய கண் பார்வையானது "எக்ஸ் ரேஸ்" ஜோதியைப்போல் ஸாதாரண வெளிச்சம் ஊடுருவிச் செல்லமுடியாத பொருள்களால் மறைக்கப்பட்டிருக்கும் வஸ்துக்களையும் பார்க்க முடிகிறதாம். இந்த விசித்ரமான பார்வையுள்ள பெண்ணைப்பற்றிக் கேள்விப்பட்ட அநேக வைத்யர்கள் அவளைப் பரீக்ஷித்தார்களாம். அவள் பக்கத்திலிருப்பவர்களின் சட்டைப்பைகளில் இருப்பவைகள் என்னவென்பதையும், புஸ்தகங்கள் மூடியிருக்கும்போது அவைகளில் குறித்திருக்கும் எண்களையும், பலகை, சுவர் முதலியவைகளுக்குப் பின்னால் வைத்து மறைந்திருக்கும் வஸ்துக்களின் விவரங்களையும் சொல்லுகிறாளாம். அவளை பரீக்ஷித்த டாக்டர்கள் அந்தப்பெண்ணுக்கு அப்படிப்பட்ட குணமிருக்கிறதென்பதில் யாதொரு ஸந்தேகமில்லை யென்றும், அவளுடைய மனோ சக்திகள் அபாரமானவை யென்றும், அவளுக்கு "எக்ஸ்ரே"யைப்போன்ற பார்வை யுண்டென்றும் சொல்லுகிறார்கள்.

HOW MUCH A MAN EATS.

மனிதன் உண்ணும் உணவின் அளவு.

அறுபது வருஷம் ஜீவித்திருக்கும் ஒரு மனிதன் தனது வாழ்நாளில் 54-டன் அதாவது 1472-மணங்கு நிறையுள்ள கெட்டியான ஆகாரமும்,53-டன் அதாவது 1415-மணங்கு நிறையுள்ள த்ரவப்பொருளும், சாப்பிடுகிறான்என்று ஒரு இங்க்லீஷ் சாஸ்த்ரீ கணக்கிட்டிருக்கிறார்.

அவன் ஜீவித்திருக்கும் 60-வருஷ காலத்திற்குள் 12,000 முட்டைகள், 400-ராத்தல் பாலடைக்கட்டி, 4 டன் (ஒரு டன் என்பது 27¼-மணங்கு) மீன் ஆகிய இவைகளை சாப்பிடுகிறான். அவன் சாப்பிடும் காய்கறிகளோ ஏராளமானவை. அவைகளை யெல்லாம் ஒருமிக்க ஒரு வண்டித்தொடரில் போடவேண்டுமானால் அதற்கு அந்த வண்டித்தொடர் 3-மைல் நீளமிருக்கவேண்டுமாம்.

A PIG IN A SNAKE'S BODY.

ஒரு பாம்பின் வயிற்றில் ஒரு பன்றி.

ஸமீபத்தில் ஹாங்காங்கில் ஒரு இந்தியர் ஒரு பெரும் பாம்பைச்சுட்டுக் கொன்றார். அது 22 அடி நீளமுள்ளதாயும் 14-அங்குலம் சுற்றளவுள்ளதாயும் இருந்தது. அதன் வயிற்றில் 46-ராத்தல் நிறையுள்ள ஒரு பன்றி யிருந்தது. பன்றியும் பாம்பும் சேர்ந்து மொத்தம் 100-ராத்தல் நிறையிருந்தனவாம்.

A TALKING CLOCK.

பேசும் கடியாரம்.

ஜெர்மனியின் ப்ரதான நகராகிய பெர்லினில் ஒருவர் பேசும் கடியாரம் செய்திருக்கிறாராம். இது கால்மணிக் கொருதரம் காலத்தைச் சொல்லுமாம். அதாவது 10-மணி, 10¼-மணி, 10½-மணி என்று இப்படிச் சொல்கிறதாம்.

HINTS AND RECIPES.
யுக்திகளும் முறைகளும்.

CLEANING BONES AND IVORY.
எலும்புகளையும் தந்தங்களையும் சுத்தம் செய்தல்.

எலும்புகளையும் தந்தங்களையும் சுத்தம் செய்ய சில நல்ல முறைகள் இருக்கின்றன. (1) டர்பண்டைன் எண்ணெயைக் கொண்டு சுத்தம் செய்வதால் எலும்புகளிலும் தந்தங்களிலுமுள்ள கெட்ட நாற்றமும், கொழுப்புப் பசையும் போய் விடுவதோடு அவைகள் நல்ல வெண்மை நிறமடைகின்றன. அவைகளை சுத்தம்செய்ய பின்வருமாறு செய்யவேண்டும். ஒரு கண்ணாடிப் பாத்ரத்தில் துத்தநாகத் தகடுகளை வைத்து, அவைகளின் மேல் சுத்தம் செய்யவேண்டிய எலும்புகள் அல்லது தந்தங்களை வைத்து, பிறகு அந்தப் பாத்ரத்தில் டர்பண்டைனை ஊற்றி மூன்று நான்கு நாள் வெயிலில் வைக்கவேண்டும். நிழலில் வைத்தால் அதிககாலம் வைத்திருக்கவேண்டும். இதனால் டர்பண்டைனிலிருந்து ஒருவித புளித்த த்ராவகம் உண்டாகி எலும்புகளையும் தந்தங்களையும் நன்றாய் சுத்தம் செய்துவிடுகிறது.

(2) சுத்தமான சாக்பொடியை (வொய்ட்டிங்) ஜலத்தை விட்டுப் பிசைந்து கெட்டிப் பசையாக்கிக்கொண்டு பல்தேய்க்கும் ப்ரஷ்ஷினால் எலும்பு ஸாமான்மேலும் தந்தஸாமான் மேலும் நன்றாய்த் தடவிவிடவும். பிறகு சுத்த ஜலத்தை விட்டு ப்ரஷ்ஷினால் அலம்பி விட்டு நெருப்பண்டை வைத்து மெதுவாய் உலர்த்த வேண்டும். கடைசியில் கெட்டியான உலர்ந்த ப்ரஷ்ஷினால் இரண்டொரு துளி ஆல்கஹால் சாராயத்தை விட்டுத் தேய்க்கவும்.

(3) ஒரு டேபிள் ஸ்பூன் அளவு ஆக்ஸாலிக் ஆஸிட் மருந்தை அந்த அளவுக்கு 20 மடங்குள்ள கொதிக்கும் சுத்த ஜலத்தில் கலந்து கொள்ள வேண்டும். தந்த ஸாமான்களை முதலில் ஜலத்தில் நனைத்தெடுத்துக்கொண்டு, பல் தேய்க்கும் ப்ரஷ்ஷினால் அந்த மருந்து கலந்த ஜலத்தை யெடுத்து ஸாமானின் மேல் தேய்க்கவேண்டும். முதலில் ஒரே ஒரு பக்கந்தான் தேய்க்கவேண்டும். தேய்த்த பிறகு ஜலத்தைவிட்டுக் கழுவி யெடுத்து நெருப்பண்டை காய்ந்த துணியால் தேய்த்து உலர்த்த வேண்டும். நெருப்புக்கு ரொம்ப கிட்டத்தில் ஸாமானை வைக்கக் கூடாது.

CARE OF LAMPS.
விளக்குகளை ஜாக்ரதையாக வைத்துக் கொள்ளுதல்.

விளக்குகளை சுத்தமாய் வைத்துக் கொள்ளாததனாலும் திரி ரொம்பநாளாய் உபயோகப் பட்டு வந்ததில் அழுக்கடைந்து போயிருப்பதனாலும், சிம்னி நல்லதாயிராததனாலும் விளக்குகள் எரியும்போது புகை உண்டாவதுண்டு. விளக்குகளை தினந்தோறும் சுத்தம் செய்து திரிகளை வேண்டுமானால் கத்தரித்து சரிப்படுத்தி எண்ணெய் வார்த்து வைக்கவேண்டும். திரிகளில் உள்ள கரியைத் தேய்த்துவிட்டு அதன் முனையை சுத்தமாய் வைத்திருக்கவேண்டும். அடியிலுள்ள பர்னரில் (காய்) உள்ள சிறுத்வாரங்களில் ஒன்றும் அடைத்துக் கொண்டிருக்காதபடி சுத்தம் செய்யவேண்டும். விளக்குகளில் எண்ணெய் நிறைய இருக்கக்கூடாது. ஏனென்றால் எண்ணெயின் அளவானது உஷ்ணத்தால் அதிகமாகி பரவுவதற்கு இடமில்லாமல் விளக்கு வெடித்துப் போகும். மாஸத்துக் கொருதடவை பர்னரை ஸோடா ஜலத்தில் போட்டுக் காய்ச்சவேண்டும். விளக்கிலுள்ள எண்ணெயில் தூசிகள் முதலிய அசுத்தங்கள் இருந்தால் அந்த எண்ணெயைக் கொட்டிவிட்டு எண்ணெய் விடும் பாகத்தை சுத்தம் செய்யவேண்டும். விளக்கு ரொம்ப சுட்டுக் கொண்டிருக்கும்போது அதற்கு எண்ணெய் விடக்கூடாது. விளக்கேற்றும் போது திரியைத் தாழ்த்தி ஏற்றி பிறகு மெதுவாய் உயர்த்தவேண்டும்.

TAMIL LITERATURE.

தமிழ்க் கல்வி.

FEMALE EDUCATION

பெண் கல்வி.

சென்ற இரண்டு வருஷகாலமாய் சென்னையில் நடந்துவரும் பெண்கல்விப் பத்ரிகையின் பொருளமைப்பில் சில மாறுபாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. வ்யாஸங்களுக்கு முன்னால் கீதத்திரட்டும் கடைசியில் சரித்ரமும், விசேஷக் குறிப்புகளும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. விசேஷக் குறிப்புகளில் குழந்தைகள் பாதுகாப்பு, க்ருகக்ருத்யம், சமையல் முதலியவைகளைப்பற்றி யாவருக்கும் உபயோகமான குறிப்புகள் வரையப்பட்டிருக்கின்றன. இந்த மாறுதல்களால் பத்ரிகை முன்னிருந்ததைவிட இப்போது ரொம்பவும் சிறந்து விளங்குகிறது.

SUNDARA MURTHYTEVARAM.

சுந்தர மூர்த்தி தேவாரம்.

இதில் ஸுந்தரமூர்த்தி ஸ்வாமிகள் அருளிச் செய்த 100 தேவாரப் பதிகங்களும், காஞ்சிபுரம் மகா வித்வான் ஸ்ரீமத் ராமாநந்த யோகிகள் அவைகளுக்கு எழுதிய உரையும், ஸுந்தரமூர்த்தி ஸ்வாமிகளுடைய ஜீவ்ய சரித்ரமும் அடங்கி யிருக்கின்றன. ஒவ்வொரு பண்ணுக்கும் பதவுரை, பொழிப்புரை கருத்துரை, விசேஷ உரை ஆகிய இவைகள் எழுதப்பட்டிருக்கின்றன. இன்னும் ஒவ்வொரு பதிகமும் பாடப்பட்ட ஸ்தலம் இன்னவிடத்திலுள்ளதென்பதும், ஒவ்வொரு ஸ்தலத்திலும் உள்ள ஸ்வாமி தேவியார் ஆகிய இவர்களுடைய பெயரும் ஒவ்வொரு பதிகத்தின் கடைசியிலும் கொடுக்கப் பட்டிருக்கின்றன. இதில் சிலபடங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன இந்தப் புஸ்தகம் பெரிய அளவில் 712-பக்கம் கொண்டது. இதன் விலை ரூபாய் 3-ஆகும். புஸ்தகம் வேண்டுவோர் பி. சண்முக முதலியார், 5, ஆறுமுகம் தெரு, ஜார்ஜ்டவுன், மதராஸ் என்று எழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

SOME SPELLING MISTAKES.

சில எழுத்துப் பிழைகள்.

தமிழில் ஸாதாரணமாய் நேரக்கூடிய எழுத்துப்பிழைகளில் சிலவற்றையும், அவைகளை சரியாய் எழுதவேண்டிய விதத்தையும் கீழே ப்ரசுரித்திருக்கிறோம்.

பிழை.	திருத்தம்.
அவஸ்யம்	அவச்யம் (அவசியம்)
அறுவிடை	அறுவடை
ஆக்ஷி	ஆட்சி
இதுகளை	இவைகளை
எறும்	இறும்
ஈருக்கு	ஈர்க்கு
கிஜம், கெஜம்	கஜம்
காங்கிரஸ்	காங்க்ரெஸ் (காங்கிரெஸ்)
கார்த்தல்	காத்தல்
கீத்து	கீற்று
கொடலை	குடலை
ஸக்தி	சக்தி
சாஸ்வதம்	சாச்வதம் (சாசுவதம்)
சிபார்ஸு	சிபார்சு
ஸுபம்	சுபம்
சில்வு	செலவு
ஜெயம்	ஜயம்
ஜென்மம்	ஜன்மம்
ஜீவனும்ஸம்	ஜீவனும்சம்
ஸயயோஜிதமான	ஸமயோசிதமான (சமயோசிதமான)
சஹாயம்	ஸஹாயம் (சகாயம்)
சஹிதம்	ஸஹிதம் (சகிதம்)
ச்நேகிதர்	ஸ்நேஹிதர் (சிநேகிதர்)
தெரிசனம்	தர்சனம் (தரிசனம்)
நஞ்சை, நஞ்செய்	நன்செய்
பரமாறு, பரிமாரு	பரிமாறு
பரிக்ஷை	பரீக்ஷை
பிலா	பலா
புண்ணாக்கு	பிண்ணாக்கு
பொட்டி	பெட்டி
மூங்கல்	மூங்கில்
யோஜனை	யோசனை
ரஜம்	ரஸம் (இரசம்)
ருஜி	ருசி (உருசி)
லெக்ஷ்ம்	லக்ஷ்ம் (இலக்ஷ்ம்)
விஜாரணை	விசாரணை
விசுபலகை	விசிபலகை
வ்ர்த்தி	வ்ருத்தி (விருத்தி)

DIARY OF THE MONTH.

மாஸ வர்த்தமானம்.

ஜனவரி 1-தேதி.

துருக்கியின் கப்பல் படை.—ப்ரேஜில் தேசத்துக்காக கட்டப்பட்டுவரும் "ரயோ-டி-ஜனீரோ" என்னும் யுத்தக்கப்பலையும் இன்னொரு சிறிய யுத்தக்கப்பலையும் துருக்கி விலைக்கு வாங்கி விட்டது. இதற்கு வேண்டிய பணத்தை ப்ரான்ஸ் துருக்கிக்குக் கொடுத்து உதவி செய்தது. இப்படி கப்பல் வாங்கினதால் துருக்கி க்ரீஸோடு யுத்தம் செய்ய எண்ணம் கொண்டிருக்கிறதென்று சொல்லப்படுகிறது.

ஸர். பி. ராபர்ட்ஸன்.—தென்னாப்ரிக்கா விசாரணைக் கமிஷனுக்குப்போகிற ஸர். பி. ராபர்ட்ஸன் இன்று காலையில் பம்பாய்க்கு வந்து சேர்ந்தார்.

2-தேதி.

தென்னாப்ரிக்கா இந்தியர்கள்.—மிஸ்டர் காந்தி கவர்ன்மெண்டோடு பேசிவரும் பேச்சுகள் இன்னும் முடிவாகாததால், ப்ரிட்டோரியாவுக்கு இந்தியர்கள் செல்வதாக ஏற்பாடு செய்திருந்ததை, தற்போது நிறுத்திவைக்கவேண்டுமென்றும், இருந்தாலும் எப்போது புறப்பட வேண்டுமென்றாலும் இந்தியர்கள் புறப்படத் தயாராயிருக்க வேண்டுமென்றும் மிஸ்டர் காந்தி ஒரு துண்டுப் பத்ரிகை வெளியிட்டிருக்கிறார்.

டெல்லியைச் சேர்ந்த ரெவரண்ட் ஸி. எப். ஆண்ட்ரூஸூம் ரெவரெண்ட் மிஸ்டர் பியர்ஸனும் தென்னாப்ரிக்கா இந்தியர்களின் விஷயங்களைப்பற்றி விசாரித்தறிவதற்காக இன்று டர்பனுக்கு போய்ச் சேர்ந்தார்கள்.

துருக்கியின் யுத்தக்கப்பல்.—துருக்கி புதிதாய் யுத்தக் கப்பல் வாங்கியிருப்பதைப்பற்றி க்ரீஸ் கவர்ன்மெண்ட் அதிகாரிகள் ரொம்ப கவலைப்படவில்லையாம். இன்னம் கப்பல் வந்து சேர 6-மாஸமிருப்பதால் அதற்குள் க்ரீஸ் என்ன செய்யவேண்டுமென்பதைப்பற்றி ஆலோசிக்க, வேண்டிய ஸாவகாசமிருக்கிறது. கப்பல் இங்லண்டிலிருந்து புறப்பட்டு வராமலிருக்கும்படி அதற்குள் துருக்கியின்மேல் க்ரீஸ் யுத்தம் செய்ய ஆரம்பித்துவிடக்கூடும் என்று சொல்லப்படுகிறது. துருக்கி வாங்கும் பெரிய யுத்தக் கப்பலுக்கு ஸுல்டான் உஸ்மான் என்று பெயரிடப்படும்.

3-தேதி.

க்ரீஸ் கவர்ன்மெண்ட்.—க்ரீஸ் கவர்ன்மெண்டார் 30 கோடி ரூபாய் கடன் வாங்கப்போகிறார்கள்.

துருக்கி விஷயம்.—சிறு துருக்கிக் கட்சியைச் சேர்ந்த என்வர்பே யுத்த மந்த்ரியாக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

5-தேதி.

தென்னாப்ரிக்கா இந்தியர்கள்:—தென்னாப்ரிக்கா இந்தியர்களுடைய குறைகளைப்பற்றி ஆராய்ச்சி செய்ய தென்னாப்ரிக்காவுக்குப் போயிருக்கும் ரெவரண்ட் எப். ஸி. ஆண்ட்ரூஸூம் ரெவரண்ட் பியர்ஸனும் ஸைடன்ஹாமில் இந்தியர்களுடைய மீட்டிங் ஒன்றில் பேசினபோது தென்னாப்ரிககா இந்தியர்களைப்பற்றி இந்தியாவிலுள்ளவர்கள் கொண்டிருக்கும் அநுதாபத்தைப்பற்றிச் சொன்னார்கள். மிஸ்டர் ரபீந்த்ரநாத் டாகூர் தென்னாப்ரிக்கா இந்தியர்கள் விஷயமாய் ஸம்ஸ்க்ருதத்தில் பாடிக் கொடுத்த ஒரு பாட்டை ரெவரண்ட் ஸி. எப். ஆண்ட்ரூஸ் அந்த மீட்டிங்கில் பாடினார்.

பஞ்சமர்களுக்கு ஒரு ராத்ரி பாடசாலை:—கள்ளிக்கோட்டையில் ஒரு முனிஸிபல் கௌன்ஸிலராயிருக்கும் மிஸ்டர் பி. டி. ராமன் பஞ்சமர்களுக்காக கள்ளிக்கோட்டையில் ஒரு ராத்ரி பாடசாலை ஏற்படுத்தியிருக்கிறார். அது இன்றைய தினம் மலையாளம் அடிஷனல் மாஜிஸ்

ரேட் மிஸ்டர் வி பி. ராவால் திறந்து வைக்கப் பட்டது.

தென்னாப்ரிக்காவில் வேலையாட்களின் தொந்தரவு:—தென்னாப்ரிக்காவிலுள்ள நிலக்கரி சுரங்கவேலையாட்கள் சில ஸௌகர்யங்கள் செய்து கொடுக்க வேண்டு மென்று தங்களுடைய எஜமானர்களுடன் தகரார் செய்து வந்தார்கள். அநேகமாய் எல்லா தகரார்களும் தீர்ந்துவிட்டன. சம்பளம் உயர்த்த வதைப் பற்றிய தகரார் மாத்ரம் இன்னமு தீரவில்லை.

6-தேதி.

மங்கோலியா:—மங்கோலியாவுக்குப்பணமும் யுத்த ஆயுதங்களும் வேண்டியிருப்பதால் அவைகள் விஷயமாய் ரஷ்யா உதவி செய்ய வேண்டுமென்று கேட்பதற்காக மங்கோலியாவிலிருந்து ஒரு மிஷன் ஸமீபத்தில் போயிருந்தது. ரஷ்யா 4½ கோடி ரூபாய் வரையில் கடன் கொடுக்க ஸம்மதித்திருக்கிறது. யுத்த ஆயுதங்களும்கொடுத்து உதவ ஸம்மதித்திருக்கிறது. ஆனால் சீனாவோடு உள்ள எல்லா மனஸ்தாபமும் தீருகிறவரையில் ஆயுதங்கள் கொடுக்க முடியாதாம்.

7-தேதி.

தென்னாப்ரிக்கா இந்தியர்கள்:—ஜோகன்னஸ் பர்க்கில் ஒரு மீட்டிங்கில் ஜெனரல் போதா கவர்ன்மெண்டார் இந்தியர்களுக்கு இணங்கிப் போக முடியாதென்றும், வெளியிலிருந்து வேறு எவரும் தென்னாப்ரிக்கா இந்திய விஷயத்தில் ப்ரவேசிக்க கவர்ன்மெண்டார் ஸம்மதிக்க மாட்டார்கள் என்றும் சொன்னார்.

மாண்டலேயின் ஜலவஸதி:—மாண்டலேயில் இப்போது உபயோகிக்கப்பட்டு வரும் ஜலம் குடிப்பதற்கு ஏற்றதாயிராமையால் மாண்டலே முனிஸிபாலிடியார் ஐந்து ஆர்டீஷன் கிணறுகள் வெட்ட ஏற்பாடு செய்திருக்கிறார்கள். வெட்டின ஆர்டீஷன் கிணறுகளிலிருந்து வரும் ஜலம் மிகவும் சுத்தமாயும் குடிக்கத் தகுந்ததாயுமிருக்கிறதாம். இந்த ஜலந்தான் இனி பட்டணம் முழுவதும் குடிக்க உபயோகிக்கப் படும்.

தென்னாப்ரிக்கா வேலையாட்கள்:—ட்ரான்ஸ்வாலில் கவர்ன்மெண்டார் சில ரயில் வேலையாட்களை அதிகப்படியாயிருக்கிறார்கள் என்று வேலையிலிருந்து நீக்கி விட்டார்கள். மற்ற ரயில் வேலையாட்கள் அவர்களை மறுபடியும் வேலைக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கவர்ன்மெண்டாருக்குச் சொல்லியும் அவர்கள் கேட்காததனால் ரெயில் வேலைக்காரர்கள் வேலை செய்யாமல் நிற்கப் போகத் தீர்மானித்திருக்கிறார்கள்.

8-தேதி.

ஒரு தற்கொலை.—பங்காளத்தைச் சேர்ந்த மைமன் ஸிங்கில் பாபு மனமோகன் சௌதரி என்பவர் காலராவால் இறந்துபோகவே அவருடைய சிறு வயஸுள்ள மனைவி தன் தேகத்தில் கெரஸின் எண்ணெயை ஊற்றி தனது வஸ்த்ரங்களில் நெருப்பிட்டுக் கொண்டாள். அவளுடைய பந்துக்கள் சீக்ரம் நெருப்பை யவித்து விட்டார்கள். ஆயினும் அவள் தேகம் பலவிடங்களில் வெந்து போய் இறந்து போய் விட்டாள்.

தென்னாப்ரிக்கா வேலையாட்கள்.—ட்ரான்ஸ்வாலில் ரயில்வே வேலையாட்கள் வேலைக்குப் போகாமல் நின்று போவதாய்த் தீர்மானித்திருப்பதால் தொந்தரவுகள் உண்டாகக்கூடும் என்று கவர்ன்மெண்டார் ஸைன்யங்கள் சேர்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

9-தேதி.

சிவகிரி ஜமீன்தார்—திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள சிவகிரியின் ஜமீன்தார் இன்று இரவு சென்னையில் இறந்து போனார். அவர் சென்னை டைம்ஸ் பத்ரிகையின் ஸொந்தக்காரர்களில் ஒருவராயிருந்தார்.

ஸ்வாமி நித்யானந்த ஜீ.—ஆர்ய ஸமாஜத்தாரின் ப்ரபல தலைவர்களில் ஒருவராகிய ஸ்வாமி நித்யானந்த் ஜீ இன்று காலையில் இறந்து போனார். இவர் மதஸம்பந்தமான பல க்ரந்தங்கள் எழுதியிருக்கிறார்.

தென்னாப்ரிக்கா வேலையாட்கள்.—ட்ரான்ஸ்வாலில் ரெயில்வே ஸிப்பந்திகள் வேலைக்குப் போகாமல் நின்று விட்டார்கள். ஒரு ஸிப்பந்தி ரயில் வண்டிகளை வெடி குண்டால் நாசம் செய்ய யத்தனிக்கையில் கைது செய்யப்பட்டான்.

10-தேதி

தென்னாப்ரிக்கா வேலையாட்கள்:—ட்ரான்ஸ்வாலில் ரயில்வே ஸிப்பந்திகளின் தலைவர்கள் ராஜத்ரோகமான ப்ரஸங்கம் செய்ததற்காக அவர்களில் 7-பேரைக் கைது செய்திருக்கிறார்கள். சில நிலக்கரிச் சுரங்கங்கள் இன்று மூடப்பட்டன. கவர்ன்மெண்டார் கலகத்தை அடக்க ஸைன்யத்தைத் தருவித்திருக்கிறார்கள். ஸைன்யத்தைச் சேர்ந்தவர்கள் ரயில் வண்டிகளை ஓட்டுகிறார்கள்.

வேலை நிறுத்தத்தால் உணவுப் பொருள்களின் விலை உயர்ந்து விட்டது. இரண்டு இடங்களில் கலகக்காரர்கள் ரெயில் வண்டிகளை வெடிகுண்டுவைத்து நாசம் செய்ய முயன்றார்கள். ஒரு இடத்தில் எஞ்ஜின் நாசமாயிற்று.

ஜப்பானில் பஞ்சம்.—ஜப்பானிலுள்ள ஹொக்காய்டாவிலும் ஆமோரியிலும் சேர்ந்த பஞ்சத்தால் 90-லக்ஷம் ஜனங்கள் சோற்றுக்கு வழியில்லாமல் தவித்துக் கொண்டிருக்கிறதாகத் தெரியவருகிறது.

லார்ட் ஹார்டிஞ்ஜின் உருவச்சிலை:—பேஹார் மாகாணத்தின் முக்யபட்டணமாகிய பங்கிப்பூரின் பொது ஜனங்கள் கையொப்பமிட்டுப் பணம் சேர்த்து லார்ட் ஹார்டிஞ்ஜின் உருவச் சிலை யொன்று செய்து அவ்வூரில் வைக்கப் போகிறார்கள். அந்த உருவச்சிலையைச் செய்யப்போகிற மிஸ்டர் ஹாம்ப்டன் என்னும் சிற்பி, லார்ட் ஹார்டிஞ்ஜின் உருவக்குறிப்புகளை எடுத்துக் கொண்டு போவதற்காக சீக்ரம் இந்தியாவுக்கு வரப்போகிறார் என்று தெரிகிறது.

மிஸ்டர் காந்தி:—தென்னாப்ரிக்காவில் வெள்ளையர்கள் வேலை நிறுத்தம்செய்திருக்கிறபோது இந்தியர்களும் எதிர்க்காமல் எதிர்க்கும் உபாயத்தைத் தொடங்குவது கூடாதென்று மிஸ்டர் காந்தி தென்னாப்ரிக்கா இந்தியர்களுக்குத் தெரிவித்திருக்கிறார்.

சிதம்பரம் விவஸாய கான்பரேன்ஸ்,—சிதம்பரம் டிவிஷன் விவஸாயஸங்கம், பரங்கிப்பேட்டை, மன்னார்குடி, வ்ருத்தாசலம், திட்டைக்குடி ஆகிய இவைகளிலுள்ள கிளைச்சங்கங்கள், இவைகளின் வருஷாந்தக் கான்பரென்ஸ் சிதம்பரம் டிப்டி கலெக்டராபிஸில் கூடிற்று. விவஸாய டிரெக்டர் மிஸ்டர் சாட்விக் கான்பரென்ஸை திறந்து வைத்து அக்ராஸனம் வகித்தார்.

11-தேதி.

காலஞ்சென்ற மிஸ்டர் ஸுந்தர அய்யர்:—சென்னை தென்னிந்திய ஸங்கத்தின் மெம்பர்கள் இன்று ஸாயந்திரம் மைலாப்பூரில்கூடி காலஞ்சென்ற மிஸ்டர் ஜஸ்டிஸ் ஸுந்தரய்யருக்கு சாச்வதமான ஒரு ஞாபகச்சின்னம் ஏற்படுத்த வேண்டுமென்று தீர்மானித்தார்கள்.

12-தேதி.

ஒரு பொதுப் பள்ளிக்கூடம்:—இங்கிலண்டிலுள்ள பள்ளிக்கூடங்கள் எப்படி நடை பெறுகின்றனவோ அதே மாதிரி கல்கத்தாவில் ஒரு பள்ளிக்கூடம் ஸ்தாபித்து நடத்த கல்கத்தாவில் ஏற்பாடு நடந்து வருகிறது.

தென்னாப்ரிக்கா வேலையாட்கள்.—தென்னாப்ரிக்காவில் வேலை நிறுத்தம் பல விடங்களில் பரவியிருக்கிறது. வேலையாட்கள் யாதொரு தொந்தரவும் செய்யாமல் வேலைக்குப்போகாமல் நின்றிருக்கிறார்கள். ப்ரிட்டோரியாவில் 2000 கட்டிட வேலையாட்கள் பொதுவாய் எல்

லாவேலையாட்களும் வேலைக்குப் போகாமல் நிற்கவேண்டு மென்று தீர்மானித்தார்கள். ஜோஹன்னஸ் பர்க்கில் 9000 வேலையாட்கள் கூடின ஒரு மீட்டிங்கில் எல்லா வேலையாட்களும் வேலை நிறுத்தம் செய்யவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.

ஸர்.பி. ராபர்ட்ஸன்—தென் ஆப்ரிக்காகமிஷன் விசாரணையை கவனிக்கப்போன ஸர். பி. ராபர்ட்ஸன் இன்று டர்பனுக்குப்போய்ச் சேர்ந்தார்..

13-தேதி

தென்னாப்ரிக்கா வேலையாட்கள்:—ஜோஹன்ஸ்பர்க்கிலுள்ள கடைகளிலுள்ள வேலையாட்கள் குமாஸ்தாக்கள், அச்சுக்கோர்ப்பவர்கள் முதலியபல தொழில்களில் அமர்ந்த வேலையாட்கள் எல்லா வேலையாட்களும் வேலை செய்யாமல் நின்று விடவேண்டுமென்று தீர்மானித்திருக்கிறார்கள்.

ஜப்பானில் பூகம்பம்.—ஜப்பானைச் சேர்ந்த ஸாகுராஜிமா என்னும் தீவில் 10-தேதி முதல் கொண்டு 60 பூகம்பங்கள் நேர்ந்தனவாம். அங்குள்ள ஒரு எரிமலை நெருப்பைக்கக்க ஆரம்பித்து விட்டது. நெருப்புக் குழம்பு அநேக விடங்களுக்குப் பரவி விட்டது. அநேக க்ராமங்கள் நாசமாய் விட்டன. 70,000 ஜனங்கள் தங்கள் ஊரைவிட்டு ஓடி விட்டார்கள்.

ஸர். பி. ராபர்ட்ஸன்.—டர்பனில் வந்திறங்கிய ஸர். பி. ராபர்ட்ஸன் ரயில்வே வேலை நிறுத்தத்தால் ப்ரயாணம் தடையாகுமென்று எண்ணி ப்ரிட்டோரியாவுக்கு ப்ரயாணமாவதை நிறுத்திவைத்திருக்கிறார்.

தென்னாப்ரிக்கா வேலையாட்கள்.—தென்னாப்ரிக்காத் தொழிலாளிகளின் ஸங்கத்தார் வேலை நிறுத்தம் செய்து விட்டதாக வெளியிட்டதின் மேல்கவர்ன்மெண்டார், ட்ரான்ஸ்வால், ஆரஞ்ச் ப்ரீஸ்டேட், நேட்டால் ஆகிய இந்த நாடுகள் ரயில்வே யிடங்களில் யுத்தச்சட்டம் ப்ரகடனித்திருக்கிறார்கள். வேலையாட்களை அடக்க கவர்ன்மெண்டார் ஸைன்யங்களையெல்லாம் சேர்த்து விட்டார்கள். யுத்தச் சட்டத்தின்படி ரெயில்வே பொதுக்கட்டிடங்கள் ஆகிய இவைகளின் அருகில் இருக்கும் ஜனங்கள் ஸைன்யத்தார் உத்தரவிட்டால் கைகளைத் தூக்கிக்காட்ட வேண்டும். இல்லாவிட்டால் அவர்களை ஸைன்யத்தார்கள் சுட்டுக்கொன்று விடுவார்கள். சட்டத்துக்கு விரோதமான கார்யங்களுக்காக வெடிகுண்டு மருந்து வைத்திருப்பவர்களையும் கைது செய்து ஸைன்ய நீதி ஸ்தலத்தில் விசாரித்துக்கொலை செய்வார்கள்.

14-தேதி.

வைத்யர்களுடைய ரெஜிஸ்ட்ரேஷன்.—பெங்கால் கவர்ன்மெண்டார் வைத்யர்களை ரெஜிஸ்டர் செய்வதற்காக ஒரு சட்டம் ஏற்படுத்த உத்தேசித்து ஒரு மசோதா கொண்டு வந்திருப்பதை ஜனங்கள் ரொம்பவும் ஆக்ஷேபிப்பதால் அந்த மசோதாவைப்பற்றி தற்காலம் ஆலோசிக்காமல் அடுத்த மார்ச்மாஸம் வரையில் நிறுத்தி வைத்திருக்கிறார்கள்.

தென்னாப்ரிக்கா வேலையாட்கள்.—தென்னாப்ரிக்கா வேலையாட்கள் ரயில் வண்டிகளுக்கு வெடிகுண்டுகள் வைத்து வருகிறார்களாம்.

யுத்தச்சட்டத்தின்படி பொய்யானவும் பயமுண்டாக்கக் கூடியவுமான ஸமாசாரங்கள் வெளியாகக் கூடாதென்று தடுக்கப்பட்டிருக்கிறது.

வ்யாபாரிகள் ஸங்கத்தின் ஸெக்ரெட்டரியை கைது செய்ய, போலீஸார்கள் ட்ரேட்ஸ்ஹால் என்னும் கட்டிடத்துக்குள் நுழைய ப்ரயத்தனப்பட, வேலையாட்கள் அவர்களைத் தடுத்து விட்டார்கள்.

15-தேதி.

தென்னாப்ரிக்கா வேலையாட்களின் கலகம்.—வர்த்தக ஸங்கத்தின் கட்டிடத்திற்குள் இருந்த கலகக்காரர்கள் எல்லாரும் போலீஸாரிடம்

சரணம் அடைந்தார்கள். போலீஸார் அவர்களுடைய தலைவர்களைக் கைது செய்தார்கள்.

தென்னாப்ரிக்காவிலுள்ள மற்ற பாகங்களிலும் போலீஸார் கலகக்காரர்களின் தலைவர்களைக் கைது செய்திருக்கிறார்கள். இந்த வேலை நிறுத்த கலகம் சீக்ரம் அடங்கிவிடும் என்று சொல்லப்படுகிறது.

ஜப்பானில் எரிமலைவிபத்து.—ஸகுராஷிமார் எரிமலை நெருப்பைக் கக்கிக் கொண்டிருக்கிறது. அநேக ரயில்வேக்களும், வீடுகளும், ரஸ்தாக்களும் நெருப்பால் நாசமாயின. 7000 ஜனங்கள் வரையில் இன்ன கதியானார்கள் என்று தெரியவில்லையாம். ஒரு லக்ஷம் ஜனங்கள் தங்கியிருக்க வீடில்லாமல் தவிக்கிறார்களாம்.

இந்திய ஸையன்ஸ் காங்க்ரேஸ்.—இந்திய ஸையன்ஸ் காங்க்ரெஸ் என்று சொல்லப்படும் இந்திய சாஸ்த்ர காங்க்ரெஸ் இன்று கல்கத்தாவில் கூடிற்று. கல்கத்தா ஹைகோர்ட்டில் ஜட்ஜாயிருக்கும் ஆனரபிள் ஸர் அஷுடோஷ் முகர்ஜி ப்ரெஸிடெண்டாக இருந்தார்.

16-தேதி.

தென்னாப்ரிக்கா விஷயம்.—தென்னாப்ரிக்காவில் ஐரோப்பிய வேலைக்காரர்களின் கலகம் அநேகமாய் அடங்கிவிட்டது. ரெயில்வே வேலைக்காரர்கள் வேலைக்கு வரத்தொடங்கி விட்டார்கள்.

இந்திய ஸையன்ஸ் காங்க்ரேஸ்.—இந்திய ஸையன்ஸ் காங்க்ரெஸ் இன்று மறுபடியும் கூடிற்று. ப்ராணி சாஸ்த்ரம், பூதத்வ சாஸ்த்ரம், த்ரவ்ய சாஸ்த்ரம் ஆகிய இவைகளைப் பற்றி வ்யாஸங்கள் வாசிக்கப்பட்டன. ப்ரஸங்கங்களும் செய்யப்பட்டன.

17-தேதி.

கனடாவில் ஆசியவாஸிகள்.—ஆசிய வாஸிகள் கனடாவுக்குள் செல்வதைப் பற்றிய சட்டத்தை கனடா கவர்ன்மெண்டார் மாற்றியிருக்கிறார்கள். புதுச் சட்டத்தின்படி அந்த தேசத்துக்குள் போக விரும்புகிறவர்கள் தங்களுடைய தேசத்திலிருந்து நேராக ப்ராயணம் செய்திருக்கவேண்டும். ஒவ்வொருவரும் 600 ரூபாய் சொந்தமாக வைத்திருக்கவேண்டும்.

18-தேதி.

ஜப்பானில் எரிமலை விபத்து.—சில நாளாய் அடங்கியிருந்த எரிமலை மறுமடியும் நெருப்பைக் கக்க ஆரம்பித்துவிட்டது. முதல் விபத்தில் ஓடிப்போயிருந்து எரிமலை அடங்கினவுடன் தங்கள் ஊருக்கு வந்திருந்த அநேக ஜனங்கள் மறுபடியும் ஊரை விட்டோடி விட்டார்கள்.

19-தேதி.

பருத்தி வ்யாபாரம்.—கல்கத்தாவிலுள்ள ஸுமார் 150 துணி வ்யாபாரிகள் தங்களிடம் பீஸ் துணிகள் ஏராளமாய் கையிருப்பில் இருப்பதால் அவைகள் செலவாகும் வரையில் மான்செஸ்டரிலிருந்து பீஸ் துணி வரவழைப்பதில்லையென்று ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கிறார்கள்.

ஸர்-வில்லியம் லீவார்னர்.—இந்தியா கௌன்ஸிலில் மெம்பராயிருந்த ஸர் வில்லியம் லீவார்னர் இன்று இறந்து போய் விட்டார்.

எல்லா இந்திய ஸானிடரி கான்பரென்ஸ்:-எல்லா இந்திய ஸானிடரி கான்பரென்ஸ் என்னும் ஸுகாதாரக் கான்பரென்ஸ் இன்றையதினம் லக்னௌவில் கூடிற்று. வடிகால் வஸதி, ஸுகாதாரம், மலேரியா காய்ச்சல், பாடசாலைகளை வைத்யர்களைக்கொண்டு பரிசோதிப்பது, ஈக்களைத் தொலைக்கும் வழி முதலிய பல விஷயங்களைப் பற்றி கான்பரென்ஸில் ஆலோசித்தார்கள்.

கல்கத்தாவில் ஒரு கொலை:—கல்கத்தாவில் ஸி. ஐ. டி. இன்ஸ்பெக்டராயிருந்த ந்ருபேந்த்ர நாத் கோஸ் இன்று ஸாயந்த்ரம் கல்கத்தாவில் சுட்டுக்கொல்லப் பட்டார்.

20-தேதி.

உபாத்யர்களுக்கு ப்ராவிடண்ட் பண்ட்.—உபாத்யாயர்களுக்கு ப்ராவிடண்ட் பண்டு ஏற்படுத்தும் விஷயமாய் ஆலோசிப்பதற்காக டெல்லியில் ஒரு சிறு கமிட்டி கூடியிருக்கிறது. அதில் நான்கு பேர் மெம்பர்களா யிருக்கிறார்கள். சென்னையைச் சேர்ந்த மிஸ்டர் ப்ரணதார்த்தி ஹரய்யர் அந்தக் கமிட்டியில் ஒரு மெம்பராக இருக்கிறார்.

தென்னாப்ரிக்கா விஷயம்.—தென்னாப்ரிக்காவில் சுரங்கவேலைக்காரர்கள் இன்னம் வேலை செய்ய ஆரம்பிக்கவில்லை. இதனால் சுரங்கங்களுக்கு ஒவ்வொரு வாரமும் 15-லக்ஷம் ரூபாய் நஷ்டமாம்.

கல்கத்தா கொலை.—ந்ருபேந்த்ரநாத்கோஸை க்கொலை செய்தவர்கள் இரண்டு பேராம். அவர்கள் இருவரையும் போலீஸார் பிடித்து விட்டார்கள். அவர்களில் நீலகண்டராய் என்பவன் கல்கத்தாவிலுள்ள ஸெண்ட்ரல் காலேஜில் வாசித்துக்கொண்டிருந்தானும். இரண்டு வருஷம் எப். ஏ. பரீக்ஷைக்குப்போய்த் தவறினவனும்.

எல்லா இந்திய ஸானிடரி கான்பரேன்ஸ்.—எல்லா இந்திய ஸானிடரி கான்பரென்ஸ் இன்றையதினம் மறுபடியும் கூடிற்று. சிசு மரணம், பால் வ்யாபாரம், ஜலவஸதி முதலிய வைகளைப் பற்றி வ்யாஸங்கள் வாசிக்கப் பட்டன.

21-தேதி.

ஸர் கை ப்ளீட்வுட் வில்ஸன்.—கொஞ்சகாலத்துக்கு முன்னால் இந்தியா கவர்ன்மெண்ட் நிர்வாகஸபையில் பைனான்ஸ் மெம்பராக இருந்த ஸர் கைப்ளீட்வுட் வில்ஸன் ப்ரீவி கௌன்ஸில் ஒரு மெம்பராகச் சேர்த்துக் கொள்ளப் பட்டிருக்கிறார். இன்றையதினம் அவர் விண்ஸரில் ராஜஸன்னிதானத்தின் முன்பாக அந்த கௌன்ஸிலின் மெம்பராக ப்ரமாணிக்கம் செய்விக்கப்பட்டார்.

22-தேதி.

பாரிஸால் சதியாலோசனைக்கேஸ்.—பாரிஸால் ஸதியாலோசனைக் கேஸில் இன்றையதினம் தீர்ப்புச் சொல்லப்பட்டது. 12-குற்றவாளிகளில் சிலருக்கு 2-வருஷம் முதல் சிலருக்கு 12-வருஷம் வரையிலுமாக தீபாந்தர சிக்ஷை விதிக்கப்பட்டது.

தேன் ஆப்ரிக்கா இந்தியர்கள்.—மிஸ்டர் காந்திக்கும் தென் ஆப்ரிக்கா கவர்ன்மெண்டாருக்கும் நடந்து வந்த கடிதப்போக்கு வாத்துகள் இன்று வெளியிடப் பட்டிருக்கின்றன. கவர்ன்மெண்டார் வேலை நிறுத்தத்தில் எதிர்க்காமல் எதிர்க்கும் உபாயத்தைக் கைக்கொண்ட கைதிகளை விட்டு விடுவதாய்ச் சொல்லுகிறார்கள். இந்தியர்கள் கமிஷனின் சிபார்சுகள் வெளியாகும் வரையில் எதிர்க்காமல் எதிர்க்கும் உபாயத்தைக் கைக்கொள்ளாமலிருப்பதோடு இந்தியர்களுக்குச் செய்யப்பட்ட கொடுமைகளைப்பற்றி வற்புறுத்துவதில்லை யென்றும் மிஸ்டர் காந்தி சொல்லுகிறார்.

23-தேதி.

ப்ரிட்டிஷ் கொலம்பியா.—கனடாவைச் சேர்ந்த ப்ரிட்டிஷ் கொலம்பியா ப்ரதேசத்திலுள்ள பழத்தோட்டக்காரர்கள், ப்ரிட்டிஷ் கொலம்பியாவில் ஆசிய வாஸிகள் நிலங்கள் வாங்குவதும் குத்தகைக்கு எடுப்பதும் கூடாது என்று சட்டம் செய்யும்படி கவர்ன்மெண்டாரைக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

மிஸ்டர் அமீர் அலி.—ப்ரிவி கௌன்ஸிலின் ஜுடிஷ்யல் கமிட்டியில் ஒரு ஜட்ஜாயிருக்கும் மிஸ்டர் அமீர் அலி, இங்க்லண்டிலுள்ள இந்தியர்களுக்காக ஏற்பட்டிருக்கும் அட்வைஸரி கமிட்டியில் ஒரு மெம்பராயிருந்தார். தற்காலம் அவருக்கு வேலை அதிகமாயிருப்பதால்

அந்த அட்வைஸரிக் கமிட்டியிலிருந்து விலகிக் கொண்டுவிட்டார்.

24-தேதி.

பாபாபாரதி.—பாபா ப்ரேமானந்த பாரதி ஸ்வாமிகள் இன்று கல்கத்தாவில் நீர் ரோகத்தால் இறந்து போனார். அவர் 1857-ம் வருஷத்தில் பிறந்தவர். இவருக்கு அநேக சிஷ்யர்கள் இருக்கிறார்கள்.

திருச்சிஞப்பள்ளி ஜில்லா கான்பரேன்ஸ்:—திருச்சிஞப்பள்ளி ஜில்லா கான்பரென்ஸ் இன்றையதினம் குளித்தலையில் முதல் தடவையாகக்கூடிற்று. திவான் பஹதூர் எல்.ஏ. கோவிந்தராகவய்யர் ப்ரெஸிடெண்டாக இருந்து செய்த ப்ரஸங்கத்தில் கல்வி, கோவாபரேஷன், தாழ்ந்த வகுப்பார்களின் நிலைமை, ஸுகாதாரம், முதலிய விஷயங்களைப்பற்றிப் பேசினார்.

அமெரிக்கா ஐக்ய மாகாணங்களும் ஹிந்துக்களும்.—அமெரிக்கா ஐக்ய மாகாணங்களில் அன்ய தேசத்தார்கள் வருவதைக் குறித்து ப்ரெஸிடெண்ட் வில்ஸன் செய்திருக்கும் ப்ரேரணைகளைப்பற்றி அவர் ஒரு ஸ்டேட்மெண்ட் வெளியிட்டிருக்கிறார். தற்போது ஜப்பானியர்கள் அமெரிக்காவுக்குள் வருவதைக் குறித்துள்ள நிபந்தனைகளை மாற்றுவதாக உத்தேசமில்லையென்றும், முக்யமாய் ஹிந்துக்கள் அமெரிக்காவுக்குள் வாராமல் தடுப்பதற்காக வேண்டியே தாம் ப்ரேரணைகள் செய்திருப்பதாகவும் அந்த ஸ்டேட்மெண்டில் தெரிவித்திருக்கிறார்.

25-தேதி.

திருச்சிஞப்பள்ளி ஜில்லா கான்பரேன்ஸ்.—இன்றையதினம் திருச்சிஞப்பள்ளி ஜில்லா கான்பரென்ஸ் மறுபடியும் கூடி கண்ணம்பாடி அணைக்கட்டு, கல்வி, ரெயில்வே தொந்தரவுகள், நில விஷயம் முதலியவைகளைப் பற்றித் தீர்மானங்கள் செய்தது.

26-தேதி.

பப்ளிக் ஸர்விஸ் கமிஷன்—இன்றையதினம் பப்ளிக் ஸர்விஸ் கமிஷன் ஸெனேட்ஹௌஸில் கூடி விசாரணை செய்யத் தொடங்கிற்று.

SEASON.

கால ஸ்திதி.

Rainfall.

மழை.—1913ஷு ஏப்ரல்மீ 1உயிலிருந்து 1914ஷு ஜனவரிமீ 31உவரையில் பெய்த மழையின் அளவும், இந்தக் காலத்தில் சராசரியில் பெய்திருக்கவேண்டிய மழையின் அளவும், கீழே அங்குலம் ஸெண்டுகளாகக் குறிக்கப்பட்டிருக்கின்றன.

மழை பெய்த ஊரின் பெயர்.	பெய்த மழை அங்குலம்.	பெய்திருக்க வேண்டிய மழை அங்குலம்.
கோபால்பூர்	47·28	43·85
வால்டேர்	35·57	35·89
காக்கிஞடா	36·45	38·23
மசூலிப்பட்டணம்	31·50	39·32
நெல்லூர்	30·41	34·66
மதராஸ்	65·99	48·96
கூடலூர்	96·58	49·63
நாகபட்டணம்	85·06	52·46
பாம்பன்	41·26	35·67
கொழும்பு	64·50	78·05
திருவநந்தபுரம்	62·29	61·02
கொச்சி	97·01	110·03
கள்ளிக்கோட்டை	111·58	116·27
மங்களூர்	110·25	126·96
மெர்க்காரா	109·07	125·97
ஐதராபாத்	18·91	30·94
பல்லாரி	15·06	19·71
கர்நூல்	17·84	26·48
கடப்பை	23·75	31·43
ஹாஸ்ஸான்	25·63	35·54
பெங்களூர்	21·47	34·87
கொடைக்கானல்	49·95	57·76
உதகமண்டலம்	44·65	54·64
கோயம்புத்தூர்	45·21	21·30
வேலூர்	23·89	44·72
சேலம்	31·30	39·36
திருச்சிஞப்பள்ளி	35·25	31·73
புதுக்கோட்டை	38·15	32·42
மதுரை	16·18	33·31
திருநெல்வேலி	34·41	5·26

Calendar—பஞ்சாங்கம்

அம்ருதாதி. யோகம்.	வக்ன பாக்கி நா	வி	அகசு நா	வி	ஹிஜ உ	இங் உ	தமி உ	வா	47-ப்ரமாதீச ஹு மாசிமீ உத்தராயணம்-சிசிருது } கொல்லம்-1089 பஸலி-1323 { இங்கிலீஷ் - 1914 பிப்ரவரி-மார்ச்சுமீ } ஹிஜரி-1332 ஸபர்-ரப்பியுலவ்வல்.
சிம	4	20	29	5	16	12	1	வி	த்வி 25-44, பூர 34-48, அதி 7-12, உப 50-32, வணி 51-49, சே 2-49, ரா 21-54, கும்பசூன்யதி, சாந்திரத்விதீயாதி, விஷ்ணுபதிபுண்யகால, விருத்யர்ச்கம்
சிஅ		11		7	17	13	2	வெ	த்ரி 17-56, உத் 28-52, திரு 48-27, பவ 44-9, ரா 18-45, திதித்வய, சங்கடசதுர்த்தி
ம		2		8	18	14	3	ச	சது 10-28, ஹஸ் 93-20, சூல 39-36, சவு 36-57, ரா 12-31, பஞ்சமீதி
சி	3	54		10	19	15	4	ஞா	பஞ் 3-37, உப 54-1, சித் 18-30, சண் 31-21, கர 30-30, ரா 2-20, அவம
அம		45		11	20	16	5	தி	ஷப் 52-42, சுவா 14-34, விரு 23-54, பத் 25-1, தி 27-49
மசி		36		12	21	17	6	செ	அஷ் 48-58, விசா சக-45, த்ரு 17-22 பால 20-40, தி 21-23, சாலாஷ்டமீஏகாஷ்டகா
அசி		28		14	22	18	7	பு	நவ 46-29, அனு 10-1 வ்யா 11-47, தை 17-33, தி 22-53
பிசி		19		15	23	19	8	வி	தச 45-17, சேட் 9-38, ஹர் 7-13, வணி 15-43, ரா 0-33, மீனுடணம் 26-1
அபி		10		16	24	20	9	வெ	ஏகா 45-21, மூல 10-30, வஜ் 3-50, டவ 15-9, தி 6-24, ரா 5-56, ஸர்வ ஏகா
சி		2		18	25	21	10	ச	த்வா 46-41, பூரா 12-25, வ்ரீத் 1-6, உப 58-24, கவ 15-51, ரா 4-16, வியசிரா
அ	2	53		19	26	22	11	ஞா	த்ர 49-11, உரா 15-52, வரீ 58-47, கர 17-47, தி 26-31, பிரதோஷ, சிரவணஉப
அசி		44		20	27	23	12	தி	சசி 52-48, திருவோ 20-15, பரி 58-54, பத் 20-51, ரா 1-45, பஹுாசிவராத்ரி
சிம		35		22	28	24	13	செ	● 57-26, அவி 25-28, சிவ 59-47, சது 24-59, ரா 16-6, ஸர்வஆமா, த்வாபரயுகாதி, பிண்டபிதிரு, புஷ்சனா, அலப்யம், திலான்ன சிராத்தம்
சிஅ		27		24	29	25	14	பு	ட்ர 60-0, சத 32-0, சித் 60-0, கிம் 30-7, ரா 20-26, பால்குனசுத்த இஷ்டி திரிதினஸ்பிருச், இராமா
சி		18		25	30	26	15	வி	ப்ர 2-58, பூட் 39-5, சித் 1-17, டால 36-1, சந்திரதர்சன, திவாமா, சரிநான்
சிஅ		9		27	1	27	16	வெ	த்வி 9-11, உட் 46-42, சாத் 3-25, தை 42-30, தி 6-5, சரிநான்
பிசி		1		28	2	28	17	ச	த்ரி 15-51, ரே 54-33, சுப 5-51, வணி 49-15, தி 20-36, சதுர்த்தீதி, சதுர்த்தீவிரு, கரிநாள்
சி	1	52		29	3	1 மார்ச்சுமீ	18	ஞா	சது 22-35, அசு 60-0, சுப் 8-23, பவ 55-50, ரா 21-28, அதிதி
சி		43		31	4	2	19	தி	பஞ் 28-56, அசு 2-13, பிரா 10-42, டால 28-56, தி 29-9, பஞ்சமீதி
சி		35		33	5	3	20	செ	ஷஷ் 34-26, டர 9-15, மா 12-29, 1-48, ரா 12-53, வைசிரா, ஷஷ்டியுப, கிருத்திகை
அசி		26		34	6	4	21	பு	ஸப் 38-39, கிரு 15-14, வைவ 13-25, கர 6-42, ரா 28-53
உம		17		35	7	5	22	வி	அஷ் 41-10, ரோ 19-38, விஷ் 13-13, பத் 10-3, சே 2-27, ரா 50
சி		8		37	8	6	23	வெ	நவ 41-47, மிரு 22-30, பிரீ 11-37, பால 11-43, ரா 14-3, இராமா
சி		0		38	9	7	24	ச	தச 40-23, திரு 23-18, ஆயு 8-29, தை 11-19, ரா 23-19, திவாமா
சி	0	51		40	10	8	25	ஞா	ஏகா 36-59, புன 22-8, ஸெள 3-46, உப 53-45, வணி 8-55, ரா 11-40 ஸர்வ ஆமலகஏகா
சி		42		42	11	9	26	திங்	த்வா 31-47, பூச 19-7, அதி 49-52, பவ 4-34, உப 58-37, ரா 19-11, பிரதோஷ
சி		34		43	12	10	27	செ	த்ர 25-7, ஆய் 14-33, சுக 41-6, கர 51-16, ரா 12-3, திரயோதசீதி
சிஅ		25		44	13	11	28	பு	சசி 17-8, மக 8-42, திரு 31-28, பத் 42-52, தி 26-32, திதித்வடம், சதுர்த்தசீக்கு குதபவ்யாப்தி. ஹோளிகா, காமதகனம்
சிமசி		16		46	14	12	29	வி	○ 8-26, உப 50-55, பூர 2-1, உப 52-52, சூல 21-14, பால 33-56, தி 17-53, பிரதமாதி, பால்குன பகுள, இஷ்டி, மன்வாதி, அவம [நோன்பு
அசி	0	8	29	48	15	13	30	வெ	த்வி 50-14, ஹஸ் 47-42, சண் 10-47, தை 24-46, தி 13-21, மீனரவி, 51-56, கும்பத்விதீயாதி, காரண

		ச	செ
ர,பு சு,ரா	1-கும-சு 12-மீன-பு		
குரு	24-கும்-பு 25-மீன்-சு		கே